விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது

Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2042 மார்கழி 26 புதன்கிழமை (11.01.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 023

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

ராம்கோ RAMCO

SLS 107 தரம் கொண்டதும்

100 வீத சாதாரண போட்லான்

சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து


## இன அழிப்பு குற்றச்சாட்டு அடிப்படை அற்றவை



### பாதுகாப்பு செயலர் கோத்தபாய தெரிவிப்பு

(கொழும்பு), இலங்கை அரசாங்கத்தின் மீதான இன அழிப்புக் குற்றச்சாட்டுக்கள் அடிப்படை அற்றவை எனவும் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் பொதுமக்களுக்கு ஏற்பட்ட மரணங்கள், காயங்கள் தொடர்பான முழுமையான அறிக்கையை பாதுகாப்பு அமைச்சு வெளியிடும் எனவும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கூறியுள்ளார்.

எதிர்காலத்தில் இலங்கை முகங்கொடுக்கும் தேசிய பாதுகாப்பு சவால்கள் எனும் தொனிப்பொருளில் கொழும்பில் நேற்று நடைபெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)



மட்டக்களப்பு ஆரையம்பதி எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்னால் நிர்மாணிக்கப்பட்டிருந்த சுவாமி விவேகானந்தரின் முழு உருவச் சிலை இனந் தெரியாத நபர்களினால் உடைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் காரணமாக காத்தான்குடி ஆரையம்பதி எல்லையில் மக்கள் மத்தியில் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக காத்தான்குடி பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். நள்ளிரவு வேளையில் விஷமிகளால் இச்சம்பவம் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## முள்ளியவளை மாவீரர் இல்லம் படையினரால் முற்றாக அழிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, முள்ளிவளை மாவீரர் துயிலும் இல்லம் நேற்று படையினரால் முற்றாக அழிக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த மாவீரர் துயிலும் இல்ல வளாகத்தை நேற்றுக் காலை 8.30 மணி முதல் மாலை 5 மணிவரை படையினர் புல்டோசர், கனரக வாகனங்கள் மூலம் கல்லறைகளை உடைத்து எலும்புக்கூடுகளை தோண்டி எடுத்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ். மாவட்டத்தில் கோப்பாய், தென்மராட்சி, வடமராட்சி, தீவகம் மற்றும் கிளிநொச்சியில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களை அழித்த படையினர் எலும்புக் கூடுகளை அகற்றவில்லை.

எனினும் வன்னிப் பெரு நிலப்பரப்பில் முள்ளிவளை மாவீரர் துயிலும் இல்லத்தை முற்றாக அழித்து எலும்புக்கூடுகளை அகற்றியமை மக்கள் மத்தியில் பெரும் துயரத்தையும் குற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார். (பா)

## வடக்கு கல்வி அபிவிருத்தியில் பின்னடைவு ஏற்படும் நிலை

### ஆளுநரின் நடவடிக்கைக்கு கண்டனம்

வலிகாமம் கல்வி வலய கல்விப் பணிப்பாளர் ஆ.இராசேந்தரன், பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ். சுந்தரசிவம் ஆகியோரை ஆசிரியர் இடமாற்றச் சபையில் இருந்து நீக்கிய வடமாகாண ஆளுநரின் நடவடிக்கைக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் வன்மையான கண்டனம் தெரிவித்துள்ளது.

வலிகாமம் கல்வி வலயத்தின் கல்விப் பணிப்பாளர் ஆ. இராசேந்திரன், பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ். சுந்தரசிவம் ஆகிய இருவரும் வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறியின் உத்தரவுக்கு அமைய ஆசிரியர் இடமாற்றச் சபையில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறியின் இந்த நடவடிக்கையை வன்மையாகக் கண்டித்துள்ள இலங்கை ஆசிரியர் சங்கம், இச்செயலானது நிர்வாக நடைமுறைக்கு அப்பாற்பட்ட சர்வாதிகார நடைமுறை எனச் சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன் இதனை வட மாகாண ஆளுநர் உடனடியாக மீளப்பெற வேண்டும் என வலியுறுத்தியுள்ள (20ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பு எங்கு சென்றாலும் இறுதியில் எம்மிடமே வரவேண்டும்



### பதில் வெளிவிவகார அமைச்சர் கருத்து

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளிநாடுகளுக்கு விஜயங்களை மேற்கொண்டு எந்தத் தரப்புடன் பேச்சுவார்த்தை நடத்தினாலும் தீர்வு என்று வரும் போது இலங்கை அரசாங்கத்துடன்தான் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். இதுதான் யதார்த்தம். அரசுடன் கூட்டமைப்பு பேச்சு நடத்தினாலும் நடத்தா விட்டாலும் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை அரசாங்கம் வழங்கும் என்று பதில் வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேரா தெரிவித்தார்.

தென்னாபிரிக்காவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அங்கு பல்வேறு தரப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக தெரிவிக்கப்படுகின்றமை குறித்து விபரிக்கையிலேயே பதில் வெளிவிவகார அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, அரசாங்கத்தை பொறுத்தவரை வடக்கு கிழக்கு மாகாண (20ஆம் பக்கம் பார்க்க)

## வானை கடத்திச் சென்ற பெண் உட்பட அறுவர் கைது

(வவுனியா)

கொழும்பு செல்வதற்கு வாடகைக்கு வான் தேவை எனக் கூறி, வவுனியாவில் வானைக் கடத்தியதாக தெரிவிக்கப்படும் பெண் உட்பட 6 சந்தேகநபர்களை வவுனியாப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வவுனியா வேப்பங்குளம் பகுதியில் கடந்த மாதம் 23ஆம் திகதி குறித்த வான் சாரதியை அச்சுறுத்திவிட்டு வானைக் கடத்திச் சென்றதாக வான் உரிமையாளர் வவுனியாப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து விசாரணையை மேற்கொண்ட வவுனியா மாவட்ட விசேட குற்றவியல் தடுப்புப் (20ஆம் பக்கம் பார்க்க)

## தெரிவுக் குழுவுக்கு அப்பால் எதைப் பேசினாலும் பயனில்லை

### அமைச்சர் ஹெகலிய கூறுகிறார்

(கொழும்பு)

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு அப்பால் எவ்வளவு தான் பேசினாலும் அது பயனளிக்காது. எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானம் எடுக்கக்கூடிய நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கேற்று தமது கருத்துக்களை முன்வைக்க வேண்டும் என்று ஊடகத்துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு தமது பிரதிநிதிகளை நியமிக்காது போனால், அதனுடன் பேசிப் பயன் இல்லை என்று அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டதாக ஊடகம் ஒன்றில் வெளியான செய்தி தொடர்பாக கருத்து வெளியிட்ட அவர், 'அமைச்சரவையில் இது தொடர்பாக தீர்மானம் எதுவும் எடுக்கப் படவில்லையென்றாலும் இது பற்றிக் கலந்துரையாடப்பட்டது' என்று கூறியுள்ளார்.

இது தொடர்பில் (20ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமைகள் பேரவையில் கேள்வியெழுப்பினால் பதிலளிப்போம்

### அமைச்சர் மகிந்த சமரசிங்க




ஜெனிவாவில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகளின் மனிதவுரிமைப் பேரவையின் 19வது கூட்டத் தொடரில் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் கேள்விகள் எழுப்பப்பட்டால் அவற்றுக்கு பதிலளிக்க தயாராக இருப்பதாக பெருந் தோட்டக் கைத்தொழில் அமைச்சரும் மனித வுரிமைகள் தொடர்பான ஜனாதிபதியின் விசேட தூதுவருமான மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித வுரிமைப் பேரவையின் 19வது கூட்டத் தொடருக்கான தயார் (20ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

'பிரயோக ஆங்கிலம்' : ஆசிரியர் : சண்முகம் முத்துலிங்கம்
YAALH ENGLISH ACADEMY : 077 3212711
வகுப்பிட அனுசரணை : புதிய உயர்கல்லூரி : யாழ்நகர்
(7239)



மக்கள் வங்கி சுன்னாகம் கிளையில் சிசு உதான சிறுவர் சேமிப்புக் கணக்கினைப் பேணிவரும் மாணவர்களில் ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்ற மாணவன் செல்வன் மதிவதனன் மேருஜனுக்கு வங்கியின் முகாமையாளர் பரிசினை வழங்குவதனையும் அருகில் ரி. சிவகுமாரன், வங்கி உத்தியோகத்தர்கள் காணப்படுவதை படத்தில் காணலாம்.

## உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் மரணித்தவர்களுக்கு நினைவு அஞ்சலி

### படையினர் இடையூறு

(யாழ்ப்பாணம்)

உலக தமிழாராய்ச்சி மாநாட்டில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் இராணுவத்தினர் நடந்து கொண்டனர் என குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

நான்காவது உலக தமிழாராய்ச்சி மாநாட்டில் உயிரிழந்த பத்து பேருக்கும் அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நேற்று யாழ்.வீரசிங்க மண்டபத்திற்கு முன்பாக அமைக்கப்பட்டிருந்த நினைவுத் தூபியில் இடம்பெற்றது.

இந்த அஞ்சலி செலுத்தும் நிகழ்வில் இலங்கை தமிழரசுக்கட்சியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், புளொட் இயக்கத்தின் தலைவர் த.சித்தார்த்தன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், யாழ்.மாநகர சபையின் முன்னாள் ஆணையாளரும் தமிழரசுக்கட்சியின் உபசெயலாளருமான சீ.வீ.கே.சிவஞானம், பேராசிரியர்களான சி.க.சிற்றம்பலம், எஸ்.சிவச்சந்திரன், யாழ்.மாநகரசபை எதிர்க்கட்சி உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட அரசியல் பிரமுகர்கள் உயிர் இழந்தவர்கள் தொடர்பாக நினைவுரை ஆற்றும் போது மிகவும் ஒலி எழுப்பியவாறு அங்கிருந்தவர்களை மன வேதனைக்கு உட்படுத்தும் விதமாக அப்பகுதியில் துப்புரவு பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த கனரக வாகனம் நினைவுத் தூபிக்கு அருகாமையாக வந்து சென்றுகொண்டிருந்தது.

குறித்த வாகனத்தின் சாரதி மற்றும் அவருக்கு உதவியாக வாகனத்திலிருந்த இருவரும் இராணுவச் சீருடையில் இருந்தனர்.

இதேவேளை நினைவுத் தூபியின் அருகில் அரசியல் பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் அஞ்சலி செலுத்தும் போது புகைப்படங்கள் எடுத்தவாறு பல இராணுவ மற்றும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் நடமாடினார்கள்.

நினைவுரைகள் சுமார் 2 மணித்தியாலம் நடைபெற்றது. அதுவரை நினைவுத்தூபியை அண்மித்த பகுதியிலேயே துப்புரவுப்பணியில் ஈடுபட்ட வாகனம் பயணித்தது. (பா-4,6)

- தபால் மூலம் -
ஆறு மாத கால டிப்ளோமா
Course Length - Six Month
22
Jan.2012 To June2012
தமிழ் மொழி மூலம்

| | |
|---|---|
| Dip. in Psychology | - உளவியல் டிப்ளோமா |
| Dip. in Office Administration | - காரியாலய நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Human Resources Management | - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Civil Engineering | - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா |
| Dip. in Business Management | - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Banking Management | - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Sales & Marketing Management | - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி. |
| Dip. in Health & Hospital Management | - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி. |
| Dip. in Nursing Administration | - தாதியர் நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Educational Management | - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Montessori | - மொண்டிசூரி டிப்ளோமா |

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்
• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம் • வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு • ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile: 0777 140 844, 071 803 48 48
விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி
Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)
ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1ST FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848
விண்ணப்ப முடிவுத் திகதி : 28.01.2012

# 'மக்களின் விடிவுக்காக உயிர்நீத்தவர்களை நாம் எப்போதும் மறந்துவிடக் கூடாது'

## மாவை எம்.பி. தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மண்ணின் விடிவிற்காகவும் மக்களின் விடிவிற்காகவும் தமது உயிர்களை இழந்தவர்களை நாம் என்றும் மறந்து விடக்கூடாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் உயிர் நீத்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நேற்று யாழ். வீரசிங்கம் மண்டபத்திற்கு முன்பாக உள்ள நினைவுத் தூபியில் இடம்பெற்றது.

இதில் கலந்த கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார், அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

தமிழர்களின் வரலாற்றில் இன்று (நேற்று) மிகவும் முக்கியமான நாள். 4வது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் நாள்.

தமிழினத்தை எழுச்சி பெறவைத்து எதிர்காலத்தில் தமிழர்கள் நிம்மதியாக வாழ வேண்டும் என்பதற்காக உழைத்தவர்கள் பலியாக்கப்பட்ட நாள்.

தமிழினம் இருக்கும் மட்டும் எமது இனத்திற்காக இறந்தவர்கள் நினைவு கூரப்பட வேண்டியவர்கள், நினைவு கூரப்படுவார்கள்.

1974 ஆம் ஆண்டு ஜனவரி 10ஆம் திகதி 4வது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு இந்த வீரசிங்க மண்டபத்திலும் அதனைச் சூழ உள்ள பகுதிகளிலும் சுமார் 50 ஆயிரம் பேருக்கு மேல் திரண்டு இருந்து நடத்திக்கொண்டிருந்த போது அரசின் ஆதரவாளர்கள் மாநாட்டை நடத்த விடக்கூடாது என்பதற்காக பல முயற்சிகளை எடுத்த போதும் அவற்றை எல்லாம் மீறி அரசிற்கு அடிபணியாது மாநாட்டைத் தொடர்ந்து நடத்துவதற்கு பேராசிரியர் சு.வித்தியானந்தன் மற்றும் தமிழரசுக்கட்சியின் தலைவர் அமிர்தலிங்கம் அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து நடத்தினார்கள்.

இதனைப் பொறுத்துக்கொள்ள முடியாத அரசாங்கத்தின் ஆதரவாளர்கள் எத்தனையோ ஆயிரம் பொதுமக்கள் சூழ்ந்திருந்த போது அவர்கள் பலியாவார்கள் என்று சிறிதளவேனும் அச்சப்படாமல் மின்சாரக்கம்பிகளுக்கு துப்பாக்கி வேட்டுக்களை பிரயோகித்து மின்சாரக் கம்பிகள் அங்கு கூடியிருந்த பொது மக்கள் மேல் விழுந்தது. அந்த அனர்த்தத்தின்போது இந்த 10 உயிர்களும் பிரிந்ததை எவரும் மறந்துவிட முடியாது.

அந்த அனர்த்தத்திற்கான விசாரணைகள் உரிய முறையில் இடம்பெறவில்லை. மாறாக அந்தச் சம்பவத்திற்கு காரணமாக இருந்த பொலிஸ் அதிகாரிக்கு பதவி உயர்வே வழங்கப்பட்டது.

இதனை விட இந்த நாட்டில் எத்தனையோ கொடூரங்கள், இனக்கலவரங்கள் இடம் பெற்றுள்ளது. அத்தகைய சம்பவங்களில் இறந்தவர்களை நினைவு கூரவேண்டிய கடப்பாடு தமிழ் மக்களுக்கு உண்டு.

எமது இனத்தின் மொழி, கலை, கலாசாரம் என்பவற்றை பிரதிபலிக்கும் வகையில் நடைபெற்ற மாநாட்டில் யாருமே நினைத்து பாராத அளவிற்கு இந்த அனர்த்தம் இடம்பெற்றது.

நாம் எமது மொழியைக் காப்பாற்றுவதற்கு கலை, கலாசாரத்தை காப்பாற்று வதற்கு பாடுபட வேண்டும்.

இதனைப்பாதுகாக்க கூடாது என்பதற்காகவும் எமது மொழி தொடர்பாக ஆய்வுகள் நடத்தக் கூடாது என்பதற்காகவும் இந்தப்படு கொலைகளைச் செய்திருந்தனர்.

மாநாட்டில் உயிரிழந்தவர்கள் மட்டுமில்லாமல் எமது மண்ணின் விடிவிற்காகவும் எமது மக்களின் விடிவிற்காகவும் தங்களுடைய உயிர்களை இழந்தவர்களை நாம் என்றும் மறந்து விடக் கூடாது.

பௌத்த மேலாதிக்கமும் ஒற்றையாட்சியும் கொண்ட சிங்களவர்களின் அடக்குமுறைகளே இந்த மாநாட்டில் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றது.

சிங்கள பௌத்தர்கள் இந்த நாட்டை தாமே ஆள வேண்டும் என்று நினைக்கின்றனர்.

எமது தமிழினத்தை நாமே ஆளக்கூடிய நிலை இந்த நாட்டில் ஏற்படுத்தப்பட வேண்டும்.

எனவே மண்ணின் விடிவிற்காகவும் மக்களின் விடிவிற்காகவும் தமது உயிர்களை இழந்தவர்களை நாம் என்றும் மறந்து விடாது நினைவு கூரவேண்டிய கடப்பாட்டில் உள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (பா-4,6)

## பாடசாலைகளுக்கான நன்கொடை குறித்து புதிய நடைமுறை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பாடசாலைகளுக்கான நிதியுதவிகள் மற்றும் நன்கொடைகள் தொடர்பில் வடக்கு மாகாண கல்வி அமைச்சு நடைமுறை ஒன்றை அமுல்படுத்தும் என அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது,

பாடசாலைகளுக்கான கட்டிடங்கள், தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் என்பன கல்வி அமைச்சு, அரச சார்பற்ற நிறுவனங்கள், பாடசாலை பழைய மாணவர் சங்கம், பாடசாலை நலன்விரும்பிகள் மற்றும் பொது அமைப்புக்கள் மூலமாக வழங்கப்பட்டு வருகின்றன.

இப் பொருட்கள் மற்றும் நிதியுதவிகள் தொடர்பாக முறையான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு அவை பொருட் கணக்கெடுப்பிற்கு உள்ளடக்கப்பட வேண்டியிருப்பதுடன், பாடசாலை நிருவாக மாற்றம் நிகழும் போது இவற்றை புதிய நிர்வாகத் திடம் முறையாகக் கையளிக்க வேண்டிய தேவையுள்ளது.

சில பாடசாலைகளுக்கு பழைய மாணவர் சங்கம் மற்றும் பாடசாலை நலன்விரும்பிகள் மூலமாக கூடுதலான நிதியுதவிகள் கிடைக்கப் பெறுகின்றன.

வேறு சில பாடசாலைகளுக்கு குறிப்பாக கஷ்ட பிரதேசத்தில் உள்ள பாடசாலைகள் பெரும் வளப்பற்றாக் குறையை எதிர் நோக்குகின்றன.

மத்திய, மாகாண கல்வி அமைச்சுக்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பொது அமைப்புகளின் நிதியுதவியினை தேவைக்கேற்ப பாடசாலைகளுக்குபகிர்ந்தளிக்கவேண்டிய கடப்பாடு மாகாணக்கல்வி அமைச்சுக்குள்ளது.

எனவே இது தொடர்பான நடைமுறை வடமாகாண கல்வி அமைச்சினால் பின்பற்றப்படும். இவ்வாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்துள்ளார். (பா)

## நிறுவனத் தலைவர்களிற்கான கண்காணிப்புக் குழுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சுகாதார திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களிற்கும், அரச சார்பற்ற நிறுவனங்களிற்குமான ஜனவரி மாதத்துக்குரிய மாதாந்த மாவட்டக் கண்காணிப்புக் குழுக் கூட்டம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எனவே இதில் சம்பந்தப்பட்டவர்கள் தவறாது சமுகமளிக்குமாறு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் கேட்டுள்ளார். (பா)

## முல்லைத்தீவு மாவட்ட கல்வி அபிவிருத்திக் கூட்டம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட கல்வி அபிவிருத்தி தொடர்பாகவும் அம் மாவட்ட பாடசாலைகளின் தேவைகள், ஆளணிப்பற்றாக்குறை, கல்வி அபிவிருத்தி என்பன தொடர்பான முக்கிய கலந்துரையாடல் எதிர்வரும் 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் வேதநாயகம், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், வடமாகாண கல்விப்பணிப்பாளர் பவிக்னேஸ்வரன் மற்றும் மாகாண கல்வி அமைச்சு, மாகாணக்கல்வித்திணைக்களம் என்பவற்றின் முக்கிய அதிகாரிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இக் கூட்டத்திற்கு முல்லைத்தீவு மாவட்ட வலயக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக்கல்வி பணிப்பாளர்கள் மற்றும் ஏனைய கல்வி அதிகாரிகள் உட்பட சகல பாடசாலைகளின் அதிபர்களையும் பாடசாலைக்கான தேவைகள் தொடர்பான அறிக்கையுடன் தவறாது கலந்து கொள்ளுமாறு வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் அறிவித்துள்ளார். (பா)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தவிர்க்க முடியாத காரணத்தினால் இடைநிறுத்தப்பட்ட யாழ்.நகர் மேற்கு ஜே/73 கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட மக்கள் பங்கேற்புடனான கிராம அபிவிருத்தி திட்டமிடல் கூட்டம் நாளை வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு ஓ.எல்.ஆர். கிறிஸ்தவ தேவாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எனவே இக் கூட்டத்தில் பங்கு பற்றி தங்கள் பிரிவின் கிராம அபிவிருத்திக்கான ஒத்துழைப்பை வழங்குமாறு யாழ்.மாநகரசபை முதல்வர் கேட்டுள்ளார். (பா)

## பண்ணை பஸ் தரிப்பிடம் தற்காலிகமாக இடம் மாறுகிறது

(யாழ்ப்பாணம்)

பண்ணை வீதியிலுள்ள பஸ் தரிப்பிடம் தற்காலிகமாக வீரசிங்கம் மண்டபத்திற்கு அருகாமையில் உள்ள இடத்தில் இயங்கவுள்ளது.

யாழ்.கோட்டைக்கு சொந்த மான காணியில் அமைந்துள்ள குறிப்பிட்ட பஸ்நிலையத்தினை இடமாற்றக்கோரி தொல்லியற் திணைக்களத்தினால் கோரப்பட்டதனைத் தொடர்ந்து யாழ்.வீரசிங்கம் மண்டபத்திற்கு அருகாமையில் உள்ள இடம் தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றது.

வெளிமாவட்டங்களுக்கு சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்கள் இவ்விடத்திலிருந்து புறப்படுகின்றன.

இப் பகுதியில் முன்னர் யாழ். மாநகரசபையினால் நடைபாதை வியாபாரிகளுக்கான கொட்டகை அமைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (பா-4)

சிங்கள வகுப்புகள்
பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தொழில் புரிபவர்கள் மற்றும் மொழியை கற்க ஆர்வமுள்ள அனைவருக்குமான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. பேச, எழுத, வாசிக்க அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களினால் கற்பித்துக் கொடுக்கப்படும்.
NORTH LEAD
328 A, Stanly Road, Jaffna. (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)
Tel: 222 4459, 0772533390, Fax: 222 4460

## இன்று ஒரு தகவல்

# தொண்டு

ஒரு ஊரிலே பாதிரியார் ஒருவர் இருந்தார். அவரது வாழ்க்கை மிகவும் சந்தோஷமாக இருந்தது.

ஒருநாள் அவர், மடத்து சமையலறையிலே பாத்திரங்களைக் கழுவி துலக்கி சுத்தம் செய்து கொண்டிருந்தார்.

அவ்வேளையிலே ஒரு தேவதூதன் அவர் முன்பு வந்து நின்றார். இதை அவர் நிமிர்ந்து பார்த்தார்.

"ஆண்டவர் என்னை உங்களிடம் அனுப்பியுள்ளார். பரலோகத்திலே வாசம் செய்வதற்கு உங்களுக்கு நேரம் வந்துவிட்டது" என்றார்.

ஆண்டவருக்கு என்னுடைய ஞாபகம் வந்ததற்கு நன்றி. ஆனாலும்... இப்போது இங்கே நீயே பார்... எவ்வளவு பாத்திரங்கள் இருக்கிறது. இவையனைத்தையும் நான் சுத்தம் செய்ய வேண்டி உள்ளது. நான் நன்றி கெட்டவனாக இருக்க விரும்பவில்லை. இந்தப் பணியை முடிக்கிற வரைக்கும் என் பரலோக வாழ்வைத் தள்ளி வைக்க முடியுமா? நீ என்ன நினைக்கிறாய்? என்று கேட்டார்.

தேவதூதன் தனக்கே உரிய விவேகத்தோடு அன்போடு பாதிரியாரைப் பார்த்தான்.

"சரி... என்ன செய்யாலாமென்பதை பின்னர் சொல்கிறேன்" என்று கூறிவிட்டு புறப்பட்டுச் சென்றார்.

ஒருநாள் அந்தப் பாதிரியார் தோட்டத்திலேயுள்ள களைகளையெல்லாம் கொத்தியாலே கொத்தி களையெடுத்துக் கொண்டிருந்தார். அந்தச் சமயத்திலே இந்த தேவதூதன் மறுபடியும் அவர் முன்னால் வந்து நின்றார். மீண்டும் பாதிரியார் பார்த்தார்.

"இதோ பார்! இந்தத் தோட்டம் எவ்வளவு களைகளைப் பிடித்துக் கொண்டிருக்கிறது. பரலோகம் சிறிய காலம் எனக்காகப் பொறுத்திருக்கலாம் என்ன நீ நினைக்கிறாய்?" என்று கேட்டார்.

தேவதூதன் சிரித்துக் கொண்டே மறுபடியும் மறைந்து விட்டார். மறுபடியும் அவர் களையெடுக்கிறது... தானியக் களஞ்சியத்திற்கு வர்ணம் பூசுவது இவை மாதிரியான வேலைகளில் ஈடுபட்டார்.

இன்னொரு நாள் ஒரு வைத்தியசாலையிலே நோயாளிகளை கவனிக்கிற வேலையிலே அந்தப் பாதிரியார் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். ஒரு நோயாளியின் தாகத்திற்கு தண்ணீர் வழங்கிக் கொண்டு நிமிர்ந்து பார்க்கும்போது தேவதூதன் மறுபடியும் அவர் முன்னால் தோன்றினார்.

இந்தத் தடவை பாதிரியார் தன்னலமற்றவராக... பேரன்பைக் காட்டக்கூடிய வகையிலே தனது இரு கைகளையும் உயர்த்தியபடி... தேவதூதனின் கவனத்தை பிணியால் வாடக்கூடிய நோயாளிகளின் பக்கம் திரும்பினார்.

தேவதூதன் ஒன்றுமே சொல்லவில்லை. மறைந்து விட்டார்.

அன்றைய தினம் பொழுது சாய ஆரம்பித்து விட்டது. பாதிரியார் தன்னு டைய அறைக்குச் சென்று இளைப்பாறினார். யோசனை செய்து பார்த்தார். தேவதூதனையும் தேவதூதனின் விருப்பத்தை பல நாட்கள் தள்ளிப் போட்டுக் கொண்டு வந்ததையும் நினைத்துப் பார்த்தார். திடீரென்று தான் முதுமையடைவதையும் சோர்ந்து போவதையும் உணர்ந்தார். உடனே ஆண்டவரை நினைத்தார். "ஆண்டவரே! உமது தூதனை மறுபடியும் என்னிடம் அனுப்பினால் நான் சந்திப்பதற்கு ஆவலாக இருக்கிறேன்" என்று கூறி முடிப்பதற்குள் தேவதூதன் பக்கத்திலே வந்து நின்றார்.

பாதிரியார் நிமிர்ந்து பார்த்தார்.

"நீ இப்போதே என்னை அழைத்துக் கொண்டு போக விரும்பினால், நான் பரலோகத்திற்கு உன்னுடன் வரத் தயாராக இருக்கிறேன்" என்றார்.

தேவதூதன்... அந்தப் பாதிரியாரை அன்போடும் விவேகத்தோடும் பார்த்து,

"நீங்கள் இதுவரைக்கும் வேறு எங்கே இருந்ததாக நினைக்கிறீர்கள்" என்றார்.

தொண்டு செய்வதைவிட பெரிய செயல் வேறு எதுவுமே கிடையாது. அது எமது மனதிற்கு சந்தோஷத்தையே கொடுக்கும்.

இந்தக் காலத்தில் நாம் தொண்டு செய்ய வேண்டுமென்று நினைத்தால், அதை எல்லோரும் ஒரு மாதிரியாக சுற்றி நின்று வேடிக்கை பார்க்க ஆரம்பித்து விடுவார்கள்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபட அனுமதிக்குமாறு கொக்கிளாய் மீனவர்கள் கோரிக்கை

(கொக்குளாய்)

மீள்குடியமர அனுமதிக்கப்பட்ட பொழுதும் ஆழ்கடல் மீன்பிடித் தொழிலுக்கு அனுமதிக்கப்படாமையினால் தமது வாழ்வாதாரம் கேள்விக்குறியாகியுள்ளது என கொக்கிளாய் கிழக்கு மற்றும் மேற்குப் பகுதி மக்கள் விசனம் வெளியிடுகின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, கொக்கிளாய் கிழக்கு, மேற்கு மற்றும் கருநாட்டுக் கேணி ஆகிய பகுதிகளில் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ள பொழுதும் இந்தப் பகுதி மக்களை ஆழ்கடல் மீன்பிடித் தொழிலுக்கு இன்னமும் அனுமதிக்கப்படவில்லை.

இதனால் இவர்கள் கடல் நீரேரியில் மீன், இறால் மற்றும் நண்டு போன்றவற்றினைப் பிடித்தே தமது ஜீவனோபாயத் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றனர்.

இந்த நிலையில் கடந்த 1984 ஆம் ஆண்டுக்கு முன்பு இவர்கள் மீன்பிடிக்கப் பயன்படுத்திய ஆழ்கடல் மீன்பிடி இறங்குதுறைகளை தற்பொழுது முகத்துவாரப் பகுதியில் தங்கியிருந்து சிங்கள மீனவர்கள் மீன்பிடிக்க பயன்படுத்தி வருகின்றனர்.

தமிழ் மீனவர்களின் இறங்கு துறைகளை பயன்படுத்தி சிங்கள மீனவர்களை மீன்பிடிக்க அனுமதித்துள்ள கடற்படையினர் தம்மை ஆழ்கடல் மீன்பிடிக்கு அனுமதிக்கவில்லை என இந்த மக்களின் மீனவர் பிரதிநிதிகள் கவலை வெளியிடுகின்றனர்.

இதேவேளை, கடல் நீரேரிப்பகுதியிலும் தமது சிறு தொழில்களைச் சேதப்படுத்தும் வகையில் சிங்கள மீனவர்கள் நடந்து கொள்வதாகவும் இயந்திரப் படகுகளின் உதவியுடன் தமது தொழில்களை அழித்து வருவதாகவும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர். மீளக்குடியமர்த்திய தமக்கு இன்னமும் கடற்தொழில் மீன்பிடி உபகரணங்கள் எதுவும் வழங்கப்படவில்லை என குற்றம் சுமத்தியள்ளனர்.

மேலும் இந்த ஆண்டிலாவது கடந்த 1984 ஆம் ஆண்டு தொடக்கம் தமது பயன்பாட்டில் இருந்த மீன்பிடித்துறைகளைப் பயன்படுத்தி பெருங்கடலில் மீன்பிடிக்க அனுமதிக்குமாறு அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கின்றனர்.(அ-6-3)

# நடைபாதை வியாபாரிகள் மீது பொலிஸார் திடீர் பாய்ச்சல்

நடைபாதைகளில் வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்த கடை உரிமையாளர்கள் மீது பொலிஸார் திடீர் பாய்ச்சல் மேற்கொண்டனர்.

பொதுமக்களின் போக்குவரத்துக்கு இடையூறாக வியாபார நடவடிக்கைக்ளை மேற்கொண்டு வந்த கடைகளின் பொருட்களை யாழ்.மாநகர சபையும் பொலிஸாரும் இணைந்து நேற்று அள்ளிச் சென்றனர். வணிகர் கழகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற, பொலிஸார் பணிகளுக்கான சந்திப்பின்போது இவ்வாறான கடைகள் அகற்றப்பட வேண்டும் என பொலிஸாரால் கூறப்பட்டது.

அதனைத் தொடர்ந்து நேற்று யாழ்.பொலிஸார் நடைபாதைகளில் இடைஞ்சலாக இருந்த அனைத்து கடைப் பொருட்களினையும் பறிமுதல் செய்து கொண்டனர். இவ்வாறான வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் தொடர்ந்தும் இனி கைது செய்யப்படுவார்கள் எனபொலிஸார் தெரிவித்தனர். (அ-4)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 60 | 110 |
| உருளைக்கிழங்கு | 55 | 55-100 | 60 |
| பச்சைமிளகாய் | 150 | 180 | 150 |
| தக்காளி | 90-100 | 70 | 170 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 30 | 35 |
| கோவா | 80 | 80 | 80 |
| கரட் | 80 | 120 | 90 |
| பூசணி | 60 | 60 | 60 |
| புடோல் | 60 | 100 | 70 |
| வாழைக்காய் | 40 | 50 | 45 |
| சின்ன வெங்காயம் | 50-80 | 80 | 70 |
| பெரிய வெங்காயம் | 65 | 90 | 60 |
| பாகற்காய் | -- | 160 | 120 |
| வெண்டிக்காய் | 70 | 90 | 90 |
| கருணைக் கிழங்கு | -- | 70 | 70 |
| பயற்றங்காய் | 100 | 140 | 150 |
| லீக்ஸ் | 70 | 90 | 60 |
| பீற்றூட் | -- | 120 | 100 |
| கறிமிளகாய் | 180 | 240 | 170 |
| முருங்கைக்காய் | -- | -- | -- |
| போஞ்சி | 90 | 110 | 90 |
| கத்தரிதம்புள்ள | 40 | 50 | 60 |
| கீரை - 1 பிடி | 15 | 25 | 30 |
| தேசிக்காய் | 60-70 | 60 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 15-25 | 25 | 25 |

## இராசி பலன்

11.01.2012
(மார்கழி 26,புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.33 மணிக்கு
துதியை பிற்பகல் 12.56 மணிவரை
ஆய்லியம் பின்னிரவு 6.02 மணிவரை
இராகுகாலம் 12.33-2.03 மணிவரை
சுபநேரம் 5.03-6.33 மணிவரை
கெற்போட்ட முடிவு.

**மேடம்** வெளியூர்த் தொடர்புகள் விரிவடையும், பெற்றோர் ஆதரவால் பெருமைகள் காண்பீர்கள், போக்குவரத்தில் அலைச்சல்கள் ஏற்பட்டாலும் சிறு ஆதாயமும் பெறுவீர்கள், தொலைபேசி வழித் தகவல்கள் மகிழ்ச்சி தரும்.

**இடபம்** இளைய சகோதர வழியில் இனிய சம்பவங்கள் நடைபெறலாம், குடும்பத்தினர் பாராட்டும் வகையிலான காரியங்களைச் செய்து முடிப்பீர்கள், நீண்ட நாளைய பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரும்.

**மிதுனம்** தனவரவு திருப்திகரமாக அமையும், இனிய அனுபவங்கள் ஏற்படலாம், சுப காரியப் பேச்சுக்கள் முடிவாகி மன நிம்மதியைக் கொடுக்கும், புதிய பொருட் சேர்க்கையுண்டு, அரசு வழி அனுகூலமுண்டு.

**கடகம்** சாமர்த்தியமாகப் பேசி காரியங்களைச் சாதிப்பீர்கள், தொழில் நலன் கருதி அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள், பயணங்களால் பலனுண்டு, கற்பனைகள் அதிகமாகும்.

**சிங்கம்** தாராளமாகச் செலவு செய்து மகிழும் நாள், வியாபார தொழிலில் ஆக்கபூர்வமான மாற்றங்களைச் செய்ய முன்வருவீர்கள், சயன சுகக் குறைவான நாள், இடமாற்றம், ஊர் மாற்றம் என்பன ஏற்படலாம்.

**கன்னி** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பணப்புழக்கம் அதிகரிக்கும், எதையும் எளிதில் செய்து முடிப்பீர்கள், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், ஆரோக்கியமான நாள்.

**துலாம்** சுப காரியங்கள் நடைபெறலாம், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், சொத்துக்களால் நன்மையுண்டு, அந்நியர் உதவிகள் கிடைக்கலாம், மனதில் உற்சாகம் பிறக்கும்.

**விருச்சிகம்** கனிவான செய்திகள் வந்து சேரலாம், வருமானம் எதிர்பார்த்தபடியே வந்து சேரும், வாயில் தேடி வசதிகள் வந்து சேரலாம், திடீர் பயணங்களால் நன்மையுண்டு.

**தனுசு** வழிபாட்டால் சுகம் காண வேண்டிய நாள், எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்படலாம், உடல் நலனில் கவனமெடுக்க வேண்டிய நாள், போசன சுகமுண்டு.

**மகரம்** சென்ற இடத்தில் செல்வாக்கு அதிகரிக்கும், குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும், விருந்துபசாரங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, செய் தொழிலில் மேன்மையுண்டு.

**கும்பம்** உடல் நலம் சீராகி உற்சாகமடைவீர்கள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், நண்பர்கள் நம்பி ஒப்படைத்த பொறுப்புக்கள் கைகூடும், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**மீனம்** யோகமான நாள், வியாபார விருத்தியேற்படும், பணத்தேவைகள் பூர்த்தியாகும், புத்திரரால் பெருமைகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு, உறவினர் வருகையுண்டு.

வளவன்

## ஆன்மீக சொற்பொழிவு

(மருதங்கேணி)

தொண்டைமனாறு செல்வச்சந்நிதி ஆலயச்சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் வெள்ளிக்கிழமைதோறும் நடைபெறும் ஆன்மீக நிகழ்வு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் பக்திவலையிற் படுவோன் என்னும் கருத்துரையினை யாழ். சின்மய நிறுவனத்தின் பிரமச்சாரி ஜாக்கிரத் சைதன்ய சுவாமியின் ஆன்மீகச் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது என நிர்வாகசபை அறிவித்துள்ளது. (அ)

## தைப்பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

முழங்காவில் செல்வ விநாயகர் தைப் பொங்கல் விழா எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5 மணிக்கு பொங்கல் பூசையுடன் ஆரம்பமாகவுள்ளது என ஆலய பிரதம குரு ஜெகநாதக் குருக்கள் அறிவித்துள்ளார்.

பொங்கல் பூசையினைத்தொடர்ந்து அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலைக் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (அ)

## நினைவுப்பேருரை

இலங்கை பொறியியலாளர்கள் நிறுவகத்தின் வட பிராந்திய நிலையத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள, எந்திரி எஸ். ஆறுமுகத்தின் ஞாபகார்த்த நினைவுப் பேருரை இன்று புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ். கச்சேரி மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.


இந்நிகழ்வில் யாழ்ப்பாணத்திற்கான ஆறு எனும் தொனிப்பொருளில் எந்திரி ஆறுமுகம் சிறப்புரையாற்றவுள்ளார் என நிகழ்வு ஒழுங்கமைப்பாளர்கள் அறிவித்துள்ளனர். (அ)




# யாழ். குடாநாட்டின் அபிவிருத்திக்காக சர்வதேச நாடுகளை ஒன்றிணைப்போம்

## கனேடிய எம்.பி.க்கள் அரச அதிபருக்கு உறுதிமொழி





கனேடிய குழுவினர் யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையை சந்தித்த போது....

(யாழ்ப்பாணம்)

சர்வதேச நாடுகளை இணைத்து குடாநாட்டில் அபிவிருத்திப்பணிகளை முன்னெடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்வதாக கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் தம்முடனான கலந்துரையாடலின் போது தெரிவித்ததாக யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு நேற்று முன்தினம் உத்தியோகபூர்வவிஜயத்தைமேற்கொண்டிருந்த கனேடிய நாடாளுமன்ற உறுப்பினரும் குடியகல்வு பல்கலாசாரத்துக்கான செயலாளருமான அங்க்செனன் லெயங்க், நாடாளுமன்ற உறுப்பினர் ஜோய் டானியல் மற்றும் இவரது நிறைவேற்று உதவியாளர் ரூனி பிலிப்ஸ், விசேட உதவியாளர் மார்லென் ஹெரால்யொற் ஆகியோர் யாழ். அரச அதிபரை மாவட்ட செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்கள்.

இந்தச் சந்திப்பின் போதே கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேற்கண்டவாறு தமக்கு தெரிவித்ததாக யாழ். அரச அதிபர் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியில் யாழ். குடாநாட்டின் நிலைவரம் தொடர்பாக அறிந்து செல்வதற்கே இங்கு மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும் மக்களின் வாழ்வாதாரம் தொடர்பாகவும் அறிந்து செல்வதற்காகவே இந்த குழுவினர் வருகை தந்திருந்தனர்.

குடாநாட்டில் பல பகுதிகளை சென்று பார்வையிட்ட இந்தக் குழுவினர் பல தரப்பினருடன் கலந்துரையாடல்களை நடத்தினர்.

இதன் ஒரு கட்டமாகவே என்னையும் சந்தித்து கலந்துரையாடினார்கள். மக்களின் தேவைகள் தொடர்பாகவும் மீள்குடியேற்றம், அபிவிருத்திப் பணிகள் தொடர்பாகவும் படங்கள், அறிக்கைகள் மூலம் விளங்கப்படுத்தினேன்.

எனது விளக்கங்களைக் கேட்டறிந்ததோடு குடாநாட்டில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்திப் பாதைகளுக்கு சர்வதேச நாடுகளுடன் கலந்துரையாடி அவர்களை இணைத்து அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ள உதவிபுரிவதாக வாக்குறுதியளித்தனர்.

அத்தோடு எமது தேவைகள் தொடர்பாக, எழுத்து மூலமாக அறிக்கை சமர்ப்பிக்குமாறும் கேட்டுக் கொண்டனர் என யாழ். அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# வைத்தியசாலையின் தேவைகள் குறித்து கனேடிய நாடாளுமன்றில் விவாதிக்கப்படும்

## கனேடிய எம்.பி.க்கள் உறுதியளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலைக்கு விஜயம் செய்த கனேடிய பாராளுமன்ற உறுப்பினர்கள் அங்குள்ள தேவைகளை யாழ். போதனா வதைத்தியசாலை பணிப்பாளர் திருமதி பவானி பசுபதிராஜாவிடம் கேட்டு அறிந்து கொண்டனர்.

நேற்று முன்தினம் வருகை தந்த இவர்கள் குடாநாட்டின் அஸ்திவாரமாக விளங்குகின்ற சில இடங்களிற்கு விஜயம் செய்து அங்குள்ள குறைகளை கேட்டுத் தெரிந்து கொண்டனர்.

யாழ். போதனா வைத்தியசாலைக்கு விஜயம் செய்த இக்குழு யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளருடன் சுமார் ஒரு மணி நேரமாக சந்திப்பை மேற்கொண்டது.

இச்சந்திப்பின் போது வைத்தியசாலைக்குத் தேவையான சிகிச்சைப் பிரிவுகளை ஆரம்பிப்பதற்கு குறிப்பாக இதய சத்திரசிசிக்சைப் பிரிவுகளை ஆரம்பிப்பதற்கு வழியமைக்க வேண்டும் எனவும் மற்றும் வைத்தியசாலைக்குத் தேவையான கட்டட வசதிகள், விடுதிகள் போன்றவற்றையும் அமைப்பதற்கும் குறிப்பாக இதய சத்திர சிகிச்சைப் பிரிவுகள் போன்றன இல்லாமையால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இச் சிகிச்சைக்கு கொழும்புக்கு செல்ல வேண்டிய நிலை காணப்படுகின்றது. இதனால் செலவீனங்கள் அதிகரித்து செல்கின்றது. இச் சிகிச்சைப்பிரிவினை அமைக்க வேண்டும் என பணிப்பாளர் கனேடிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விளக்கமளித்தார்.

இதற்கு பதிலளித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இச்சிகிச்சை தொடர்பாக கனேடிய பாராளுமன்றத்தில் கதைக்கவுள்ளதாகவும் அதன் பின் இச்சிகிச்சை நிலையம் தொடர்பான முடிவு அறிவிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இச்சந்திப்பின் பின்னர் வைத்தியசாலையின் விடுதிகள் மற்றும் கட்டடப்பணிகள் நடைபெறும் இடங்களுக்கு சென்று அங்குள்ள நிலையங்களை பார்த்து அறிந்து கொண்டனர். (அ-4)

# அகில இலங்கை கலை இலக்கிய சங்கத்தின் ஏற்பாட்டில் கட்டுரைப்போட்டிகள்

(மருதங்கேணி)

அகில இலங்கை கலை இலக்கிய சங்கத்தினால் ஆண்டுதோறும் நடாத்தப்பட்டுவரும் கட்டுரைப்போட்டி அகில இலங்கை ரீதியாக நடாத்தப்படவுள்ளது.

ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் பேராசிரியர் கா.சிவத்தம்பியின் பங்கு என்னும் தலைப்பிலேயே இக்கட்டுரைப் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

இப்போட்டிகள் அமரர் கந்தையா வடிவேலு ஞாபகார்த்தமாக நடைபெறவுள்ளது.

இதற்கான ஆக்கங்களை பொன்.சுகந்தன், தலைவர்.அகில இலங்கை கலை இலக்கிய சங்கம், நெல்லியடி ,கரவெட்டி எனும் முகவரிக்கு எதிர்வரும் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு அகில இலங்கை தமிழ் இலக்கிய சங்கச் செயலாளர் எஸ்.கணபதிப்பிள்ளை அறிவித்துள்ளார்.

இப் போட்டியில் பங்குபற்றி முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்கு தலா 5ஆயிரம் ரூபா,3 ஆயிரம் ரூபா,2ஆயிரம் ரூபா பணப்பரிசில்கள் வழங்கப்படும்.அத்தோடு 10 போட்டியார்கள் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-35)

# காணாமல்போனநபர் சடலமாக மீட்கப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

கிணற்றிலிருந்து மீட்கப்பட்ட சடலம் கடந்த 5 ஆம் திகதி காணாமல்போன சங்குவேலி தெற்கு அம்மன் கோவிலடி மானிப்பாயைச் சேர்ந்த மகேந்திரன் பார்த்தீபன் (வயது 33) என இனம் காணப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதி வைத்தீஸ்வரா சந்தியருகே பதிவு செய்யப்படாத விடுதி ஒன்றின் கிணற்றில் நேற்றுமுன்தினம் சடலம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.


ஒருகிழமைக்கு முன்பு சுற்றுலாவந்த முஸ்லிம் குடும்பம் ஒன்று அவ்விடுதியில் தங்கிச் சென்ற நிலையில் குறித்தவிடுதி பூட்டிய நிலையிலேயே காணப்பட்டது.

இந்நிலையில் விடுதி பராமரிப்பாளரால் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் விடுதியிலிருந்து துர்நாற்றம் வீசுவது இனங்காணப்பட்டு தேடுதல் மேற்கொண்டபோது கிணற்றினுள்சடலம்ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

உடனடியாக விடுதி பராமரிப்பாளரால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். இந்நிலையில் மறுநாள் காலை அதாவது நேற்று கிணற்றிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது.

பின்பு விசாரணைகளின்மூலம் சடலமாக மீட்கப்பட்டார்.கடந்த 5 ஆம் திகதி காணாமல் போன பார்த்தீபன் என உறவினர்களினால் இனங்காணப்பட்டது.

சடலமாக மீட் கப்பட்டவர் மனநிலை பாதிக்கப்பட்டவர் என மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுசெய்யப்பட்டதோடு வலம்புரிப் பத்திரிகையிலும் காணாமல் போயுள்ளார்எனவும்அறிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.



இவரது மரணம் தொடர்பாக பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். அத்தோடு சடலத்தை யாழ். நீதவான் நீதிமன்ற நீதவான் மா.கணேசராசா நேரில் சென்று பார்வையிட்டுள்ளதோடு சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப் பட்டுள்ளது. (அ-6-4)

## திருவாசக முற்றோதல்

(திருநெல்வேலி)

திருநெல்வேலி பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் நாளை வியாழக்கிழமை காலை 7.30 மணிக்கு பேராசிரியர் சிவலிங்கராஜா தலைமையில் திருவாசக முற்றோதல் இடம்பெறும். (அ)

# யாழ்ப்பாணத்தில் மீண்டும் மலேரியா பரவும் அபாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மீண்டும் மலேரியா காய்ச்சல் பரவும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக சுகாதாரத் திணைக்களம் எச்சரித்துள்ளது.

இது தொடர்பாக சுகாதாரத் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு, மலேரியா காய்ச்சல் உயிராபத்தை ஏற்படுத்தக்கூடியது. கடந்த மூன்று வருடங்களாக யாழ்.மாவட்டத்தில் மலேரியாத் தொற்றுக்குள்ளானவர்கள் இனங்காணப்படவில்லை.

தற்போது இந்தியாவிலிருந்து மீளத் திரும்பியோர், இந்தியாவுக்கு சென்று வருபவர்கள், வெளிநாடு செல்வதற்காக முகவர்களூடாக ஆபிரிக்க நாடுகளுக்கு சென்று திரும்பியவர்கள், ஆபிரிக்க நாடுகளில் வேலை செய்து விடுமுறையில் வருபவர்கள் போன்றோரில் தற்போது மலேரியா, மூளை மலேரியா போன்ற நோய்த் தாக்கம் இனங்காணப்படுவது அதிகரித்து வருகிறது.

அதேவேளை, யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட பூச்சியியல் ஆய்வுகளில் மலேரியா நோயைப் பரப்பும் நுளம்புகள் குடாநாட்டின் பல பகுதிகளிலும் இனங்காணப்பட்டுள்ளது. எனவே, யாழ்ப்பாணத்தில் மலேரியா நோய் மீண்டும் பரவக் கூடிய ஆபத்து ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு மலேரியா நோயாளர்கள் இனங்காணப்பட்ட பகுதிகளில் பூச்சியியல் ஆய்வு, இரத்தக்கறைப் பரிசோதனை, புகையூட்டல், மருந்து தெளித்தல், நுளம்பு வலை விநியோகம், நுளம்புக் குடம்பியை உண்ணக்கூடிய மீன்களை விடுதல் மற்றும் விழிப்புணர்வூட்டல் செயற்பாடுகள் சுகாதாரத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யாழ்.குடாநாட்டில் மீண்டும் மலேரியா பரவாதவாறு கட்டுப்படுத்துவதற்கு சுகாதாரத் திணைக்களம் மக்களின் ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றது. இதற்காக பின்வரும் விடயங்களில் அவதானம் செலுத்துமாறு சுகாதாரத் திணைக்களம் பொது மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளது.

◀ இந்தியாவிலிருந்து மீளத் திரும்பியோர் மலேரியாவுக்கான இரத்தப் பரிசோதனையை அருகிலுள்ள அரச வைத்தியசாலையில் செய்து மலேரியா கிருமித் தொற்று இல்லையென்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

◀ இந்தியா அல்லது மலேரியா நோயுள்ள நாடுகளுக்கு சென்றுவர உள்ளவர்கள் மலேரியா நோய் ஏற்படாது பாதுகாப்பதற்கான முற்காப்பு சிகிச்சையை அருகிலுள்ள அரச வைத்தியசாலை அல்லது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் பெற்றுக் கொள்ளுங்கள்.

◀ வெளிநாடு செல்வதற்காக ஆபிரிக்க நாடுகளுக்கு சென்று திரும்பியவர்கள் மலேரியாவுக்கான இரத்தப் பரிசோதனையை அருகிலுள்ள அரச வைத்தியசாலையில் செய்து மலேரியா கிருமித்தொற்று இல்லையென்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

◀ மலேரியா நோயுள்ள நாடுகள் அல்லது இலங்கையில் மலேரியா நோயுள்ள பகுதிகளுக்கு மலேரியா நோய்க்கான முற்காப்பு சிகிச்சை பெறாது சென்று வந்தவர்களுக்கு நடுக்கத்துடன் காய்ச்சல் ஏற்பட்டால் மலேரியாவுக்கான இரத்தப் பரிசோதனையை அருகிலுள்ள அரச வைத்தியசாலையில் செய்து கொள்ளுங்கள் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# மஹிந்தவின் மைத்துனர் மீது சிலர் காலணி வீச்சு

(இராமேஸ்வரம்)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரியின் கணவரான நடேசன் குமரன் இராமேஸ்வரத்தில் உள்ள கோவிலுக்கு தரிசனம் செய்ய வந்த போது சிலர் அவர் மீது காலணி வீசி கோஷங்களை எழுப்பினர்.

இவர் இராமேஸ்வரத்தில் உள்ள கோவிலுக்கு அடிக்கடி வந்து தரிசனம் செய்வது வழங்கமாகும்.

தற்போது அவருடைய வருகையை தெரிந்து கொண்ட சில அமைப்பினர் அவருக்கு எதிராக கண்டன கோஷங்களை எழுப்பினர்.

இதைத் தொடர்ந்து நடேசன் குமரன் யாகம் ஒன்றில் கலந்து கொள்ள சென்ற போது அவர் மீது காலணி வீசினர்.

மேலும் இவரை வெளியேற்றுமாறு வீதி மறியலிலும் அவர்கள் ஈடுபட்டனர். இதனால் இப்பகுதியில் பதற்றம் ஏற்பட்டது. (அ-2)

## குண்டுத் தாக்குதல்; 15 பேர் பலி

ஈராக்கில் கர்பாலாவில் உள்ள ஷியா பிரிவினரின் புனிதத் தலத்துக்கு பலர் சென்று வருகின்றனர்.

எனவே, அவர்கள் மீது மற்றொரு பிரிவினர் தாக்குதல் நடத்தி வருகின்றனர். நேற்று முன்தினம் பக்தாத் நகரின் புறநகர் பகுதிகளான மேற்கு முவா சலாத், ஒவாய்ரிஜ் ஆகிய இடங்களில் கார் குண்டு தாக்குதல்கள் நடத்தப்பட்டன. அதில் 15 பேர் பலியானார்கள். 25 பேர் காயம் அடைந்தனர். இதை தொடர்ந்து அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. (அ-2)


மானிப்பாய் இந்துசமய விருத்திச் சங்கம்

மாதாந்த சமய சொற்பொழிவு

இடம்:- மானிப்பாய் இந்து சமய விருத்திச் சங்க மண்டபம் (வேற்கை ஆலய அருகாமை)

காலம்:- 15.01.2012 தைப்பொங்கல் தினம் மாலை 4.45 மணி

சொற்பொழிவாளர்:- ஆசிரியர் திரு. ச. தயானந்தன் அவர்கள்

“இந்து சமயத்தின் மகிமை”


அன்றைய தினம் அனைவரும் கலந்து கொண்டு பயன் பெறுமாறு அன்புடன் அழைக்ன்கிறோம்.

நன்றி

மானிப்பாய். இந்துசமய விருத்திச் சங்கத்தினர்

08.01.2012 (சி-5499)


# கல்விப் பாதையில் எத்தகைய தடைவரினும் சாதனை படைக்க முடியும்



முதல் நிலை மாணவி சண்முகநாதன் -சர்மிளா

(கிளிநொச்சி)

வன்னியில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து அதிகமான பாடசாலைகளில் கற்க வேண்டிய சூழ்நிலை எனக்கு ஏற்பட்டது. இந்நிலையே மேலும் படிக்க வேண்டும் என்ற ஆர்வத்தினை எனக்கு ஊட்டியது என கிளிநொச்சி மாவட்டத் தில் கலைப்பிரிவில் முதலாம் இடம்பெற்ற மாணவி சண்முகநாதன் சர்மிளா கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், கிளிநொச்சி புனித திரேசா மகளிர் கல்லூரியில் கல்விகற்ற நான் வன்னியில் இடம்பெற்ற போர்ச் சூழல்களின் மத்தியிலிருந்தே கற்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இது எனக்கு சோர்வை தரவில்லை, மேலும் ஊக்கத்தை கொடுத்தது.

எனது இச் சாதனைக்கு எனது அப்பா, அம்மா, பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், அருட்சகோதரிகள், நாவலர் வீதியிலுள்ள பொருளியற் கல்லூரி சமூகத்தினர் ஊன்றுகோலாயிருந்தனர்.

எதிர்காலத்தில் தமிழ் விரிவுரையாளராக வரவேண்டும் என்பதும் போரினால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்டத்தில் அங்குள்ள ஏழைச் சிறார்களின் கல்வியினை மேம்படுத்த வேண்டும் என்பவையே எனது இலட்சியம். எத்தனை தடைகள் வரினும் அத்தகைய தடைகளை துணிவோடு தாண்டி கல்வி கற்றால் முன்னேற முடியும். அதற்கு எடுத்துக்காட்டாக வன்னியில் பல மாணவர்கள் எத்தனை தடைகள் வந்த போதும் தொடர்ச்சியாக சாதனைகள் புரிந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அதிகளவிலான நேரத்தினை கல்விக்காக அர்ப்பணித்தமையிலேயே என்னால் இப் பேறுபேற்றை பெற முடிந்துள்ளது என புன்னகையோடு கூறினார். (அ-4)


கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலய ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி S.சந்திரேஸ்வரி அவர்களின் அன்புக் கணவர்

திரு.இராமப்பிள்ளை சேதுராஜா

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினரது துயரில் நாமும் பங்கு கொள்வதோடு அன்னாரது ஆத்மாசாந்தியடையவும் இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

துயருறும்

அதிபர், ஆசிரியர்கள்,

யா/ கனகரத்தினம் ம.ம.வித்தியாலயம்

(7274)



தைப்பொங்கலை முன்னிட்டு ஆண்டு தோறும்

நல்லூர்

சரவணா ரெக்ஸ்

இன் மாபெரும் பிரமாண்டமான மலிவு விற்பனை...

குறிப்பாக இந்த வருடத்திற்கான மாபெரும் மலிவு விற்பனை இந்த ஆறு நாட்கள் மட்டுமே

ஆடித்தள்ளுபடி நடைபெற்ற விசித்திரமான இடத்தில்..

Office ware saree Special Sales



* இந்தியன் திருமணப் பட்டுச் சாறிகள்
* இந்தியன் சீக்குன்ஸ் சாறிகள்
* இந்தியன் சில்க்ஸ் சாறிகள் (Office wear sarees)
* இந்தியன் கொட்டன் சாறிகள் (Office wear sarees)
* இந்தியன் பஞ்சாபிகள்,பாஞ்சாபித் துணிகள்

மற்றும் ஆண்களுக்கான அனைத்து ஆடைத் தெரிவுகளும்

காலம்:- 11.01.2012 - 16.01.2012

நேரம்:- காலை 9.00 மணி முதல் இரவு 7.30 மணி வரை

இடம் : கே.கே.எஸ் வீதி தட்டாதெரு சந்தியில் இருந்து இடது பக்கமாக 300 மீற்றர் தூரத்தில் உள்ள கெங்காதரன் மருத்துவமனை முன்பாகவுள்ள சிவப்பிரகாசம் வீ (ஆடித்தள்ளுபடி நடைபெற்ற இடம்)

தைப்பொங்கலை முன்னிட்டு இந்தியாவில் இருந்து விசேடமாக இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

சந்தர்ப்பத்தை தவற-விடாதீர்கள்

(சி-2456)

# வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை விஸ்தரித்து அந்நியச்செலாவணியை அதிகரிப்பதற்கு திட்டம்

## வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவிப்பு

(கொழும்பு)

இத்தாலி, கனடா, அவுஸ்திரேலியா, நோர்வே, கொரியா, அமெரிக்கா, சுவிஸ் உட்பட ஐரோப்பிய நாடுகளில் இலங்கையர்களுக்கு அதிகளவு வேலைவாய்ப்புக்களை பெற்றுக் கொள்ளும் விதத்தில் தொழில் வாய்ப்புக்களை விஸ்தரிக்க இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் திட்டமிட்டுள்ளதாக பணியகத்தின் தலைவர் அமல் சேனாதிலங்கார நேற்று முன்தினம் தெரிவித்தார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பின் ஊடாக இலங்கைக்கு 5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் கடந்தாண்டு ஈட்ட முடிந்தது. இவவாண்டு அதனை விஞ்சும் அளவுக்கு வருவாயை ஈட்டுவதுடன் இலங்கையருக்கு அதிக கொடுப்பனவுடன் கூடியவாறு ஐரோப்பிய நாடுகளில் வேலைவாய்ப்புகளை பெற்றுக் கொடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது என்றார்.

தகவல் தொழில்நுட்பத்துறைமற்றும் தொழில்நுட்பத்துறை சார்ந்த வேலை வாய்ப்புக்காக அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கும் கடற்தொழில் துறையில் நோர்வே மற்றும் தென்கொரிய நாடுகளுக்கும் இலங்கையரை அனுப்ப திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்புவதற்கு முன்னதாக ஐ.ஈ.எல்.ரி. எஸ். பரீட்சையில் சித்தியடைவதற்கு ஏதுவாக ஆங்கில அறிவை வழங்குவதற்கும் கல்வி அமைச்சின் கண்காணிப்பு எம்.பி. மொஹான்லால் கிரேரோ போன்றோரின் உதவியும் பெறப்படும் என்றார்.

புதிய தலைவராக பொறுப்பேற்றுள்ள அமல் சேனாதிலங்கார நேற்று முன்தினம் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் செய்தியாளர் மாநாடொன்றை நடத்திய போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

எந்தவித கட்டணமும் அறவிடப்படாமல் 3 ஆயிரத்து 600 இலங்கையரை இத்தாலியில் வேலைவாய்ப்புக்காக அனுப்புவதற்கான ஏற்பாடுகளை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் இவ்வருடம் மேற்கொண்டுள்ளதாக இச் செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட அமைச்சர் டிலான் பெரேராவும் தெரிவித்துள்ளார்.

இத்தாலியில் வேலைவாய்ப்புக்களுக்கு அனுப்புவதற்கு முன்னதாக அவர்களுக்கான மொழிப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. இவ்வருடம் மொழிப் பயிற்சிகளும் ஆரம்பிக்கப்படவுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இத்தாலிக்கு இலங்கையர்கள் இன்று சட்டவிரோதமாக வள்ளங்களில் ஏறி உயிரைப் பணயம் வைத்து செல்கின்றனர். அவ்வாறு இல்லாமல் பயிற்றப்பட்ட சிறந்த வேலைவாய்ப்புக்களுக்காக இலங்கையரை அனுப்ப முடியும்.

கட்டணம் எதுவும் அறவிடப்படாமல் இவர்களை அனுப்ப இவ்வருடத்தினுள் ஏற்பாடுகள் செய்யப்படும். இதற்கென ஆறு கட்டங்களாக செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். அத்துடன் தென்கொரிய வேலைவாய்ப்புக்களுக்காக நடத்தப்பட்ட பரீட்சையில் 9 ஆயிரத்து 998 பேர் தகுதி பெற்றுள்ளனர்.

இவர்களுக்கு மேலதிகமாக கடற்தொழில் துறையில் தென்கொரிய வேலைவாய்ப்புக்காக மேலும் ஆயிரம் பேரை அனுப்ப ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளன.

தகுதி பெற்ற 9 ஆயிரத்து 998 பேருக்கு மேலதிகமாக கொரிய மொழிப் பரீட்சையில் அடுத்ததாக அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களுள் ஆயிரம் பேர் தெரிவு செய்யப்படுவார்கள் என்றும் டிலான் குறிப்பிட்டார். (அ-2)

## தொகுதி அமைப்பாளர்களுக்கு விண்ணப்பம் கோருகிறது ஐ.தே.க.

(கொழும்பு)

இவ்வாண்டுக்கான ஐ.தே.க.வின் தொகுதி அமைப்பாளர்களுக்கான விண்ணப்பங்கள் தற்போது கோரப்படுவதாக அக் கட்சியின் பொதுச் செயலாளரும் எம்.பியுமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

விசேடமாக வடக்கு- கிழக்கில் ஐ.தே.க கட்சியின் தொகுதி அமைப்பாளர்களாக செயற்பட விரும்புவோர் உடனடியாக விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு அவர் கூறினார்.

இது தொடர்பாக திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி மேலும் தகவல் தருகையில்,

புதிய அமைப்பாளர் நியமனங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.. இதன்போது வடக்கு,கிழக்கில் தொகுதி அமைப்பாளர்களாக செயற்பட விரும்புவோர் தொடர்பில் நாம் அதிகம் கவனம் செலுத்துகிறோம்.

எனவே இதற்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்பதாக பொதுச் செயலாளர், ஐ.தே.கட்சி தலைமையகம், சிறிகொத்தா, பிட்டகோட்டே என்ற விலாசத்திற்கு அனுப்பிவைக்க வேண்டும் என்றார். (அ-2)

## நெல்சன் மண்டேலாவின் வாழ்க்கை வரலாறு தொலைக்காட்சி தொடராகின்றது

(தென்னாபிரிக்கா)

தென்னாபிரிக்காவில் வெள்ளையர்களின் நிற வெறிக்கு எதிராக போராடி 27 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்தவர் நெல்சன் மண்டேலா.

உலக சமாதானத்துக்காக நோபல் பரிசு பெற்ற அவர் கடந்த 1990ஆம் ஆண்டு சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டார். இவர் தென்னாபிரிக்காவின் கறுப்பின முதல் ஜனாதிபதியாவார்.

இவரது வாழ்க்கை வரலாறு தொலைக் காட்சி தொடராக தயாரிக்கப்படுகிறது.அதற்கு ரூ.150 கோடி இந்திய ரூபாய் செலவிடப்படுகிறது.

அவரது இயற்பெயரான மடிபா என்ற தலைப்பில் தயாராகும் இத் தொடரை கனடா, இங்கிலாந்து பட நிறுவனத்துடன் சேர்த்து அவரது பேரன் தயாரிக்கிறார்.இந்த தொடர் 6 பாகங்களாக உருவாகிறது.

அதில் அவரது இளமைப்பருவம், அரசியல் பிரவேசம், போராட்டத்தில் கைதாகி சிறைவாசம் அனுபவித்தது, பின்னர் அரசியல் வாதியாகி தென்னாபிரிக்காவின் ஜனாதிபதியானது வரை சித்தரிக்கப்படுகிறது.

இந்த தொடர் தயாரிப்பதற்கான முழு தகவல்களை தர தயாராக இருப்பதாக நெல்சன் மண்டேலா அறக்கட்டளை தெரிவித்துள்ளது. (அ-2)

## ஆயிலியப் பிரார்த்தனையும் விசேட சொற்பொழிவும்

(யாழ்ப்பாணம்)

தவத்திரு யோகர் சுவாமிகளின் ஆயிலிய தினப் பிரார்த்தனையும் விசேட சொற்பொழிவும் இன்று புதன்கிழமை மாலை 3 மணிக்கு தொல்புரம் சர்வோதய மண்டபத்தில் வி.குணபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு ஆசியுரையினை இந்துக் குருமார் ஒன்றியத் தலைவர் பிரம்மஸ்ரீ சபா வாசுதேவக் குருக்கள் ஆற்றவுள்ளார்.

பிரதம விருந்தினராக சங்கானை பிரதேசசபைத் தலைவர் திருமதி நா.ஐங்கரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

**வித்தை விரும்பு** என்னும் தலைப்பில் வடமாகாண சின்மயா மிஷன் பிரம்மச்சாரி சைதன்யா உரையாற்றுவார் என விழா ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (அ)

## வீதியை முழுமையாக புனரமைக்க கோரிக்கை


(பருத்தித்துறை)

வரணியில் 50 வருடங்களாக கைவிடப்பட்ட பெரும் சேதமடைந்து காணப்பட்ட வீதியின் அரைவாசிப் பகுதி தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றது.

வரணியில் நுணாவடியில் உள்ள முக்கால் கிலோ மீற்றர் தூர வீதியே அகலிப்பு செய்து புனரமைக்கப்பட்டு வருகின்றது.

எனவே இவ்வீதியின் தொடராக மேலுமுள்ள ஒரு கிலோ மீற்றர் வீதியும் புனரமைத்து போக்குவரத்திற்கு உதவுமாறு அப்பகுதி மக்கள் உரிய தரப்பினரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வீதியை, வீதி அபிவிருத்தி திணைக்களம் புனரமைப்பு செய்து வருகின்றது. (அ-3)






காரைநகர் தியாகராஜா மத்திய மகாவித்தியாலயத்தின் கீழ் இயங்கி வந்த சுப்பிரமணிய வித்தியாசாலை அண்மையில் தனித்து இயங்க ஆரம்பித்துள்ளது. இந்நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் லண்டன் காரை நலன்புரிச் சங்கத் தலைவர் ப.தவராஜா மங்கள விளக்கேற்றுவதனையும், வடமாகாண கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் மற்றும் ஆசிரியர் எஸ்.கே சதாசிவம் ஆகியோர் பெயர்ப்பலகையை திரைநீக்கம் செய்வதனையும், காரைநகர் அபிவிருத்திச் சங்கத் தலைவர் க.சோமசேகரம் உரையாற்றுவதனையும் படங்களில் காணலாம். (படங்கள்:- காரைநகர் செய்தியாளர்)

மஹிந்த விவகாரம்

# இந்திய தமிழ் தொலைக்காட்சி ஒளிபரப்பை இலங்கையில் பார்வையிட தடைவிதிப்பு

## ஆங்கில ஊடகம் தகவல்

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இவ்வாண்டில் தனது பதவியை விட்டு வெளியேறும் நிலை ஏற்படும் என்று சோதிடக் கணிப்பை வெளியிட்ட இந்தியாவில் இருந்து ஒளிபரப்பாகும் தமிழ்த் தொலைக்காட்சி ஒன்றின் ஒளிபரப்பை இலங்கையில் பார்வையிட அரசாங்கம் தடை செய்துள்ளதாக ஆங்கில ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

கடந்த டிசெம்பர் 31 ஆம் திகதி இரவு இவ்வாண்டில் இந்திய அரசியல்வாதிகளின் நிலை தொடர்பாக எதிர்வுகூறும் சோதிடக் கலந்துரையாடல் நிகழ்ச்சியை இந்தியாவின் விஜய் தொலைக்காட்சி ஒளிபரப்பியிருந்தது.

தமிழ் நாட்டில் பிரபலமான ஆறு சோதிடர்கள் கலந்து கொண்ட இந் நிகழ்ச்சியில் இந்தியாவின் அயலில் உள்ள ஆறு நாடுகளின் நிலைமைகள் குறித்தும் தமது எதிர்வுகூறல்களை வெளியிட்டனர்.

குறிப்பாக இலங்கையைப் பற்றிக் கருத்து வெளியிட்ட ஒரு சோதிடர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இவ்வாண்டு இறுதிக்குள் தனது பதவியை விட்டு, அரசியலை விட்டு வெளியேறும் நிலை ஏற்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

அவரது இந்தக் கருத்தை நிகழ்வில் பங்கேற்ற ஏனைய சோதிடர்களும் ஏற்றுக் கொண்டனர். இந்த நிகழ்ச்சி இலங்கையில் டயலொக் இணைப்பு மூலம் ஒளிபரப்பாகியிருந்தது.

இந்நிகழ்ச்சி பற்றி கேள்வியுற்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தொலைத்தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழுவின் தலைவர் அனுச பல்பிட்டவை அழைத்து கண்டித்துள்ளதுடன் மீண்டும் இந்த நிகழ்ச்சி மறு ஒளிபரப்பாவதை தடுக்குமாறும் உத்தரவிட்டுள்ளார்.

இதையடுத்து குறிப்பிட்ட நிகழ்ச்சி ஒளிபரப்பாகும் நேரத்தில் இலங்கையில் அந்த தொலைக்காட்சி அலைவரிசையின் இணைப்பைத் தடை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஆங்கில ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது. (அ-2)

# அரசியல் தீர்வில் தேசியத்துவத்திற்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும்

## அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு

அரசியல் தீர்வில் தேசியத்துவத்திற்கே முக்கியத்துவம் கொடுக்கப்படல் வேண்டும். இந்தியா உட்பட ஏனைய சர்வதேச நாடுகளின் தேவைக்காக நாட்டின் இறையாண்மையை கேள்விக்குறியாக்கி விட முடியாது என்று அமைச்சரும் ஜாதிக ஹெல உறுமய உறுப்பினருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இந்திய மத்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா இலங்கை வருவது அதிகாரப்பகிர்வு தொடர்பாக பேசுவதற்கென்றால் அதற்கு ஒரு போதும் அனுமதியளிக்க முடியாது. ஏனெனில் இலங்கையின் உள்ளார்ந்த விடயங்களில் இந்தியாவிற்கு தலையிட தார்மீக உரிமை கிடையாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அமைச்சர் சம்பிக்க ரணவக்க தொடர்ந்தும் கூறுகையில்,

அதிகாரப்பகிர்வை வழங்குவதற்கு 13 ஆவது திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று இந்தியா பல்வேறு வகையில் அழுத்தங்களை கொடுத்து உள்நாட்டு விடயங்களில் அத்துமீறிய தலையீட்டை மேற்கொண்டு வருகின்றது.

இதே அழுத்தத்தில் கூட்டமைப்பும் செயற்படுகின்றது. எனவே, எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தேசியத்துவத்தை மீறிய தீர்வுத் திட்டம் ஒன்றிற்கு இடமளிக்க போவதில்லை .

இவ்வார இறுதிப்பகுதியில் இந்தியாவின் மத்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். எம். கிருஷ்ணா இலங்கை வரவுள்ளார். இவரின் வருகையானது நாட்டின் அந்தரங்க விடயங்களில் கையடிப்பதாக அமைந்து விடக்கூடாது.

தேசியப்பிரச்சினைகளில்ஏனைய நா்டுகளின் தலையீடுகளை இலங்கை விரும்பவில்லை. யுத்தம் முடிவடைந்து ஒற்றையாட்சியின் கீழ் அனைத்து இன மக்களும் சமாதானத்துடன் வாழ்கின்றனர்.

தற்போது நாட்டில் அவசியமாக உள்ள அபிவிருத்தியினை அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது. அதேபோன்று இன முரண்பாடுகளை தவிர்த்து விட்டு சகல இன மக்களுக்கிடையிலும் நல்லிணக்கத்தை ஏற்படுத்த அரசாங்கம் தீவிரமான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. இதனை சீர்குலைக்கும் வகையில் யாரும் நடந்து கொள்ளக்கூடாது என்றார். (அ-2)

# இனப்பிரச்சினை விடயத்தில் ஆபி. காங்கிரஸ் பிரதிநிதிகளை இணைத்துக் கொள்ளமுடியாது

## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

தேசிய பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நடத்தப்படும் பேச்சுவார்த்தைகளில் ஆபிரிக்க காங்கிரஸ் பிரதிநிதிகளை இணைத்துக் கொள்ள முடியாது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

இலங்கையில் நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகளில் மத்தியஸ்தம் வகிக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஆபிரிக்க தமிழ் காங்கிரஸிடம் கோரியுள்ளனர்.

இதேவேளை, இலங்கைத் தமிழர்களுக்கு சுயநிர்ணய ஆட்சி வழங்கப்பட வேண்டுமெனவும் அதற்கு ஆபிரிக்க நாடுகள் அழுத்தம் கொடுக்க வேண்டுமெனவும் வணக்கத்திற்குரிய இம்மானுவல் அடிகளார் தலைமையிலான உலகத் தமிழர் பேரவை அமைப்பு கோரியுள்ளதாக சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

உலகத் தமிழர் பேரவை பிரதிநிதிகளில் இருவர் தமிழீழ விடுதலைப் புலிகளுக்காக நிதி திரட்டும் பணிகளில் ஈடுபட்டவர்கள் என்றும் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது. (அ-2)

# தேசிய நுளம்பு கட்டுப்பாட்டு வாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் டெங்கு நோய்த் தொற்று தற்போது தீவிரமாகப் பரவி வருகின்றது. இதனால் தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரம் நாடெங்கிலும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இந்த தேசிய நுளம்பு கட்டுப்பாட்டு வாரத்தையொட்டி யாழ். குடாநாட்டில் விழிப்புணர்வுக் கூட்டங்களை நடத்தவுள்ளதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை அறிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையின் பல பாகங்களிலும் டெங்கு நோய் தீவிரமாகப் பரவி வரும் அதேவேளை யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் டெங்கு நோய் தற்போது தீவிரமாகப் பரவி வருகின்றது. இதனால் தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரம் நாடெங்கிலும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரத்தையொட்டி அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் பிரதேச செயலாளர்களின் தலைமையில் பிரதேச மட்ட நுளம்புக் கட்டுப்பாட்டுக் குழுக் கூட்டங்கள் நாளை 11 ஆம் திகதி அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் இடம்பெறவுள்ளது.

தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரத்தில் 12 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளும் ஏழு வலயங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வலயத்துக்கும் ஒவ்வொரு நாளாக 16 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரையான ஏழு நாட்களிலும் ஏழு வலயங்களிலும் அந்தந்தப் பிரதேச வளங்களனைத்தையும் ஒன்றிணைத்து நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் வீடுகள், நிறுவனங்கள், பொது இடங்கள், பராமரிப்பற்ற இடங்கள் போன்றவற்றில் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வார செயற்பாடுகளில் சகல அரச, அரசசார்பற்றநிறுவனங்கள், உள்ளூராட்சிமன்றங்கள், பொது அமைப்புக்கள், பொது மக்கள், பொலிஸ், பாதுகாப்புப் படையினர் ஆகியோரை பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (அ-6)

# தெரிவுக் குழுவின் செயற்பாட்டில் எந்த மாற்றமும் இடம்பெறவில்லை

## அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவிப்பு



அடுத்த பாராளுமன்ற அமர்வு எதிர்வரும் 17 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் அதன்போது நடைபெறவுள்ள கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது குறித்த பாராளுமன்ற தெரிவுக்குழுவின் எதிர்கால நிலைமை குறித்து ஆராயப்படும் என்று ஆளும் கட்சியின் பிரதம கொறடாவும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் பாராளுமன்ற தெரிவுக் குழுவின் செயற்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை என்று புதிய விடயங்கள் எதுவும் இடம்பெறவில்லை என்றும் அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது குறித்த பாராளுமன்ற தெரிவுக்குழுவின் புதிய நிலைமை குறித்து கேட்ட போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் இவ்விடயம் குறித்து மேலும் குறிப்பிடுகையில்,

பாராளுமன்ற தெரிவுக்குழு விடயத்தில் புதிய மாற்றங்கள் எதுவும் இடம்பெறவில்லை. தெரிவுக்குழுவுக்கு ஆளும் கட்சியின் சார்பில் 19 உறுப்பினர்களின் பெயர்கள் பிரேரிக்கப்பட்டுள்ளன.

எனினும் எதிர்க்கட்சிகள் இது வரை தமது பிரதிநிதிகளை பெயரிடாமல் உள்ளனர்.

மேற்குறித்த திகதியில் பாராளுமன்றத்தில் கூடவுள்ள கட்சித் தலைவர்களின் கூட்டத்தின் போது தெரிவுக்குழு விவகாரம் குறித்து கலந்துரையாடப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்படலாம் என்றார். (அ-2)


# கண்ணீர்க் காணிக்கை

யாழ். பல்கலைக்கழக கணித புள்ளிவிபரவியற் துறையில் சிரேஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தராக கடமையாற்றும் திரு.இ.ஜெகநாதன் அவர்களின் அன்புத்தாயார்

## அமரர் திருமதி.இரத்தினம் தங்கரட்ணம்

அவர்கள் 09.01.2012அன்று சிவபதமடைந்ததையிட்டு துயருறும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது இதயபூர்வமான கண்ணீர்க் காணிக்கைகளை செலுத்துவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

விரிவுரையாளர்கள்,ஊழியர்கள்,
கணித புள்ளிவிபரவியற்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

(7272)



# விழி நீரில் விளக்கெரியும் ஆறாம் ஆண்டில்

## செல்வி கணபதிப்பிள்ளை பவளராணி (B.A)

(சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்,மட்டுவில் வடக்கு J/313)



திதி:- சுக்கில பட்ச துவாதசி
(05.01.2012)

படைப்பில் 25 . 02 . 1975

அழிப்பில் 11 . 01 . 2006

காலம் செய்த கோலம் என்று கருத்துச் சொல்வதா- இல்லை
காலனவன் விளையாட்டில் விதி செய்த சதியா?
நெருப்பெனவே நெஞ்செரியும் நினைவைப் போக்க
நேரில் நீர் வருவீரோ! எம் கவலை தீர்க்க!

மெய் கண்டான் வீதி,
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

(7265)

# சங்கடங்கள் தீர்க்கும் சகுனங்கள்



✷ கோயிலில் சாம்பிராணி போடும் நேரத்தில் சென்றால், நமக்கு இருக்கும் தொல்லை நீங்கும். நம் வீட்டில் சாம்பிராணி புகை போட்டால், எவ்வாறு பூவின் வாசத்தை அறிந்து தேனீக்கள் வருகின்றதோ அது போல இலாபகரமான விடயங்கள் தேடிவரும்.

✷ வீட்டிற்கு யாராவது வந்து சென்ற உடனேயே கழுவித், தள்ளக்கூடாது. சுப தினங்களில் வீட்டைக்கழுவவும் கூடாது. முன்தினமே சுத்தப்படுத்திவிடவேண்டும்.

✷ வீட்டின் உள்ளே ஆங்காங்கே துணிகளை இறைத்துப் போடக்கூடாது. ஒரே இடத்தில் ஒன்றாக அடுக்கிவைக்க வேண்டும்.

✷ காக்கையின் இறகோ அல்லது அதன் எச்சமோ நம்மேல் விழுந்தால் ஏதோ குறைவரப் போகிறது என்று அர்த்தம். பரிகாரமாக சனீஸ்வர பகவானின் ஆலயத்தில் நல்லெண்ணெய்யால் தீபம் ஏற்றினால் பாதகத்தைத் தடுக்கலாம்.

✷ பசுவின் பாதம் ஓர் இல்லத்தில்பட்டால் அந்த இல்லத்தில் நல்ல நிகழ்ச்சிகள் நடக்கும். ஒரு வீட்டைத் தேடி பசு மாடு தானாக வந்தால் அந்த இல்லத்தில் நீண்ட நாளாக இருந்தபிரச்சினை விலகும். தடைப்பட்ட சுப காரியங்கள் தடையில்லாமல் நடக்கும்.பசு நடந்த பாதையில் நாம் நடந்தால் புண்ணியங்கள் ஏற்படும். அதேபோல பசு மாடு நடக்கும் போது அதன் கால்பட்டு பறக்கும் மண் நம்மேல் பட்டால் நமது சரீரத்தைப் பிடித்திருந்த தோஷங்கள் எல்லாம் விலகிவிடும்.அதனை கோ தூளி என்கிறது சாஸ்திரம்.கோ என்றால் பசு தூளி என்றால் தூசி.பசு மாட்டின் கால் பட்ட தூசிக்கு சக்தி அதிகம்.ஆலயத்திற்கும் அங்கு இருக்கும் இறைவனுக்கும் சக்தி இருந்தாலும் அந்த ஆலயத்திற்கு பல பேர் வந்து செல்வதால், அந்த ஆலயத்திற்கும் தோஷங்கள் ஏற்பட வாய்ப்பிருக்கிறது.அதனால் பன்னிரண்டு வருடங்கள் ஆன பின்னர் கும்பாபிஷேகம் செய்வார்கள்.அதுபோல தினமும் பசு மாட்டை ஆலயத்தைச் சுற்றிவரவும் செய்தார்கள் நம் முன்னோர்கள்.அதனால்தான் இன்றும் சில ஆலயங்களில் பசு மாட்டை வளர்க்கிறார்கள்.அது சிறிது நேரமாவது அந்த ஆலயத்திற்குள் நடந்து போகும் இல்லையா!




✷ வட இந்தியர்கள் காலையில் இனிப்பைச் சாப்பிட்ட பின்னர் தான் ஏனைய எதையும் சாப்பிடுவார்கள்.இனிப்பில் ஆரம்பிக்கும் அந்த நாள் சந்தோசமான நாளாகவும், இலாபகரமான நாளாகவும் இருக்கும் என்பது நம்பிக்கை.தினமும் நம்மால் இனிப்பை வாங்கவோ, தயாரிக்கவோ முடியாமல் போகலாம்.அதற்கு என்ன செய்யலாம்? இனிப்பை எதில் செய்வார்கள்?சீனியிலும் நெய்யிலும் தானே! நெய்யையும் சீனியையும் கலந்து சிறிதளவு சாப்பிட்டால், அந்தநாள் சந்தோசமான இலாபகரமான நாளாக இருக்கும்.(நீரிழிவு நோய் உள்ளவர்கள் இதைச் செய்ய வேண்டாம்).

✷ நாம் ஏதாவது நல்ல காரியங்கள் செய்வதாக இருந்தால் அந்த காரியங்கள் நன்றாக நடக்குமா? தடையில்லாமல் நடக்குமா? என்பதை முன்கூட்டியே அறிய சிலர் சீட்டு எழுதிப் போட்டுப் பார்ப்பார்கள். ஆனால் நம் முன்னோர்கள், அமாவாசையில் அதிலும் ஞாயிற்றுக்கிழமையில் வரும் அமாவாசை அன்று சூரியனின் பிம்பம் தெரியும் அளவுக்கு வெளிச்சம் இருக்கும் இடமாக பார்த்து அந்த இடத்தை நன்றாக தூய்மைப்படுத்தி அந்த இடத்தில் கோலம் போட்டு கோலத்தின் மேல் ஒரு நல்ல கிண்ணத்தில் நெய் ஊற்றி வைத்து(நெய்யை உருக்கி எண்ணெய் போல ஆக்கிக்கொள்வார்) உங்கள் குல தெய்வத்தையும் சூரிய பகவானையும் நினைத்துக் கொண்டு நீங்கள் எந்த விடயத்தை நடக்குமா, நடக்காதா என்று நினைக்கிறீர்களோ அந்த விடயத்தை மனதில் நினைத்துக் கொண்டு அந்த நெய் உள்ள கிண்ணத்தைப்பார்த்தால் சூரியனின் முழு உருவம் வட்டமாகத் தெரிந்தால் நீங்கள் நினைத்த காரியம் நடக்கும்.பலன் பார்த்த பின்னர் அந்த நெய்யை சாப்பிட உபயோகிக்காமல் கோயிலுக்கு கொடுத்தால் நல்லது.

சூரியனின் பிம்பம் கிண்ணத்தில் தெரியவில்லை என்றால் மனம் தளராதீர்கள். கடவுள் கொடுப்பதை யாராலும் தடுக்க முடியாது.கடவுள் தடுத்ததை யாராலும் கொடுக்க முடியாது என்பதுதான் உண்மை.

இறைவன் நமக்கு எதைத்தர வேண்டும் என்று எண்ணுகிறானோ அது நம்மைத் தேடிவரும்.நாம் நினைப்பது நடக்காவிட்டால் அதுவும் நன்மைக்குத்தான் என்பதை காலம் உணர வைக்கும்.குழந்தைக்கு நல்லது, கெட்டது எவை என்று தாய்க்குத்தானே தெரியும்.

நாம் யாவரும் தெய்வத்தின் குழந்தைகள்.அவனுக்குத் தெரி யாதா எது நமக்கு நன்மை தரும் என்று.

சிவனின் ஆயுதத்தில் ஒன்று தான் சூலம் என்கிறது புராணம்.சூலாயுதத்தை சிறிது நேரத்திற்கு தன் கையில் இருந்து விடுவித்து வானத்தில் உலவ விடுவாராம் ஈசன். அதை தேவசித்தர்கள் கண்டு வணங்குவார்கள்.ஆனால் என்னதான் சூலத்தை வணங்கினாலும் சூலம் இருக்கும் திசைநோக்கிச் செல்லக் கூடாது.

(தொடரும்)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## துளசியின் வகைகளும் மருத்துவ குணங்களும்

**நிலத்துளசி**

நிலத்துடன் சிறிது படர்ந்தாற்போல சற்று நிமிர்ந்து வளர்ந்து காணப்படும்.

✷ கைப்பிடியளவு நிலத்துளசி இலைகளை ஒரு பாத்திரத்தில் இட வேண்டும். அதில் 8 டம்ளர் நீர்விட்டு அடுப்பில் வைத்து ஒரு டம்ளராக வற்றக்காய்ச்சி வடிகட்டி 30 மில்லி அளவில் தினம் 3 வேளை அருந்த உடம்பை வலித்து வரும் காய்ச்சல் தணியும்.

✷ 2 தேக்கரண்டி இஞ்சிச் சாற்றுடன் 2 தேக்கரண்டி நிலத்துளசி இலைச்சாற்றை கலந்து அருந்தினால் பித்தம் சம்பந்தமான நோய்கள் தணியும்.

✷ நிலத்துளசி இலைகளை சேகரித்து நிழலில் உலர்த்தி நன்கு காய்ந்ததும் இடித்து தூளாக்கி அத்தூளை துணியில் அரித்து 2 தேக்கரண்டி எடுத்து ஒரு டம்ளரில் போட்டு 200 மில்லி கொதிக்கும் நீர்விட்டு 15 நிமிடங்கள் மூடி ஊறவிட்டு வடித்து 15 தொடக்கம் 30 மில்லி அளவு எடுத்து பசுப்பால் அல்லது தேன் கலந்து கொடுக்க உடலில் ஏற்படும் சூடு தணியும்.


Ocimum Kilimandseharicum

**நாய்த்துளசி**

✷ இலைகள் துளசி இலைகளை விடப் பெரியதாகவும் ஒரு அடி வரை வளரக்கூடியதாகவும் கசக்கி மணக்கும் போது ஒருவித நெடியுடையதாகவும் இருக்கும்,

✷ நாய்த்துளசி இலைகளை ஆவியில் வேகவைத்து பிழிந்து சாறு எடுத்து ஒரு தேக்கரண்டி சாற்றுடன் சில துளி தேன் கலந்து தினம் இருவேளை கொடுத்தால் குழந்தைகளுக்கு ஏற்படும் கக்குவான் இருமல் தணியும்.

✷ நாய்த்துளசி இலைகளை இடித்துச் சாறு எடுக்க வேண்டும். வயதிற்கு தக்கபடி அதில் ஒரு தேக்கரண்டி முதல் 4 தேக்கரண்டி வரை கொடுக்க சளி இளகி வெளியேறும். இருமல் குணமாகும்.

✷ நாய்த்துளசி இலைகளை நிழலில் உலர்த்தி எடுக்க வேண்டும். நன்கு உலர்ந்த பின்பு இடித்து தூளாக்கி சல்லடைத்துணியில் அரித்து 1/2 தேக்கரண்டி அளவு பசுநெய்யில் கலந்து உட்கொண்டால் வாதநோய்கள் குணமாகும். இதைத் தொடர்ந்து உட் கொள்ளலாம்.

✷ நாய்த்துளசிப் பொடியில் 1/2 தேக்கரண்டி அளவு எடுத்து ஒரு தேக்கரண்டி தேன் கலந்து காலை, மாலை எடுக்க பித்த ரோகம், வயிற்றுப்புண் குணமாகும்.

**காட்டுத்துளசி**

**BotanicalName -Ocimum americanum**

✷ காட்டுத்துளசியைத் தான் கஞ்சாக்கோரை என அழைப்பர். வயல் ஓரங்கள், தோட்டங்கள், தரிசு நிலங்களில் தானாக முளைத்து வளர்வதால் காட்டுத்துளசி என அழைக்கப்படுகின்றது.

✷ காட்டுத் துளசி இலைகளை நிழலில் உலர்த்தி பின்பு அருவல் நொருவலாக இடித்து தேயிலை தூளுடன் கலந்து பயன்படுத்தினால் காசநோய்க்கு சிறந்ததாகும்.

✷ காட்டுத் துளசிச்சாறு 4 தேக்கரண்டி அளவு காலை, மாலை அருந்த மந்தக்கழிச்சல் குணமாகும்.

✷ காட்டுத்துளசி இலைகளை நிழலில் உலர்த்தி மெல்லிய சல்லடைத் துணியில் அரித்து ஒரு தேக்கரண்டி அளவு 150 மில்லி காய்ச்சிய பசுவின் பாலில் இரு வேளை அருந்த கணச்சூடு குணமாகி உடல் நலம் பெறும்.


Ocimum americanum

✷ மேற்படி தூளில் ஒரு தேக்கரண்டி அளவு பசு நெய்யில் கலந்து கொடுக்க மூல நோயால் ஆசனவாயில் ஏற்படும் அரிப்பு, புண்கள் குணமாகும்.

✷ வெள்நாவல் பழக்கொட்டைகளை இடித்து குடிநீர் காய்ச்சி 200 மில்லி அளவு குடிநீரில் ஒரு தேக்கரண்டி காட்டுத்துளசி தூளை கலந்து தினம் இருவேளை தொடர்ந்து அருந்த நீரிழிவு நோய் குணமாகும்.

✷ காட்டுத் துளசி இலைத்தூளை சீயாக்காய்த்தூளோடு சேர்த்து இளஞ்சூட்டு நீரில் குழைத்து உடல் முழுவதும் பூச வேண்டும். பின்பு சற்றுநேரம் ஊறவைத்து தேய்த்து குளித்தால் தோலில் ஏற்படும் சொறி, நமைச்சல் ஆகியன குணமாகும்.

மேற்குறிப்பிட்டவற்றுள் பேய்த்துளசி பெருங்காட்டுப் பகுதியில் உயரமான குத்துச் செடியாக வளரும். கல்துளசியை மலைச் சாரல்களில் காணலாம்.

ஆனால் ஏனைய துளசிவகைகள் யாழ். பிரதேசத்தில் பரவலாக பரம்பிக் காணப்படுகின்றது. எனவே மேற்படி துளசி இனங்களை வேறுபடுத்தி இனங்கண்டு கொள்வதோடு உடல் ஆரோக்கியத்திற்கு உகந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர் சித்த மருத்துவத்துறை
யாழ். பல்கலைக்கழகம் கைதடி

குறிப்பு:- வெண்துளசி வகைளையே செந்துளசி எனவும் குறிப்பிடுவர். காரணம் அதன் தண்டுகள் சிவப்புக் கலந்து மண்ணிறத்தில் காணப்படும். இச்செந்துளசி அல்லது கருந்துளசி இலைச்சாற்றை பாம்புப் புற்றுக்குள் தெளித்தால் பாம்புகள் அதில் தங்காது. எனவே வீட்டில் இத்துளசி இனங்களை வளர்த்தாலும் பாம்புகள் அருகில் வராது.

# குருவைத்தேடி...



## ஆன்மீகம் 01

கேள்வி: ஆன்மீகத்தில் வளர்ச்சியடைய குரு அவசியமா? ஒருவரை உண்மையான குரு என்றோ, போலியான குரு என்றோ எப்படிக் கண்டு கொள்வது?

சத்குரு: முதலில் குரு என்ற வார்த்தையின் அர்த்தத்தைப் புரிந்து கொள்ளுங்கள். “கு” என்றால் இருள். “ரு” என்றால் அகற்றுபவர். எனவே, ஒரு குரு என்பவர் உங்களுக்குள் உள்ள இருளை அகற்றுபவர். என்னுடைய இருளை நானே அகற்றிக் கொள்ள முடியுமா? நிச்சயமாக முடியும். முடியாது என்று நான் சொல்ல மாட்டேன். ஒரு குரு என்பவர், ஒரு



வரைபடம்போல. நீங்கள் அடுத்த தெருவுக்குச் செல்லவேண்டும் என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்தத் தெருவுக்குச் செல்ல எந்தத் திசையில் போகவேண்டும். என்பது உங்களுக்குத் தெரியவில்லை. ஆனால், உங்களுக்குள் இருக்கும் ஆர்வத்தின் காரணமாக நீங்கள் வேறு திசையில் செல்லத் தொடங்குகிறீர்கள். சரியான திசையில் நீங்கள் செல்லாவிட்டால், உலகத்தை ஒரு சுற்றுச் சுற்றி வந்தாலும் நீங்கள் எங்கு செல்ல வேண்டுமோ அங்கு சென்றடைய மாட்டீர்கள். ஆனால், எவ்வளவு பேரால் உலகத்தை முழுமையாக சுற்றிவர முடியும்? போகும் வழியிலேயே பாதிப்பேர் காணாமற் போய் விடுவார்கள், இல்லையா? அது மட்டுமல்ல. எவ்வளவு மக்களால் ஒரே திசையில் குறிப்பிட்ட காலத்திற்கு தொடர்ந்து பயணிக்க முடியும்? பலமுறை அவர்கள் தங்களின் பாதையை மாற்றிக்கொண்டே இருக்கிறார்கள், இல்லையா? ஐரோப்பாவில் இருந்து இந்தியாவைக் கண்டுபிடிப்பதற்காக முந்நூறு, நாநூறு வருடங்களுக்கு முன்னதாக பல பேர் பயணித்தார்கள். ஆனால், வாஸ்கோடகாமாவால் மட்டுமே இலக்கை எட்ட முடிந்தது. கொலம்பஸ்கூட பயணத்தைத் தொடங்கிவிட்டு பாதியிலேயே காணாமற்போய் வேறிடத்தில் காலூன்றினார். இப்படிப் பயணத்தைத் தொடங்கியவர்கள் பாதியிலேயே காணாமற் போய் இருக்கிறார்கள். வரலாறு அந்த மக்களைப் பற்றியெல்லாம் எதுவுமே பேசியதில்லை. யார் அதை முழுமையாக செய்து முடித்தார்களோ அவர்களைப் பற்றி மட்டுமே வரலாறு பேசுகிறது. ஆனால், ஆயிரக்கணக்கான மக்களில் சிலர் மட்டுமே அந்தப் பயணத்தை முழுமையாக முடிக்கிறார்கள்.

எனவே, ஒரு குரு இல்லாமல் என்னால் ஆன்மீகப்பாதையில் வளர்ச்சி அடைய முடியுமா? ஒரு குரு இல்லாமல் நான் ஆன்மிகத்தில் வளர முடியுமா? நிச்சயமாக முடியும். வரையறுக்கப்படாத ஒரு பாதையில் பயணிப்பதைவிட ஒரு வரைபடத்தைக் கொண்டு செல்வது அறிவார்ந்த செயலாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். ஒரு குரு என்பவர் ஒரு வரைபடம்தான். அவர் ஒரு வாழ்கிற வரைபடம்.

உண்மையான குரு என்றும், போலியான குரு என்றும் எதுவும் கிடையாது. ஒருவர் குருவா? அல்லது குரு இல்லையா? என்பது மட்டுமே விடயம். உண்மையான வெளிச்சம் என்றும், போலியான வெளிச்சம் என்றும் ஏதேனும் இருக்கிறதா என்ன? அப்படி எதுவுமே இல்லை. விளக்கு, வெளிச்சத்தை தருகிறதென்றால் அது எந்தவிதமான வெளிச்சமாக இருந்தாலும் பிரச்சினையில்லை. அது ஒரு மெழுகுவர்த்தியின் வெளிச்சமோ அல்லது ஒரு மின்விளக்கின் வெளிச்சமோ அது இருளைப் போக்குகிறது என்றால் அது ஒரு வெளிச்சம்தான். எனவே, உண்மையான குரு, போலியான குரு என்றெல்லாம் இல்லை. பிரச்சினை என்னவென்றால், ஆறுதல் தருகின்ற பலரும் உலகில் இப்போது குருவாக மதிக்கப்படுகிறார்கள். பகவத்கீதையின் இரண்டு அத்தியாயங்களை படிக்கின்ற யாரும் இந்தத் தேசத்தில் குருவாக மாறிவிடுகிறார்கள். ஒரு புத்தகத்தை யார் வேண்டுமானாலும் படிக்கலாம். யார் வேண்டுமானாலும் மனப்பாடம் செய்யலாம். ஆனால், அவர்கள் தங்களைக் குரு என்று சொல்லிக் கொள்கிறார்கள். நான்கு மந்திரங்கள் உங்களுக்குத் தெரிந்துவிட்டால் நீங்கள் ஒருகுருவாகி விடுகிறீர்கள். இது உங்கடைய தவறான புரிதலின் காரணமாக ஏற்படுகின்றது.

ஆறுதலுக்காக யாரும் ஆன்மீக குருவைத் தேடுவதில்லை. நீங்கள் ஆறுதலைத்தான் தேடுகிறீர்கள் என்றால், நீங்கள் இன்னமும் பிழைப்பைத்தான் தேடிக்கொண்டிருக்கிறீர்கள். உயிர்வாழ்தல் மட்டும்தான் உங்களுக்கு முக்கியமாக இருக்கின்றது. அப்படித்தானே! அது மனரீதியான பிழைப்பாக இருந்தாலும் சரி, உணர்ச்சிரீதியான பிழைப்பாக இருந்தாலும் சரி, பிழைப்பு என்பது பல நிலைகளில் இருக்கிறது.

(தொடரும்)

**சத்குரு ஜக்கி வாசு தேவ்**

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 06




“இரும்பு உடன்படிக்கை” கைச்சாத்தாகிறது

ஐரோப்பாவில் மேலைய வல்லரசுகளின் கொள்கை தொலைகிழக்கில் ஆக்கிரமிப்பாளரை “சாந்தப்படுத்தும்” கொள்கையோடு முற்றிலும் ஒத்திருந்தது. 1939 ஆம் ஆண்டு ஜூலையில் பிரிட்டிஷ்-ஜப்பான் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. இது சாராம்சத்தில் சீனாவை பலிகொடுத்து பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமும் ஜப்பான் ஏகாதிபத்தியமும் செய்துகொண்ட வெளிப்படையான சதியாக அமைந்தது. பிரிட்டனைப் பொறுத்தமட்டில் இது சீனாவிலிருந்த ஜப்பானியப் படைகளுக்கு உத்தரவாதமாகும். சீனாவை இவை சோவியத் யூனியன் மற்றும் மங்கோலிய மக்கள் குடியரசின்மீது தாக்குதல் தொடுப்பதற்கான தாக்குதல் மேடையாகப் பயன்படுத்த முடிந்தது.

### யுத்தத்தின் முன்னணைப் பொழுதில்

1938 ஆம் ஆண்டு ஒக்ரோபர் முதலாம் திகதி பாசிச ஜேர்மனி தனது இராணுவத்தை சுதேத் பிரதேசத்தினுள் அனுப்பியது, 1939 ஆம் ஆண்டு மார்ச்சில் செக்கோஸ்லோவாக்கியா முழுவதையும் ஆக்கிரமித்தது. 1939 ஆம் ஆண்டு வசந்த காலத்தில் பாசிஸ்டுகள் லித்துவேனியாவில் கிளைபெத் பிரதேசத்தைக் கைப்பற்றினர், ருமேனியாவின் மீது தளைபூட்டும் “பொருளாதார” ஒப்பந்தத்தைத் திணித்தனர். அந்நாட்டின் பொருளாதாரத்தை ஜேர்மனிக்கு கீழ்ப்படிந்திருக்குமாறு செய்தனர். பாசிச இத்தாலி 1939 ஆம் ஆண்டு ஏப்பிரலில் அல்பேனியாவைக் கைப்பற்றியது. 1938 ஆம் ஆண்டு இறுதியில் ஜேர்மனி டான்ட்ஸிங் நெருக்கடி என்றழைக்கப்படுவதைத் தோற்றுவித்தது. சுயேச்சையான நகரமாகிய டான்ட்ஸிங்கின் பால் “வெர்சேயின் நியாயமற்ற தன்மை”யை ஒழிப்பது என்னும் போர்வையின் கீழ் போலந்திற்கு எதிரான ஆக்கிரமிப்பை நிறைவேற்றுவதுதான் இந்நெருக்கடியின் சாரமாகும். பிரிட்டனும் பிரான்ஸும் தமது அரசியல் மற்றும் பொருளாதார நலன்களைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு போலந்து, ருமேனியா, கிரீஸ் மற்றும் துருக்கி ஆகிய நாடுகளுக்கு “பாதுகாப்பு உத்தரவாதங்கள்” என்றழைக்கப்படும் உத்தரவாதங்களை அளித்தன. இவற்றின்படி போலந்தின்மீது பாசிச ஜேர்மனி தாக்குதல் தொடுத்தால் போலந்துக்கு இராணுவ உதவி அளிப்பதாக இவை உறுதி மொழிதந்தன. ஆனால், பின்னர் நடந்த நிகழ்ச்சிகள் காட்டியபடி இந்த உறுதி மொழிகள் நிறைவேற்றப்படவில்லை.



1939 ஏப்ரல்-மே-யில் ஜேர்மனி, 1935 ஆம் ஆண்டு பிரிட்டிஷ்-ஜேர்மனி கடல் உடன்படிக்கையை இரத்துச் செய்தது. போலந்தின்மீது படையெடுப்பதில்லை என்று போலந்துடன் 1934 இல் செய்துகொண்ட ஒப்பந் தத்தை முறித்துக் கொண்டது, இத்தாலியுடன் “இரும்பு உடன் படிக்கை” என்ற ஓர் உடன்படிக்கை செய்து கொண்டது. இதன்படி மேலைய வல்லரசுகளுடன் போர் மூண்டால் இத்தாலி அரசாங்கம் ஜேர்மனிக்கு உதவிபுரிவதாக உறுதியளித்தது.



போலந்தை ஆக்கிரமித்துள்ள ஜேர்மன் டாங்கிகள்

இரண்டாம் உலகயுத்தத்தின் முன்னணைப் பொழுதில் ஜேர்மனியிடம் பலம்வாய்ந்த இராணுவ இயந்திரம் இருந்தது. 1939 ஆம் ஆண்டு செப்ரம்பர் முதலாம் திகதியன்று ஜேர்மனிய இராணுவத்தில் 4.6 மில்லியன் போர்வீரர்கள் இருந்தனர். இதன் வசம் 26ஆயிரம் சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் (விமான எதிர்ப்பு பீரங்கிகளைச் சேர்க்காது), 3ஆயிரத்து195 டாங்கிகளும் 4ஆயிரத்து93 போர் விமானங்களும் 57 நீர்மூழ்கிக் கப்பல்கள் உட்பட 107 பிரதானரக போர்க் கப்பல்களும் இருந்தன.

(தொடரும்)

**வி.அ.மத்சுலேன்கோ**

# மேலைத்தேய, சமஸ்கிருத, தமிழ் காப்பிய மரபுகளின் பின்னணியில்

# பண்டிதர் சச்சிதானந்தனின் யாழ்ப்பாணக் காவியம் - ஓர் ஆய்வு

3

"நீறு புண்டர நெற்றியிற்
கூறுசெய்த சவுக்கின் குறிகளோ..."
(கூத்தியவத்தைப் படலம்,7)

"மைந்தனை இழந்தோம் ஐயா
மணாளனை இழந்தேன் ஐயா
சுந்தர அழகும் பெண்மைச் சோபையும் இழந்தேன் முன்னோர்
தந்தபல் செல்வமெல்லாம் இழந்துளேன்..."
(துன்பமாலை, 21)

மக்கள் படும் வேதனையை முறையிடுவதாய் வரும் பாடல்களில் பரிதாபமும் ஆற்றாமையும் வெளிப்படுத்தப்படுகின்றன.

"கன்னிச் செந்தமிழ் கைத்தளை பூட்டிமுன்
சென்னி தாழ்ந்தனள்..."
(கூத்தியவத்தைப் படலம், 18)

இக்கொடுமைகளையும் அடிமை வாழ்வினையும் கண்ணுறவர் மனதில் கொதித்தெழும் கோபம் பின்வரும் பாடல்களில் நன்கு புலப்படுகிறது.

"வில்வளைந்திடில் வீரம் வளையுமோ
புல்வளைந்திடும் பொங்கிய ஆற்றினால்
நெல் வளைந்திடும் நிற்கும் நெடுமலைக்
கல் வளைந்திடுமோ..."
(கூத்தியவத்தைப் படலம், 35)

" மற்புயத்தினில் மறமார்பினில் வீர
விற்புயத்தினில் விடு விறல் வலிக் கையில்
நிற்பது வீரமோ மெல்லியல் நெஞ்சக்
கற்பினிற் பிறப்பது வீரமோ..."
(கஞ்சுகம் கனன்ற படலம்,18)

மாறுவேடமணிந்து வணிகனாய் வலம்வரும் பரராசசேகரனிடம் கஞ்சுகம் "எம் நாட்டு வளம் பலவும் கண்டீர்... கண்டனதாம் பயமின்றிப் பகரும்" எனப் பணிக்கையில் பரராசசேகரன் தான் ஈழநாட்டில் கண்டவற்றை கூறும் பாடல்களில் மக்கள் மனதை அழுத்தும் சோகத்தை மிகவும் நுட்பமாக கவிஞர் வெளிக்கொணர்ந்துள்ளார்.

"வழியெல்லாம் கண்ணீரே
காண்கின்றேன் வனப்பு மாதர்
வழியெல்லாம் துன்பெழுதி
வேதனையின் திலகமிட்டார்"
(பரராசன்படலம்,36)

நவரசங்களில் ஒன்றான அதிசயம் யாழ்ப்பாணக் காவியத்தில் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் துல்லியமாக வெளிக்கொணரப்படுவதைக் காணலாம். பரராசசேகரன் வியாபாரியாக வேடம் தரித்து நல்லூர் கோட்டையை அடைகிறான்.

இந்நிகழ்ச்சியை விபரிக்கும் பாடல்களினால் கதாபாத்திரங்களின் மனதில் தோன்றும் அதிசயம் படிப்பவர் மனதிலும் பரவுவதை உணரலாம்.

பரராசன் படலம் ( இது நூலின் உட்பகுதியில் பரராசசேகரன் மாளிகையைத் தரிசித்த படலம் என குறிப்பிடப்பட்டுள்ளது. மாளிகை காண் படலம் ஆகிய இருபடங்களிலும் உள்ள பாடல்கள் யாவும் வியப்புணர்வு நிரம்பப் பெற்றனவாக உள்ளன.

இளவணிகன் தான் தலையில் சுமந்து வந்த மணிஇளைத்த பேழையை திறக்கின்றான். அது ஓர் அருங்காட்சிப் பெட்டகமாகவே தோன்றுகின்றது. அந்த மணியிளைத்த பேளையுள் ஏத்தனை வகைப் பொருட்களைக் காட்சிப்படுத்துகின்றார் பண்டிதர் சச்சிதானந்தன்.

வகை வகையான பட்டுக்கள், இரத்தினங்கள், முத்துக்கள், பவளங்கள், வைரங்கள், ஜவ்வாதும் ஏனைய வாசனைப் பொருட்களும், சந்தனம், குங்குமம், சங்கு வளையல்கள், சிங்கமுக வளையல்கள், கண்ணாடி வளையல்கள், சீனத்துக் கைவிசிறிகள், முகம் பார்க்கும் ஆடிகள், மணிமாலைகள், கல் மோதிரங்கள்,சிலம்புகள் என, "மங்கையர் மனம் வேண்டும் பொருள் கொடுத்து" நிற்கிறான் வணிகனான பரராசசேகரன்.

"காசுமீரப் பட்டுடையும் காந்தார மணிகோத்துக்
கூசி விழி குருடாக்கும் மார்பார இரத்தினமும்..."
சங்கறுத்த வளையல்களும் சந்தனத்தின் விரைக்கொழுந்தும்
வங்கமுறு மென்பட்டும் வாரணத்தின் மருப்பிழைத்த சிங்கமுகக் காப்பினமும்...
(பரராசன் படலம், 2,3)

வணிகனின் பல்வகைப் பொருட்களைக் கண்டு அதிசயித்து நிற்கும் அரண்மனை மங்கையரிடையே,

"மைவேண்டாக் கருவிழியால்
மலர் நாணும் திருமுகத்தால்
நெய்வேண்டாக் குழற்காட்டால்
நினைவழிக்கும் செவ்விதழால்
நைவாகும் மெல்லிடையால்
நாரியரில் அரிசியென..."
(பரராசன் படலம்,16)

"அங்கங்கள் ஒவ்வொன்றும் அழகினுக்கே எல்லையாகி" காட்சி தரும் கஞ்சுகத்தினைக் கண்டு வியக்கின்றான்.

பொதுவாக காவியத்திலும் வீரரசமும் காதல்ரசமும் செறிந்திருக்கும்.

யாழ்ப்பாணக் காவியத்திலும் இவை இரண்டும் சிறப்புக் கையாளப்பட்டுள்ளன. காதலின் பல படிநிலைகளையும் அவற்றில் காதலன், காதலியின் மனநிலைகளையும் செதுக்கியுள்ளார் கவிஞர்.

காதலர் ஒருவரை ஒருவர் கண்ணுற்றல், காதலர் அழகு கண்டு மயங்குதல், பிரிவுத் தாபம், ஏக்கம், காதலியைக் கவர்ந்து செல்லல் என்பன நயத்தகு முறையில் விபரிக்கப்பட்டிருக்கின்றன. (தொடரும்)

கலாநிதி அமிர்தாஞ்சலி சிவபாலன்
மொழியியல், ஆங்கிலத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# விண்ணப்பக் கைநூல் இம்மாத இறுதிக்குள்

## பல்கலை.மானியங்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

இம்முறை உயர்தரப் பாரீட்சைப் பெறுபேறுகளுக்கு அமைய பல்கலைக்கழகங்களில் அனுமதி பெறுவதற்கான விண்ணப்பம் அடங்கிய கைநூலை இம்மாத இறுதியில் வெளியிடவுள்ளதாக பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு குறிப்பிடுகின்றது.

• நாட்டிலுள்ள விற்பனைப் பிரதிநிதிகள் ஊடாக இந்தக் கைநூலை மாணவர்கள் பெற்றுக் கொள்வதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க கூறினார்.

உயர்தரப்பரீட்சை பெறுபேறுகள் தொடர்பில் தற்போது நிலவும் பிரச்சினை இந்த விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்வதற்கு தடையாக அமையாது எனவும் பேராசிரியர் சுட்டிக்காட்டினார்.

பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையை இம்முறை உயர்த்துவதற்கு எண்ணியுள்ளதாகவும் காமினி சமரநாயக்க தெரிவித்தார்.

கடந்த முறை உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளுக்கு அமைய 21 ஆயிரத்து 300 மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்பட்டதாக பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் மேலும் குறிப்பிட்டார். (அ-2)

# வாகனங்கள் சிலவற்றுக்கு சுங்கத்தீர்வை நீக்கப்பட்டுள்ளது

## நிதியமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

பயணிகள் பேருந்து, கனரக வாகனங்கள் மற்றும் புதிய வாகன இயந்திர வகைகளுக்கான சுங்கத் தீர்வுகளை முற்றாக நீக்கியுள்ளதாக நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

இவ்வாண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தின் அடிப்படையில் இந்தத் தீர்வை இரத்து செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தவிர கனரக வாகனங்கள் மற்றும் பேருந்துகளின் சில்லுகளுக்கான தீர்வையினை 50 சதவீதத்தினால் குறைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

சுற்றுலா மற்றும் பொதுப் பயண சேவைகளை மேம்படுத்தும் முகமாகவும். சரக்குகளை காவிச் செல்லும் நடவடிக்கைகளை திறன்பட மேற்கொள்ளும் நோக்கிலேயே தீர்வைகள் இரத்து செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விடயம் குறித்த வர்த்தமானி அறிவிப்பும் வெளியிடப்பட்டுள்ளதாக நிதியமைச்சு குறிப்பிட்டுள்ளது. (அ-2)

# இலங்கையர் தற்கொலை; அவுஸ்திரேலியாவில் சம்பவம்

(கொழும்பு)

அவுஸ்ரேலியாவில் பிலாவூட் தடுப்பு முகாமில் தங்கியிருந்த இலங்கை இளைஞர் ஒருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக அவுஸ்திரேலியாவில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகர் அலுவலகத்திற்கு அந்த நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

எனினும் சடலத்தை இலங்கைக்கு கொண்டு வருவது குறித்து இதுவரை அவரின் உறவினர்கள் முன்வரவில்லையென தெரிவிக்கப்படுகின்றது.

தயாரத்த ஜயசேகர என்ற குறித்த இளைஞர் தனது முகவரியாக மட்டக்களப்பின் இரண்டு பிரதேசங்களை குறிப்பிட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

எனவே சடலத்தை இலங்கைக்கு கொண்டு வரவேண்டுமாயின் தமது கொன்சியூலர் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் குறித்த இளைஞரின் உறவினர்களுக்கு வெளிவிவகார அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது. (அ-2)

# க.பொ.த (உ/த) பரீட்சை முடிவுகளும் இசட் புள்ளி தொடர்பான குழப்பங்களும்

அண்மையில் வெளியான க.பொ.த (உ/த) பரீட்சைப் பெறுபெறுகளால் மாணவர்கள் பெரிதும் குழம்பிப் போயுள்ளனர். வரலாறு காணாத அளவிற்கு ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் மீள் திருத்தத்திற்காக விண்ணப்பித்துள்ளனர்.


இலங்கை ஆசிரியர்கள் சேவைச் சங்கம் (LTSU) மேற்படி பரீட்சை முடிவுகளை மிகவும் கண்டித்திருப்பதுடன் மேற்படி பரீட்சை முடிவுகளுக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை தாக்கல் செய்யவுள்ளதாக அறிவித்துள்ளது. பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனமும் (FUTA) மேற்படி பரீட்சை முடிவுகள் தொடர்பான தனது கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

பல்கலைக்கழக அனுமதிக்காக மாணவர்களை வரிசைப்படுத்த உபயோகிக்கப்படும் இசட் புள்ளியினை கணிப்பதில் தவறு நேர்ந்திருக்கலாம் எனும் வாதம் பலராலும் முன்வைக்கப்படுகின்றது.

கடந்த உயர்தரப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திற்கும் பழைய மற்றும் புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக இரு பரீட்சைகள் நடத்தப்பட்டன. மீள் பரீட்சார்த்திகள் பழைய பாடத்திட்டத்திற்கான பரீட்சைக்கு முதலாம் தரம் தோற்றும் பாடசாலை பரீட்சார்த்திகள் புதிய பாத்திட்டத்திற்கு அமைவாக பரீட்சைக்கும் தோற்றியிருந்தனர்.

எனவே ஒரு குறிப்பிட்ட பாடத்திற்கான இசட் புள்ளியைக் கணிப்பதற்கு புதிய மற்றும் பழைய பாடத்திட்டங்களுக்கு அமைவாக இரு வேறு பரீட்சை பெறுபேறுகளின் வெவ்வேறான இடை மற்றும் மாறற்திறன் பெறுமானங்கள் ஒன்றாக்கப்பட்டிருக்கலாம் என பெரதெனியா பல்கலைக்கழக பேராசிரியர் தட்கில் தெரிவித்துள்ளார்.

அவவாறு செய்வது தவறு எனவும் அவர் தெரிவித்துள்ளார். பேராசிரியர் தட்கில் தான் இலங்கையில் இசட்புள்ளி முறையை அறிமுகம் செய்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போதைய இசட் புள்ளி கணிப்பிடல் தொடர்பாக பரீட்சை திணைக்களம் பேராசிரியர் தட்கிலின் ஆலோசனையை பெறவில்லை எனவும் ஆங்கில, சிங்கள நாளேடுகள் செய்தி வெளியிட்டுள்ளன.



இசட்புள்ளி முறையானது இற்றைக்கு 10 வருடங்களுக்கு முன்னர் அப்போதைய பழைய பாடத்திட்டத்திற்கு அமைவாகவும் (4பாடங்கள்) புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாகவும் (3 பாடங்கள்)பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களை பல்கலைக்கழக அனுமதிக்காக தரப்படுத்துவதற்காகவே இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது. அது முன்பு நடைமுறையில் இருந்த கூட்டுப்புள்ளி முறையைக் காட்டிலும் ஒப்பீட்டளவில் சிறந்ததாக இருந்தது. கலைத்துறையில் பல வேறு பாடங்களில் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான பொதுவெட்டுப்புள்ளியை தீர்மானிக்கவும் இசட்புள்ளி முறை உதவியது. இசட் புள்ளி என்பது ஒரு குறிப்பிட்ட பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளிடையே ஒரு குறிப்பிட்ட மாணவனது பெறுபேறு எத்துணை தூரம் சிறந்ததாக அல்லது மோசமாக உள்ளது என்பதை அளவிடும் ஒரு புள்ளியாகும். உதாரணமாக ஒரு குறிப்பிட்ட பாடத்திற்கு மாணவன் ஒருவனது இசட் புள்ளி 1.5 ஆக இருந்தால் அப்பரீட்சைக்குத் தோற்றியோரில் 93.3% மான மாணவர்கள் அம் மாணவனின் பெறுபேற்றிலும் குறைவாகப் பெற்றுள்ளனர் எனக் கூறமுடியும்.

ஆனாலும் மேற்படி இசட் புள்ளி கணித்தலானது ஒரு குறிப்பிட்ட பாடத்தில் அனைத்து மாணவர்களும் பெற்ற புள்ளிகள் செவ்வன் பரம்பலைப் (Normal distribution) பின்பற்றுகின்றன என்ற கருதுகோளிற்கு அமையவே செய்யப்படுகின்றது. செவ்வன் பரம்பலானது ஒரு ஆகாரத்தினை (Unimodal) கொண்ட மணி வடிவ பரம்பலாகும்.

நகர் சார்ந்த வசதி படைத்த பாடசாலை மாணவர்கள், கிராமம் சார்ந்த பாடசாலை மாணவர்கள் என்பவர்களுக்கிடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் இருக்குமாயின் பரீட்சைப் பெறுபேறுகள் செவ்வன் பரம்பலைப் பின்பற்றுமா என்பது ஆய்விற்குரியது. இது தொடர்பான ஆய்வுகள் நடந்துள்ள போதும் எளிமை கருதி குறித்ததொரு பாடத்தில் மாணவர்களின் பெறுபேறுகள் செவ்வன் பரம்பலைப் பின்பற்றுவதாகக் கருதப்பட்டது.

ஆனாலும் இரு வெவ்வேறான பரீட்சைகளில் பெறுபேறுகள் ஒன்றாக்கபட்டால் அவை ஒரு ஆகாரத்தையுடைய மணிவடிவ செவ்வன் பரம்பலை பின்பற்றுமா அல்லது இரு ஆதாரங்களுடைய Bimodal இருமணிவடிவ பரம்பலை பின்பற்றுமா என்பது பரீட்சை திணைக்களத்திற்கே வெளிச்சம். தற்போதைய இசட் புள்ளி கணிக்கப்பட்ட முறையை பரீட்சை திணைக்களம் வெளிப்படுத்தாத நிலையில் பேராசிரியர் தட்கில் கூறுவதைப் போன்று மேற்படி பரீட்சைப் பெறுபேறுகளின் குழப்பம் தொடர்பாக மேலதிகமாக எதுவும் அறியமுடியாத நிலையிலேயே அனைவரும் உள்ளனர்.

**கலாநிதி செ.அறிவழகன்**
கணித புள்ளி விபரவியல் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

## கிளிநொச்சியில் சமுர்த்தி திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் முதல் தடவையாக சமுர்த்தித் திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இது தொடர்பான ஆலோசனைக்கூட்டம் நேற்று முன்தினம் காலை கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

சமுர்த்தி திட்டத்தின் அறிமுகத்தின் போது முதற்கட்டமாக 30 வீதமான பயனாளிகள் முன்னுரிமை அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு உதவி வழங்கப்படவுள்ளது.

பச்சிலைப்பள்ளி, பூநகரி, கண்டாவளை, கரைச்சி ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் சமுர்த்தி வங்கிகள் தற்காலிகமாக இயக்கப்படவுள்ளது. இதேவேளை பூநகரி உதவி அரசாங்க பிரிவுக்கு அங்குள்ள பூகோள அமைப்பை கருத்திற்கொண்டு இரண்டு வங்கிகள் இயங்கும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இதனையடுத்து ,அடுத்த கட்டமாக் பதிவினை கிராம அலுவலர் பிரிவுகளுக்கு ஒரு சமுர்த்தி வங்கி என்ற அடிப்படையில் வங்கிகள் ஆரம்பிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இன்றைய இந்த ஆலோசனைக் கூட்டத்தில் சமுர்த்தி திட்டத்தின் உதவி ஆணையாளர் நடேசராசா, யாழ்ப்பாண மாவட்ட உதவி ஆணையாளர் சிவஸ்ரீ, மேலதிக அரசாங்க அதிபர் சிறினீவாஸன், திட்டப்பணிப்பாளர் திருமதி ஜெயராணி ஆகியோர் கலந்து கொண்டனர். (அ-2)

## தேசிய புற்றுநோய் வைத்தியசாலைக்கு அருகில் கதிர்வீச்சுத் தாக்கம் இல்லை

### வைத்தியசாலை திட்டவட்டம்

மஹறகமவிலுள்ள தேசிய புற்றுநோய் வைத்தியசாலையை சூழவுள்ள பகுதிகளில் கதிர்வீச்சு காரணமாக புற்றுநோய் பரவி வருவதாக கூறப்படுவதை மஹறகம புற்றுநோய் வைத்தியசாலை நேற்று திட்டவட்டமாக மறுத்துள்ளது.

இப்பகுதிகளிலுள்ள மண், நீர் என்பன பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது கதிர்வீச்சுப் பொருட்கள் காணப்படவில்லை என வைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர் கனிஷ்க கருணாரட்ன கூறினார்.

அதேசமயம் மஹறகமவிலுள்ள பிரதேசசபை அரசியல்வாதி ஒருவர் வைத்தியசாலைக்கு அண்மித்த காணிகளை மலிவாக வாங்குவதற்காக இவ்வாறான புற்றுநோய் புரளியை பரப்பியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வைத்தியசாலையில் மத்திய கதிர்வீச்சு அலகொன்று உள்ளது. அது நன்கு பாதிக்கப்பட்ட நிலையில் பேணப்படுகிறது என வைத்தியசாலை வட்டாரம் தெரிவித்தது.

புற்றுநோய் ஆபத்து பற்றிய தகவல்களை ஆராய்வதற்காக நோய் பரம்பலியல் பிரிவின் தலைவரான டாக்டர் பபா பலிஹாவதன தலைமையிலான குழுவொன்றை சுகாதார அமைச்சு நியமித்துள்ளது.

(அ-2)

## மதுவரி திணைக்களத்திற்கு புதிய சவால் முன்வைப்பு

இந்த வருடத்தில் திறைசேரியினால் மதுவரித் திணைக்களத்திற்கு புதியசவால் ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

சகல வகையான மதுபானங்கள் ஒழித்தல் மற்றும் சட்டவிரோத மதுபானங்களை ஒழித்தல் ஆகியவை தொடர்பான சவால்களே முன்வைக்கப்பட்டுள்ளன.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய மதுவரி திணைக்கள பிரதி மதுவரி ஆணையாளர் கபில குமாரசிங்ஹ மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதே வேளை கடந்த 2010 ஆம் ஆண்டைவிடவும் 2011 ஆம் ஆண்டு மதுபானங்களின் உற்பத்தி 100 இற்கு 7 சதவீதத்தால் அதிகரிக்கப் பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள் ளது.

சுற்றுலா பயணிகளின் வருகை மற்றும் சட்டவிரோத மதுபானங்களின் உற்பத்தி ஆகியவையே இதற்கான காரணம் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ-2)

## யாழ்.கீதம் இயற்ற ஆக்கங்கள் எதிர்பார்ப்பு

யாழ். மாவட்டத்திற்கான கீதம் இயற்ற வேண்டிய தேவை யாழ்.மாவட்ட செயலகத்திற்கு உள்ளதனால் கவிஞர்களுடமிருந்து தரமான ஆக்கங்களை எதிர்பார்க்கின்றது என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் அறிவித்துள்ளார்.

இக்கீதத்திற்காக அனுப்பி வைக்கப்படும் கவிதைகள் நல்லாட்சியே நமது நோக்கு என்னும் வாசகம் அல்லது கருதது உள்ளடககப்படல் வேண்டும். அத்துடன் வினைத்திறனும் பயனுறுதியும் கொண்ட பொதுச் சேவை பற்றிய கருத்துக்கள் கொண்டவையாக இருத்தல் வேண்டும்.

மேலும் யாழ்.மாவட்டத்தின் கடல் வளம், நீர்வளம், விவசாயம் மற்றும் கல்வி, சமயம், கலை கலாசாரம், பண்பாடு போன்றவற்றை உள்ளடக்கியதாக அமைய வேண்டும். அத்துடன் இக்கவிதைகள் 15-20 வரிகளுக்குட்பட்டதாகவும் யாப்பிலக்கண விதிகளுக்கு அமைவாகவும் இயற்றப்படல் வேண்டும். இக்கவிதையாக்கங்கள் யாவும் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் அரசாங்க அதிபர் ,மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும் என செயலகம் அறிவித்துள்ளது. (அ)

# மீண்டுமொரு "பனிப்போர்" காலத்திற்குள் நுழைகிறதா உலகம்?

பாகிஸ்தான், இலங்கை, தன்சானியா போன்ற நாடுகளுடன் வர்த்தக, நிதி, முதலீட்டுச் செயற்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தனது செல்வாக்கை விரிவுபடுத்தும் வகையில் சீனா தனது முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இது தென்னாசியாவில உள்ள ஆதிக்கம் மிக்க இந்தியாவிற்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளதுடன் அமெரிக்காவிற்கும் இது நெருக்கடியை ஏற்படுத்துவதாக உள்ளது.

இவ்வாறு பிரித்தானியாவை தளமாகக் கொண்ட த கார்டியன் ஊடகத்தில் சிமொன் டிஸ்டல் எழுதியுள்ள செய்தி ஆய்வில தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் முழு விபரம் வருமாறு,

ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தான் நாடுகள் மீதான நடவடிக்கைகளின் பின்னரான அமெரிக்காவின் பாதுகாப்பு மூலோபாயம் தொடர்பாக அறிவிப்பதற்காக கடந்த வாரம் அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா, அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகனுக்கு வருகை தந்திருந்தார்.

அங்கு, அமெரிக்க இராணுவம் புதிய நூற்றாண்டில் எதிர்கொள்ளும் சவால்கள், பத்தாண்டு காலமாக மேற்கொள்ளப்பட்ட யுத்த நடவடிக்கைகளின் பின்னர் முன்னுரிமைகளை மாற்றுதல் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாக அமெரிக்க அதிபர் தனது உரையில் குறிப்பிட்டபோதிலும், குறிப்பாக சீனா என்ற சொல்லை அவரது உரையின் எந்த இடத்திலும் கேட்க முடியவிலலை.

இச்சொல்லை விட்டமைக்கான காரணத்தைப் புரிந்து கொள்ள முடிகின்றது. ஆனால், இது தவறான கருத்தாக்கத்திற்கு வழிவகுக்கின்றது. சமாதானத்தை உண்டு பண்ணுபவராக தேர்தலில் மீளவும் போட்டியிடுகின்ற அரசியல்வாதியென்ற வகையில், உலகின் வல்லரசாக உள்ள அமெரிக்காவின் ஒரேஒரு தீவிர போட்டியாளருடன் புதிய பனிப்போர் ஒன்றை உருவாக்குவதற்கான தோற்றத்தை உருவாக்கிக் கொள்ளவதில் ஒபாமா எந்தவொரு விருப்பத்தையும் கொண்டிருக்கவில்லை.



ஆனால், கவாயில் பிறந்த ஒபாமா ஆசிய-பசுபிக் பிராந்தியத்தல செல்வாக்குச் செலுத்தும் நோக்குடன் சீனாவால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு முயற்சிகளையும் தோற்கடிப்பதில் நிச்சயம் முயற்சிப்பார் என்பது அண்மையில் ஒபாமாவால் மேற்கொள்ளப்பட்ட ஆசிய பயணத்திலிருந்து தெளிவாகின்றது.

அமெரிக்க மூலோபாயக் கொள்கையானது முக்கியத்துவம் பெற்ற இவ் ஆசிய - பசுபிக் பிராந்தியத்தின் மீது அதிக கவனத்தைக் குவித்துள்ளது. அமெரிக்கப் படைகளை ஈராக்கிலிருந்து எடுத்தகையோடு சீனாவுடன் யுத்தத்தை ஆரம்பிப்பதில் கூட்டுப் படைத் தளபதிகளின் தலைவரான ஜெனரல் மாற்றின் டெம்சி ஆர்வம் கொண்டிருக்கவிலலை. ஆனால், சீனாவின் பாதுகாப்புச் செலவினங்கள் ஆண்டுதோறும் அதிகரித்து வருவதை டெம்சி நன்கறிவார். சீனாவின் இத்துரித வளர்ச்சியின் மூலம் இப்பிராந்தியத்தில் ஏற்படும் மோதல்களைத் தவிர்ப்பதற்கான மூலோபாயக் கொள்கைகளை அதிக கவனத்துடன் வகுத்துக்கொள்ள வேண்டும் என் பதை மூலோபாய ஆவணம் வலியுறுத்துகின்றது.

1945 ஆம் ஆண்டிலிருந்துஅமெரிக்கா தனது அதிகாரத்தைச்செலுத்திவரும் ஆசிய - பசுபிக் பிராந்தியத்தில் சீனாவின் நீர்மூழ்கிக் கப்பல்கள் மற்றும் ஏவுகணைத் தளங்கள் எவ்வாறு பலப்படுத்தப்பட்டு வருகின்றன என்பதை டெம்சி உற்று நோக்கி வருகின்றார்.

எதிர்காலத்தில் மாற்றப்படவேண்டிய மூலோபாயம் தொடர்பாகவே ஒபாமா தனது பென்டகன் உரையில் தெரிவித்திருந்தார் என டெம்சி குறிப்பிடுகிறார்.

மக்கள் தொகைப்போக்கு, பூகோள அரசியல் போக்கு, பொருளாதாரப் போக்கு, இராணுவப்போக்கு போன்ற எல்லாப் போக்குகளும் தற்போது பசுபிக் பிராந்தியத்தை நோக்கியே நகர்ந்து செல்கின்றன. ஆகவே நாமும் அதிகளவான மூலோபாய சவால்களை பசுபிக் பிராந்தியத்தில் சந்திக்க வேண்டி ஏற்படும். ஆனால், இந்து சமுத்திரக் கரையோரங்களிலும் இவ்வாறான சவால்களை எதிர்கொள்ள வேண்டும் என் ஜெனரல் டெம்சி குறிப்பிட்டுள்ளார்.

தற்போதும் சீனா தொடர்பாக எதுவும் குறிப்பிடப்படவிலலை. ஆனால், டெம்சி யாரைப் பற்றி எதைப்பற்றி பேசினார்? என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. இந்த விடயத்தில் எவரும் இதனைப் புரிந்து கொள்ளத் தவறமாட்டார்கள். அமெரிக்காவின் எதிர்காலப் பொருளாதாரம் மற்றும் எமது தேசியப் பாதுகாப்பு போன்ற விடயங்களை முக்கியத்துவப்படுத்தியே இப் பிராந்தியம் தற்போது வளர்ந்து வருகின்றது.

## COLD WAR 2

எடுத்துக்காட்டாக எமது இராணுவத்தின் தொழில்நுட்பங்கள் மற்றும் இதன் சுதந்திரமான செயற்பாடுகள் போன்றவை இப் பிராந்தியத்தில் முக்கியத் துவப்படுதப்படுகின்றது என அமெரிக்கப் பாதுகாப்புச் செயலர் லியோன் பனெற்றா தெரிவித்துள்ளார்.

சீனா இது தொடர்பாக் இன்னமும் நேரடியான பதிலைத் தரவில்லை. ஆனால் சீனாவானது அமெரிக்காவால் நகர்த்தப்படும் ஒவ்வொரு நகர்வுடனும் போடியிடத் தயாராக உள்ளதாக சீன கம்யூனிச கட்சியின் வெளி யீபான குளோடல்ரைம்சில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவுடன் புதிய பனிப்போர் ஒன்று உருவாவதைத் தடுக்கவே நாங்கள் விரும்புகிறோம். ஆனால் அதேவேளையில், அயல் பிராந்தியத்துடன் சீனாவின் பாதுகாப்பு பிரசன்னத்தைக் கைவிடவேண்டும் என்பதை நாம் ஏற்றுக்கொள்ளக்கூடாது என இப்பத்திரிகையின் ஆசிரியர் உரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகரிக்கப்பட்டுவரும் அமெரிக்க ஈடுபாடானது உறுதிப்பாட்டை அதிகரிப்பதாக அமைந்திருக்கலாம். ஆனால், அமெரிக்காவின் இராணுவச் செயற்பாடுகள் அமைதியைக் குலைப்பதாக இருக்கலாம் என க்சின்யா என்னும் சீனச்செய்தி நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.வரப்போகும் 21 ஆம் நூற்றாண்டில் அமெரிக்க- சீன போட்டியானது அதிகரிக்கும் என்பதற்கான காரணிகள் ஏற்கெனவே தெளிவாக தெரிகின்றன. குறிப்பாக தோற்கடிக்கப்பட்ட தேசியவாதியான ஹூமின்ராங்கின் இறுதித் தங்குமிடமாக இருந்த தாய்வான் உள்ளடங்கலாக இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான மோதல் நிலைக்கான முக்கிய காரணங்கள் தெளிவாகத் தெரிகின்றன.

சீனாவைப் பொறுத்தளவில் தாய்வான் ஒரு துரோகம் இழைத்த மாகாணமாகவே கருதப்படுகின்றது.

தாய்வானுடனான சீனாவின் உறவுநிலை பின்னர் சுமூக நிலையை அடைந்த போதிலும் சீனாவானது தற்போது தாய்வான் கால்வாயை ஊடறுத்து நூற்றுக்கணக்கான ஏவுகணைகளை நிலைநிறுத்தி இருப்பதால் இது தாய்வானை அச்சம் கொள்ள வைத்துள்ளது.

தாய்வான் பாதுகாப்பிற்கு நிழல் பொறுப்பாளியாகவும் பிரதான ஆயுத வழங்குநராகவும் செயற்படும் அமெரிக்கா மீது பனிப்போர் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது எந்த நேரம் எனினும் சுவாலை விட்டெரியலாம்.

தென் மற்றும் கிழக்கு சீன கடற் பிரதேசங்களிலும் அமைந்துள்ள தீவுக் கூட்டங்கள் மீதான சீனாவின் பிராந்திய மற்றும் வள ஆதிக்கமானது யுத்தம் மூள்வதற்கான பிறிதொரு காரணியாக அமைந்துள்ளது. அமெரிக்காவுடன் மட்டுமன்றி சீன நாடானது வியட்நாம் போன்ற அயல்நாடுகளுடன் முரண்பாட்டை தோற்றுவித்துள்ளது.

வியட்நாம் அமெரிக்காவுடன் நெருக்கமாக பாதுகாப்பு உறவுகளை ஏற்படுத்தி வரும் ஒரு நாடாகும்.

சீனாவின் பிராந்திய செல்வாக்கு அதிகரிப்பானது ஜப்பான், தென் கொரியா, சிங்கப்பூர், மலேசியா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளிலும் அச்சத்தை தோற்றுவித்து வருகின்றது. இந்த நாடுகள் தமது வர்த்தக உறவுகளை சீனாவுடன் மேற்கொண்டு வருகின்ற போதிலும் சீனாவின் பிராந்திய தலையீடு இந்நாடுகளுக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.

ஒபாமாவின் ஆசிய பயணத்தின்போது டர்வின் மற்றும் சாத்தியப்பட்டால் பிலிப்பைன்சிலும் இராணுவத்தளம் ஒன்றை ஆரம்பித்தல் தொடர்பான சமிக்ஞையை வழங்கியிருந்தார். சீனாவை விட வட கொரியாவுக்கு எதிராக அதிகம் மேற்கொள்ள வேண்டியுள்ள போதிலும் தற்பொழுது அமெரிக்காவின் ஜப்பானுடனான தொலைதூர ஏவுகணை பாதுகாப்பு ஒத்துழைப்பானது மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

வேறு உலக நாடுகளில் நிலை நிறுத்தப்பட்டிருந்த அமெரிக்கப் படைகள் திருப்பி அழைக்கப்படுகின்ற போதிலும் தென் கொரியா மற்றும் ஜப்பான் ஆகிய இரு நாடுகளிலும் தொடர்ந்தும் அமெரிக்கப் படைகள் தக்க வைக்கப்படுவர். அனைத்துலக கடல் எல்லைகளை பாதுகாப்பதற்கு அதிமுன்னுரிமை வழங்கப்படுகின்றது.

இவற்றைவிட அமெரிக்க-சீன முறுகல் நிலைக்கு குறிப்பிடத்தக்க வேறு காரணங்களும் உள்ளன. பூகோள- மூலோபாய விடயத்தைப் பொறுத்தளவில் இந்தியாவுடன் சீனா ஏற்படுத்திக் கொண்ட உறவின் பின்னால் உள்ள சீனாவின் நோக்கத்தை கண்டறிவதற்காக இந்தியாவுடன் புஷ் நிர்வாகத்தால் ஆரம்பிக்கப்பட்ட நடவடிக்கையை சமாளிக்கவே அமெரிக்கா விருப்பம் கொண்டுள்ளது.

பாகிஸ்தான், இலங்கை, தன்சானியா போன்ற நாடுகளுடன் வர்த்தக, நிதி, முதலீட்டு செயற்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தமது செல்வாக்கை விரிவுபடுத்தும் வகையில் சீனா தனது முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

இது தென்னாசியாவில் உள்ள ஆதிக்கம் மிக்க இந்தியாவிற்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளதுடன் அமெரிக்காவிற்கு இது நெருக்கடியை ஏற்படுத்துவதாக உள்ளது.

அமெரிக்கா, பர்மாவுடன் இராஜிய உறவுகளை விரிவுபடுத்திக் கொண்டதன் மூலம் சீனாவிற்கு எதிரான போட்டியை அமெரிக்கா மேற்கொண்டது. அதாவது பர்மாவில் ஜனநாயக தலைவராக ஆங்சாங் சூகிக்கு ஆதரவு வழங்க விருப்பம் காட்டுவது என்பது உண்மையானதாகும்.

ஆனால், அமெரிக்கா இதில் தனது சொந்த நலனையும் கவனத்தில் கொண்டுள்ளது. சீனா தனது வர்த்தகச் செயற்பாடுகளில் அதிக நன்மைகளை அடைந்துள்ள ஆபிரிக்காவின் உப சகாராவில் தற்போது யுத்தத்திற்குத் தேவையான ஆயுத தளபாடங்கள், பொருளாதார வளங்கள், அரசியற் செல்வாக்கு, இராணுவப் பலப்படுத்தல்கள் என்பன மீளவும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது லத்தீன் அமெரிக்காவிலும் அதிகரித்து வருகின்றது.

அமெரிக்காவின் போக்கானது மேற்கூறிய இரு பிராந்தியங்களின் மீதும் இருக்கவில்லை. அமெரிக்கா தற்போது ஜனநாயகம் தொடர்பாகவே அதிகம் பேசி



அமெரிக்க கண்டம்வரை தேடிச் சென்று உறவு கொள்ளும் சீன அதிபர் ஹூ ஜின்டா(வலது) வெனிசுவெலா அதிபர் சாவேஸுடன்.

வருகின்றது. ஆனால் இதன் பிரதான நோக்காக பாதுகாப்பு மற்றும் தீவிரவாதம் போன்றவற்றின் மீதே அதிகம் காணப்படுகின்றன.

ஆபிரிக்கா மீதான பென்ரகனின் கட்டளை அண்மையில் உருவாக்கப்பட்டுள்ள போதிலும் கூட, சிறப்பாக மக்ரெப் மற்றும் சாகெல் பிராந்தியங்களின் மீதே தற்போது அமெரிக்காவின்கவனம்அதிகம்குவிந்துள்ளது.

வடகொரியாவை சீனா பாதுகாப்பதன் ஊடாகவோ அல்லது சிரியா, ஈரான், சூடான் போன்ற சிக்கலான பிராந்தியங்களிற்கு எதிரான நடவடிக்கைகளிற்கு சீனா தனது ஆதரவை வழங்குவதில் தயக்கம் காட்டினாலும் கூட, சீனா தற்போது அதிகரித்த இராஜதந்திர மற்றும் அரசியல் சவால்களை வழங்கி வருகின்றது.

அமெரிக்க விமர்சனத்தைப் பார்க்கும் போது, சீனாவானது உலகில் சிறந்த குடிமகனாக பொறுப்புடன் செயற்படத் தவறியுள்ளதானது பொருளாதார ரீதியாக இதன் ஏற்றுமதி மீது தாக்கத்தைச் செலுத்துகின்றது. அத்துடன் பொருளாதார ரீதியில் ஐரோப்பிய வலயத்திற்கு உதவி புரிவதற்கு இது தயக்கம் காட்டுவதாக அமைந்துள்ளது.

21 ஆம் நூற்றாண்டில் சீனா மற்றும் அமெரிக்காவிற்கு இடையிலான பனிப்போரைத் தவிர்க்க முடியும். இவ்விரு நாடுகளும் பரஸ்பரம் நன்மதிப்பு, நல்லுறவு சிறந்த செயற்பாடுகளை மேற்கொண்டு வரும் பட்சத்தில் இவற்றுக்கிடையிலான உறவைப் புதுப்பித்துக் கொள்வதற்கான சாத்தியப்பாடுகள் உள்ளன. ஜனநாயகம், பண்புகள், திறந்த மனப்பாங்கு, மத நம்பிக்கை, இணைந்த அரசியல், பொருளாதார நிலைப்பாடுகள் என்பன அடிப்படையில் இவ்விரு நாடுகளுக்கும் இடையில் வேறுபட்டுக் காணப்படுகின்றன. ஆனால் இவ்விடயங்களில் இவ்விரு நாடுகளும் இணைந்து செயற்பட்டுக் கொள்ள முடியும்.

வரலாற்று ரீதியாக 19 ஆம் நூற்றாண்டில் பிரித்தானியாகவும், 20ஆம் நூற்றாண்டில் அமெரிக்காவும் உலக வல்லரசாக இருந்தது போன்று இனிவருங்காலங்களில் சீனா வல்லரசாக வருவதற்காகச் செயற்படுகின்றது.

இதன் நம்பிக்கை, வளர்ச்சி, தனது சொந்த அதிகாரத்தில் உள்ள நம்பிக்கை என்பன இவ்வாறு சீனா உலக வல்லரசாக வருவதற்குக் காரணமாக அமையலாம்.

பிரித்தானிய ஊடகம் பத்தி

# மேர்வினுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை-ஆளுங்கட்சி அழைப்பு

(கொழும்பு)

அமைச்சர் மேர்வின் சில்வாவை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒழுக்காற்று குழுவின் முன் சாட்சியமளிக்க வருமாறு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமை பணிப்புரையை விடுத்துள்ளது.

களனி பிரதேச சபைக்கு சொந்தமான கிரிபத்கொட வாராந்த சந்தையின் வரி அறவீடுகளை மேர்வின் சில்வா இதுவரை காலமும் மேற்கொண்டு வந்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து களனி பிரதேச சபை மேர்வின் சில்வாவுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதுடன் அத்துடன் ஜனாதிபதிக்கும் இதுதொடர்பில் முறைப்பாட்டை செய்துள்ளது.

இதனையடுத்தே மேர்வின் சில்வா ஒழுக்காற்று குழுவின் முன் ஆஜராகுமாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமை பணிப்புரை விடுத்துள்ளது.

இதேவேளை, மேர்வினுக்கு எதிராக களனி பிரதேசசபை எடுக்கும் நடவடிக்கைகளுக்கு மேல் மாகாணத்தின் பல பிரதேசசபைகளும் ஆதரவை வெளியிட்டுள்ளன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் கூடிய கட்சி செயற்குழு உறுப்பினர்கள் இரண்டு தரப்பினரிடமும் ஒழுக்காற்று விசாரணை நடத்துவதென தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# வடக்கில் மீண்டும் அதிகளவான சரணாலயங்கள் அமைக்க முடிவு

(கொழும்பு)

வடமாகாணத்தில் மீண்டும் அதிகளவில் சரணாலயங்களை உருவாக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் வடக்கில் பயிர் நிலங்களும் சரணாலயங்களும் அழிவடைந்துள்ளதாக வனப்பாதுகாப்பு ஆணையாளர் எச்.எம்.பீ.ஹிடி சேக்கர் தெரிவித்துள்ளார்.

எனவே, மீண்டும் வடபகுதியில் சரணாலயங்களை உருவாக்க அதிகளவில் பயிர்கள் அவசியப்படுத்தவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி வடக்கில் அனைத்து மாவட்டங்களிலும் சரணாலயங்கள் அமைக்கப்படவுள்ளதுடன் அது குறித்து மாவட்ட செயலகங்களில் அலுவலகங்களும் அமைக்கப்படுவதாக வனப் பாதுகாப்பு ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

பல கட்டங்களாக வடக்கில் பயிர்ச் செய்கைத் திட்டம் அமுல்படுத்தவுள்ளதாகவும் அவர் கூறினார். (அ-2)

# 2015 ஆம் ஆண்டில் 50 ஆயிரம் மெற்றிக்தொன்

## — அரிசியை ஏற்றுமதி செய்ய எதிர்பார்ப்பு —

(கொழும்பு)

இலங்கை அரிசி உற்பத்தியில் தன்னிறைவு அடைந்துள்ள நிலையில் இந்த வருடம் முதல் 50 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை ஏற்றுமதி செய்ய விவசாய அமைச்சு தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் 2015 ஆம் ஆண்டாகும் போது 2 இலட்சம் மெற்றிக் தொன் அரிசி ஏற்றுமதி செய்வதே அரசாங்கத்தின் இலக்காகும் என அமைச்சின் மேலதிகச் செயலாளர் சாந்த அமடியாகொட தெரிவித்துள்ளார்.

அரிசி ஏற்றுமதி இலக்குகள் அடங்கிய விவசாய அமைச்சின் யோசனை நேற்றைய திறைசேரிக்கு கையளிக்கப்படவுள்ளதாகவும் அவர் கூறினார். அரிசி ஏற்றுமதி தொடர்பில் கவனிக்க விசேட குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

அரிசி ஏற்றுமதிக்னெ விசேட வலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மன்னார், அம்பாறை, பொலநறுவை, அம்பாந்தோட்டை மற்றும் மகாவலி சீ, பீ வலயங்களில் அமைக்கப்பட்டுள்ள இந்த வலயங்களிலே ஏற்றுமதிக்கான அரிசி வகைகள் உற்பத்தி செய்யப்படும் என்று கூறிய அவர் அரிசி ஏற்றுமதிக்கு ஏற்கனவே அமைச்சரவையின் அனுமதி கிடைத்துள்ளதாகவும் குறிப்பிட்டார். (அ-2)

# லலித், குகன் குறித்து கவனம் செலுத்தப்படும்

## ஐ.நா.தெரிவிப்பு

(கொழும்பு)

ஜே.வி.பி.கிளர்ச்சிக்குழு உறுப்பினர்களான லலித் குமார் வீரராஜ், குகன் முருகானந்தன் ஆகியோர் காணாமல் போன சம்பவம் குறித்து கவனம் செலுத்தப்படும் என ஐக்கிய நாடுகள் அமைப்பு அறிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவை விசாரணை நடத்தவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. கடந்த டிசெம்பர் மாதம் 9 ஆம் திகதி முதல் குறித்த நபர்களைக் காணவில்லை. இவர்கள் காணாமல் போன சம்பவம் குறித்து ஐக்கிய நாடுகள் அமைப்பில் அண்மையில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த சம்பவம் குறித்து கவனம் செலுத்தி வருவதாக ஐக்கிய நாடுகளின் பேச்சாளர் அறிவித்துள்ளார். (அ-2)

# ஜி.எஸ்.பி.வரிச்சலுகை திட்டத்தை நிறுத்த ஊடகவியலாளர்கள் முயற்சி

## சிங்கள நாளேடு தகவல்

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியத்தினால் இலங்கைக்கு வழங்கப்பட்டு வந்த ஜி.எஸ்.பி. வரிச்சலுகைத் திட்டத்தை இடைநிறுத்த ஊடகவியலாளர்கள் முயற்சித்துள்ளதாக சிங்கள பத்திரிகையொன்று குற்றம் சமத்தியுள்ளது.

நாட்டிலிருந்து வெளியேறிச்சென்ற சில ஊடகவியலாளர்கள் இந்த சதித் திட்டத்தின் பின்னணியில் இயங்கியுள்ளனர் எனவும் ஜி.எஸ்.பி. வரிச் சலுகைத்திட்டம் இரத்தச் செய்யப்பட வேண்டுமென வலியுறுத்தி சுமார் 700 மகஜர்களை குறித்த ஊடகவியலாளர்கள் அனுப்பி வைத்துள்ளனர் என அப்பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

சுதந்திர ஊடக அமைப்பின் செயற்பாட்டாளர்களான சுனந்த தேசப்பிரிய, உவிந்து குருகுலசூரிய உள்ளிட்ட நாட்டை விட்டு வெளியேறிய பலர் இவ்வாறு அரசாங்கத்திற்கு எதிராக செயற்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சதி முயற்சிக்கு ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் ஒத்துழைப்பு வழங்கியுள்ளார்.

மரண அச்சுறுத்தல் உள்ளதாக போலியாக தெரிவித்து நாட்டை விட்டுத் தப்பிச் சென்று இலங்கைக்கு எதிராக பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

உவிந்து குருகுலசூரிய அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றின் உதவியுடன் இலங்கைக்கு எதிராக இணையத்தளமொன்றை நடத்தி வருவதாக குறித்த சிங்கள பத்திரிகை குற்றம் சுமத்தியுள்ளது. (அ-2)

# 2012.01 11 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- ★ 1055-தியோடோரா பைசண்டைன் பேரரசியாக முடிசூடினாள்.
- ★ 1569-முதலாவது குலுக்குச் சீட்டு இங்கிலாந்தில் பதிவாகியது.
- ★ 1693-சிசிலியில் எட்னா எரிமலை வெடித்ததையடுத்து இடம்பெற்ற பெரும் நிலநடுக்கம் சிசிலி மற்றும் மோல்ட்டாவின் பல பகுதிகளை அழித்தது.
- ★ 1779-மணிப்பூரின் மன்னராக சிங் -தாங் கோம்பா முடிசூடினார்.
- ★ 1782-பிரித்தானியர், சேர் எட்வேர்ட் ஹியூஸ் மற்றும் சேர் ஹெக்டர் மன்ரோ தலைமையில் திருகோணமலையைச் கைப்பற்றினர்.
- ★ 1787-யுரேனஸ் கோளின் இரண்டு துணைக் கோள்கள் கண்டுபிடிக்கப்பட்டன.
- ★ 1805-மிச்சிகன் பிரதேசம் அமைக்கப்பட்டது.
- ★ 1851-சீனாவில் குயிங் அரசிற்கெதிராக ஹொங் க்சியூகான் என்பவர் தலைமையில் தாய்பிங் என்ற இராணுவக் குழு ஆரம்பிக்கப்பட்டது.
- ★ 1861-அமெரிக்க உள்நாட்டுப் போர்: அலபாமா ஐக்கிய அமெரிக்காவில் இருந்து விலகியது.
- ★ 1879-ஆங்கிலோ- சூளு போர் ஆரம்பமானது.
- ★ 1878-பால் முதற் தடவையாக போத்தலில் அடைத்து விற்கப்பட்டது.
- ★ 1911-காம்ரேட் என்ற பத்திரிகையை விடுதலைப் போராட்ட வீரர் மவுலானா முகம்மது அலி கொல்கத்தாவில் வெளியிட ஆரம்பித்தார்.
- ★ 1922-நீரிழிவுக்கு மருந்தாக மனிதரில் இன்சுலின் முதன் முதலில் பயன்படுத்தப்பட்டது.
- ★ 1942-இரண்டாம் உலகப் போர்: ஜப்பான் நெதர்லாந்தின் மீது போரை அறிவித்தது.
- ★ 1942-இரண்டாம் உலகப் போர்: ஜப்பான் கோலாலம்பூரைக் கைப்பற்றியது.
- ★ 1943-ஐக்கிய அமெரிக்காவும் ஐக்கிய இராச்சியமும் சீனாவின் மீதான நில உரிமையை இழந்தன.
- ★ 1946-என்வர் ஹோக்ஸா அல்பேனியாவின் சர்வாதிகாரியாகத் தன்னை அறிவித்து அதனைக் குடியரசாக்கினார்.
- ★ 1957-ஆபிரிக்க உடன்பாடு டாக்கார் நகரில் எட்டப்பட்டது.
- ★ 1962-பெருவில் இடம்பெற்ற சூறாவளி காரணமாக 4 ஆயிரம் பேருக்கு மேல் இறந்தனர்.
- ★ 1972-கிழக்கு பாகிஸ்தான் வங்காளதேசம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
- ★ 1998-அல்ஜீரியாவில் நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

**பிறப்புக்கள்**


- ★ 1924-றொஜர் கிலெமின், நோபல் பரிசு பெற்றவர்
- ★ 1973-ராகுல் டிராவிட், இந்தியத் துடும்பாட்ட வீரர்

**இறப்புக்கள்**

- ★ 1932-திருப்பூர் குமரன், இந்திய விடுதலைப் போராட்ட தியாகி (பி.1904)
- ★ 1968-ஐசடோர் ஐசாக் ராபி, நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (பி.1898)
- ★ 1975-நீலாவணன், ஈழத்துக் கவிஞர் (பி.1931)
- ★ 1976-ஏராம்பு சுப்பையா, இலங்கையின் நடன ஆசிரியர்
- ★ 1983-பிர்லா, இந்தியத் தொழிலதிபர் (பி.1894)
- ★ 1991-கார்ல் ஆன்டர்சன், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (பி.1905)
- ★ 2007-எருவில் மூர்த்தி, ஈழத்துக் கவிஞர்
- ★ 2008-எட்மண்ட் ஹில்லரி, நியூசிலாந்து மலையேறுநர் (பி.1919)

**சிறப்பு நாட்கள்**

- ★ அல்பேனியா- குடியரசு தினம் (1946)
- ★ நேபாளம்- ஐக்கிய தினம்



★ 1966- இந்தியாவின் 2 ஆவது பிரதமரான லால் பகதூர் சாஸ்திரியின் நினைவு தினம் (பி.1904)

# தெரிவுக்குழுவில் இடம்பெற்றால் அரசியல் தீர்வு சாத்தியமாம்!

## த.தே.கூட்டமைப்பை அழைக்கிறார் சமரசிங்க

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது தொடர்பான பாராளுமன்ற தெரிவுக் குழுவில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு இடம்பெற்றால்தான் அரசியல் தீர்வு என்பது யதார்த்தமாகும்.

எனவே, கூட்டமைப்பு அதில் பங்கெடுக்க வேண்டும் என்று பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரும் மனித உரிமைகள் தொடர்பான ஜனாதிபதியின் விசேட தூதுவருமான மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

கூட்டமைப்பு பேச்சு நடத்தினாலும் பாராளுமன்ற தெரிவுக்குழுவிடம் இடம்பெறுவது அவசியமானதாகும். காரணம் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உள்ளிட்ட மேலும் பல கட்சிகளுடன் தீர்வு விடயம் தொடர்பில் பேச்சு நடத்த வேண்டும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

எது எவ்வாறாயினும் அரசியல் தீர்வு செயற்பாட்டில் பொலிஸ் அதிகாரங்களை உள்ளடக்குவது சாத்தியமற்ற விடயமாகும்.

இலங்கை போன்றதொரு நாட்டில் மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது சாத்தியமற்றதாகவே காணப்படுகின்றது எனவும் அமைச்சர் கூறினார். (அ-2)

# பொதுமக்கள் நிவாரணப்பிரிவுக்கு கிடைக்கும் முறைப்பாடுகளுக்கு 14 நாட்களுக்குள் தீர்வு

## பொலிஸ்மா அதிபர் பணிப்பு

(கொழும்பு)

பொலிஸ்மா அதிபரின் பொதுமக்கள் நிவாரணப் பிரிவுக்குக் கிடைக்கப் பெறும் முறைப்பாடுகளுக்கு 14 நாட்களுக்குள் உரிய தீர்வைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கும்படி பிரதேசங்களுக்குப் பொறுப்பான சகல பிரதிப் பொலிஸ்மா அதிபர்களுக்கு பொலிஸ்மா அதிபர் என்.கே.இலங்கக்கோன் பணிப்புரை விடுத்துள்ளார்.

இதுதொடர்பான அறிவுறுத்தல்கள் சம்பந்தப்பட்ட சகல பிரதிப் பொலிஸ்மா அதிபர்களுக்கும் வழங்கப்பட்டிருப்பதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் பல்வேறு பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்யப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படாத ஆயிரத்து 829 முறைப்பாடுகள் தொடர்பில் பொலிஸ்மா அதிபரின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது.

அவற்றில் ஆயிரத்து 322 முறைப்பாடுகளுக்குப் பொலிஸ்மா அதிபர் தீர்வு பெற்றுக் கொடுத்துள்ளாரென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேபோன்று கடந்த வருடம் பொலிஸ்மா அதிபரின் பொதுமக்கள் நிவாரணப் பிரிவு 36 தடவைகள் கூடி ஆராய்ந்துள்ளதாகத் தெரிவித்த பொலிஸ் பேச்சாளர் வடக்கு, கிழக்கு உட்பட நாடு முழுவதிலுமிருந்து இந்தப் பிரிவுக்கு பொதுமக்கள் நேரில் வந்து பலதரப்பட்ட முறைப்பாடுகளை பதிவு செய்துள்ளதாகவும் கூறினார்.

இந்நிலையிலேயே பொதுமக்களின் முறைப்பாடுகள் தொடர்பில் அந்தந்தப் பிரதேசங்களுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் எதிர்வரும் காலங்களில் உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறும் பொலிஸ்மா அதிபர் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

(அ-2)

# அதிகமான காபனீரொட்சைட் வெளியேற்றம்; தள்ளிப்போனது பனியுகக்காலம்

## விஞ்ஞானிகள் ஆய்வில் தகவல்

(கொழும்பு)

அதிகப்படியான காபனீரொட்சைட் வெளியேற்றத்தால் அடுத்த பனியுகக் காலம் தள்ளிப் போயுள்ளதாக ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

கடந்த பனியுகக் காலம் இன்றைக்கு 11 ஆயிரத்து 500 ஆண்டுகளுக்கு முன் முடிவடைந்ததாக விஞ்ஞானிகள் கணித்துள்ளனர். இதனடிப்படையில் அடுத்த பனியுகம் குறித்து விஞ்ஞானிகள் ஆய்வு மேற்கொண்டுள்ளனர்.

இதற்கு பூமியின் சுற்றுப்பாதை தொடர்பான தகவல்கள் மற்றும் ஏனைய காரணிகளை விஞ்ஞானிகள் ஆய்வு செய்து அடுத்த பனியுகம் பற்றி கணித்துள்ளனர்.

இந்த ஆய்வு தொடர்பான தகவலை நேச்சர் ஜியோ சயன்ஸ் என்ற இதழ் வெளியிட்டுள்ளது. இதில் அடுத்த பனியுகக் காலம் இன்னும் ஆயிரத்து 500 ஆண்டுகளுக்குப் பின் ஆரம்பிக்கப்படலாம் என கணித்துள்ளனர். ஆனால், மனிதர்கள் அதிகப்படியான காபனீர்ரொட்சைட்டை வெளியேற்றி வருவதால் பூமி உஷ்ணமடைந்து வருகின்றது. இதனால் அடுத்த பனியுகம் மேலும் தள்ளிப் போகலாம் என விஞ்ஞானிகள் குறிப்பிட்டுள்ளனர். (அ-2)

# ஊழியர் சேமலாப நிதியை கொள்ளையடிக்கவே திருத்தச் சட்டமூலம் கொண்டு வரப்படுகிறது

## ஜே.வி.பி.குற்றச்சாட்டு

(கொழும்பு)

தனியார்துறை ஊழியர்களின் ஊழியர் சேமலாப நிதியிலிருக்கும் ரூபா 90 ஆயிரம் மில்லியன் ரூபாய்களை கொள்ளையடிப்பதற்கே பாராளுமன்றத்தில் இந்த நிதியம் தொடர்பான திருத்தச் சட்ட மூலம் கொண்டு வரப்படவுள்ளது.

இந்தக் கொள்ளையை கடுமையாக எதிர்ப்பதாக ஜே.வி.பி.அறிவித்தது. இந்த நிதி அரசாங்கத்திற்கு சொந்தமான தல்ல. ஊழியர்களே இதன் உரிமையாளர்கள் என்றும் அக்கட்சி தெரிவித்தது.

இது தொடர்பாக ஜே.வி.பியின் பாராளுமன்றக் குழுத் தலைவரும் எம்.பியுமான அனுரகுமார திஸாநாயக்க மேலும் கருத்து தெரிவிக்கையில்,

தொழில் அமைச்சர் அலுவலகம் மற்றும் நிதியத்திற்கான 30 மாடி கட்டடத்தை நிர்மாணிப்பதற்காக இந்நிதியத்திலிருந்து 50 வீதத்தை பெற்றுக் கொள்வதற்கு இச் சட்ட மூலம் கொண்டு வரப்படவுள்ளது. இந்த நிதியம் தனியார்துறை ஊழியர்களுக்கு சொந்தமானது. மத்திய வங்கி அதன் பாதுகாப்பாளனாகும். வருடம் ஒருமுறை இந்த நிதியம் தொடர்பாக அறிக்கை வெளியிடுவதே அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

இவ்வாறானதோர் நிலையில் இந்த நிதியத்தில் அரசாங்கம் கைவைக்க முயற்சிப்பது பிழையான செயற்பாடாகும். ஏற்கனவே ஓய்வூதியத்திட்டம் என்ற போர்வைக்குள் மறைந்து கொண்டு இந்நிதியை கொள்ளையிட முயற்சிக்கப்பட்டது.

இன்று வேறொரு அடிப்படையில் தொழிலமைச்சர் கொள்ளையிட முயற்சிக்கின்றார். இதனை கடுமையாக எதிர்க்கின்றோம்.

தெற்காசியாவிலேயே உள்ள மிகப் பெரிய நிதியமாக ஊழியர் சேமலாப நிதியம் திகழ்கிறது. இதனை கொள்ளையடிக்க இடமளிக்கமாட்டோம் என்றார்.

(அ-2)

# சஜித்தின் திட்டத்திற்கு கட்சியின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும்

## திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

புதிய அங்கத்தவர்களை இணைப்பது உட்பட கட்சி தொடர்பான அனைத்து செயற்றிட்டங்களுக்கும் அவை அமுல்படுத்தப்படுவதற்கு முன்னர் கட்சியின் ஆலோசனைக் குழுவின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும் என ஐ.தே.க.பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கூறியுள்ளார்.

ஒரு இலட்சம் புதிய அங்கத்தவர்களை இணைக்கப்போவதாக ஐ.தே.க.பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச கூறியுள்ளமை தொடர்பாக கருத்து தெரிவிக்கும் போதே திஸ்ஸ அத்தநாயக்க இவ்வாறு கூறினார்.

பிரதேச அமைப்பாளர்களை முதலில் நியமனம் செய்து பின்னர் கட்சியின் இணை அமைப்புக்களுக்கான அமைப்பாளர்களை நியமிப்பதற்கு கட்சி திட்டமிட்டுள்ளதாக திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

அதன்பின்னர் கட்சிக்கு அங்கத்தவர்களை திரட்டுவது உட்பட அமைப்பாளர்களுக்கான விசேட செயற்றிட்டங்கள் வகுக்கப்படும். கட்சிக்கு அங்கத்தவர்களை சேர்ப்பது மோசமான நடவடிக்கை அல்ல. ஆனால், அதற்கு முறையான நடைமுறைகளை பின்பற்ற வேண்டும் என அவர் கூறினார்.

(அ-2)



கிளிநொச்சியின் பூநகரி பிரதேச செயலக பிரிவில் உள்ள ஜெயபுரம் சோலை கிராமத்தில் அமைக்கப்பட்ட நெற் களஞ்சிய திறப்பு விழா நேற்று முன்தினம் நடைபெற்ற போது நாடாவை வெட்டி கட்டடம் திறந்து வைப்பதை படத்தில் காணலாம்.

# உலகைவிட்டு உயிர் பிரிந்தாலும் அலைக்கழிவுகள் மாறவில்லை

## முல்லை. மாவட்டத்தின் துயர்

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்தில் சடலங்களை காவிக் கொண்டு சட்ட வைத்திய அதிகாரியைத் தேடி மக்கள் அலைவதாக பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் மக்களும் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவது,

முல்லை. மாவட்டத்தில் விபத்து மரணங்கள், தற்கொலை மரணங்கள் என சந்தேகத்திற்குரிய திடீர் மரணங்களை பிரேத பரிசோதனை செய்வதற்கு முல்லை. மாவட்டத்தில் உள்ள இரண்டு பிரதான வைத்தியசாலைகளான முல்லை. மாவட்ட வைத்தியசாலையிலும் மல்லாவி ஆதார வைத்தியசாலையிலும் பிரேத பரிசோதனை அறையும் சட்ட வைத்திய அதிகாரியும் இல்லாத நிலை காணப்படுகின்றது. இதனால் இறந்த சடலங்களுடன் உறவினர்கள் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கோ அல்லது வவுனியா மாவட்ட வைத்தியசாலைக்கோ அல்லது அநுராதபுரம் மாவட்ட வைத்தியசாலைக்கோ பெரும் தொகைப் பணத்தை செலவு செய்து பிரேத பரிசோதனை செய்ய வேண்டியுள்ளது.

இதேவேளை, மாங்குளம், துணுக்காய், மாந்தை கிழக்கு ஆகிய இடங்களுக்கு மரண விசாரணை அதிகாரிகள் நியமிக்கப்படவில்லை. இவ்விடங்களில் மரணங்கள் நிகழும் போது புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களில் உள்ள மரண விசாரணை அதிகாரிகளே செல்ல வேண்டியுள்ளதாகவும் தெரிவித்தனர்.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்து தர வேண்டுமென இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(அ-3-15)

# விமான நிலையத்தில் தீ

(சென்னை)

சென்னை விமான நிலையத்தில் நேற்று காலை திடீர் என்று தீப்பிடித்தது. அது உடனே அணைக்கப்பட்டதால் பெரும் விபத்து தவிர்க்கப்பட்டுள்ளது.

சென்னை விமான நிலையத்தின் ஓடுபாதை அருகே உள்ள பகுதியில் கடலோர பாதுகாப்புப்படை விமானங்கள் நிறுத்தி வைக்கப்படுவது வழக்கம். விமானம் நிறுத்தப்படும் இடத்தில் அதிக வெளிச்சம் வேண்டும் என்பதற்காக அங்கு அதிக சக்தி கொண்ட சோடியம் விளக்குகளை அமைத்துள்ளனர். விமானம் நிறுத்தப்படும் இடத்தில் ஒரு சோடியம் மின்விளக்கு நேற்று காலை வெடித்துச் சிதறியதில் அதிலிருந்து மின்கசிவு ஏற்பட்டது. இதனால் அந்த சோடியம் விளக்கு அருகில் பொருத்தப்பட்டிருந்த மின் பெட்டியில் மின்கசிவு ஏற்பட்டு தீ பிடித்தது. உடனடியாக அங்கிருந்த கடலோர பாதுகாப்புப்படை வீரர்கள் மின் இணைப்பைத் துண்டித்தனர். தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித்துறை ஊழியர்கள் தீயை அணைத்தனர்.

சிறிது நேரத்தில் தீ கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. தீ விபத்து குறித்து தகவல் அறிந்ததும் கடலோர பாதுகாப்புப்படை உயர் அதிகாரிகள் சம்பவ இடத்துக்குச் சென்று பார்வையிட்டனர். அருகில் நிறுத்தப்பட்டிருந்து கடலோர பாதுகாப்புப்படை விமானங்கள் தப்பின. மேலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக விமானங்கள் அங்கிருந்து வேறு பகுதிக்குக் கொண்டு செல்லப்பட்டன. இந்த விபத்தில் பொருட்சேதமோ உயிர்ச்சேதமோ ஏற்படவில்லை. (அ-2)

# கள்ள நோட்டு கும்பலின் பின்னணியில் தீவிரவாதிகள்

## என்.ஐ.ஏ. உளவுப் பிரிவு தெரிவிப்பு

தீவிரவாதத்தின் மூலம் இந்தியாவை அச்சுறுத்தி வரும் பாகிஸ்தான் நமது நாட்டை பல்வேறு வழிகளில் சீர்குலைக்க முயன்று வருகின்றது.

குறிப்பாக பாகிஸ்தான் நாட்டின் உளவு அமைப்புக்கள் மூலமாக இந்திய ரூபாய் நோட்டுக்களை கள்ளத்தனமாக அச்சடித்து நாட்டில் புழக்கத்தில் விட்டு வருகின்றனர். இதன் காரணமாக நமது பொருளாதாரத்தை வலுவிழக்க செய்யவும் முயன்று வருகின்றனர்.

பாகிஸ்தானில் அச்சடிக்கப்பட்ட கள்ள நோட்டுக்கள் விமானத்தில் வங்காளதேசத்துக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் அங்கிருந்து இந்தியாவுக்குள் பல்வேறு வழிகளில் கடத்தி வரப்படுவதாக இந்திய உளவுத் துறைக்கு தகவல்கள் கிடைத்தன.

இதைத் தொடர்ந்து இந்த கள்ள நோட்டு கும்பலை பிடிக்கும் பணி தேசிய புலனாய்வு அமைப்பான என்.ஐ.ஏவிடம் விடப்பட்டது. அவர்கள் எல்லை பாதுகாப்பு படையினருடன் சேர்ந்து தீவிர விசாரணையில் இறங்கினர். அப்போது கள்ள நோட்டு கும்பலுக்கு பின்னணியில் தீவிரவாத அமைப்புக்கள் இருப்பதும் இவர்கள் நாட்டின் பொருளாதாரத்தை சீர்குலைக்க நாசவேலையில் ஈடுபடுவதும் கண்டறியப்பட்டது.

கோடிக்கணக்கில் 1000, 500, 100 ரூபாய் கள்ள நோட்டுக்களை அச்சடித்து விமானம் மூலம் வங்காளதேசத்துக்கு கடத்தி வந்துள்ளனர். பின்னர் அந்த கள்ள நோட்டுக்களை வங்காளதேசம் -மேற்கு வங்காள மாநில எல்லையில் கட்டுக் கட்டாக அள்ளி வீசிஇருக்கின்றார்கள்.

இந்த கள்ள நோட்டுக்களை புழக்கத்தி விட மேற்கு வங்காள மாநிலத்தில் பாகிஸ்தான் ஆதரவு முகவர்கள் உள்ளனர். பல இடங்களில் அதிரடியாக நடத்திய வேட்டையில் மேலும் 9 பேர் பிடிபட்டனர். (அ-2)

# புதுவையில் திடீர் வாந்திபேதி; 17 பேருக்கு சிகிச்சையளிப்பு

(புதுச்சேரி)

புதுவை உழவர்கரை பூமியான் பேட்டையில் கடந்த வாரம் பொது மக்கள் வாந்திபேதியால் பாதிக்கப்பட்டனர். வைத்தியசாலையில் 17 பேர் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றனர். நோய் பரவுதலை தடுக்க மருத்துவக்குழு பூமியான்பேட்டையில் முகாமிட்டு சிகிச்சை அளித்தது.

இந்நிலையில் முதலியார்பேட்டை தொகுதியில் பொதுமக்களுக்கு திடீர் வாந்திபேதி ஏற்பட்டுள்ளது.

வாந்திபேதியால் பாதிக்கப்பட்ட 100 இற்கும் மேற்பட்டோர் அரசு பொது மருத்துவமனையில் நேற்று முன்தினம் அனுமதிக்கப்பட்டனர்.

இதையடுத்து அ.தி.மு.க. எம்.எல். ஏக்கள் மற்றும் கட்சி நிர்வாகிகள் அரசு பொது வைத்தியசாலைக்குச் சென்று பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்து ஆறுதல் கூறினர்.

இது தொடர்பாக மத்திய அமைச்சர் நாராயணசாமி கூறியதாவது, குடிநீரில் கழிவு நீர் கலந்து வந்ததால் அந்தப் பகுதி மக்களுக்கு இந்த நிலை ஏற்பட்டது. புயல் அடித்த உடனேயே நகர மற்றும் கிராம பகுதிகளில் குளோரின் கலந்த நீர் விநியோகம் செய்து இருந்தால் மக்கள் பாதிக்கப்பட்டு இருக்க மாட்டார்கள். குடிநீர் பிரிவின் மெத்தன போக்கையே இது காட்டுகிறது. இதுபோன்ற சமயங்களில் குடிநீர் பிரிவும் சுகாதார துறையும் இணைந்து தண்ணீரை கொதிக்க வைத்து குடிக்க விழிப்புணர்வு ஏற்படுத்தி இருக்கு வேண்டும். (அ-2)

பாரதச் செய்திகள்

# நக்கீரன் பத்திரிகை மீது வழக்கு தொடர சென்னை நீதிமன்றம் அனுமதியளிப்பு

(சென்னை)

முதல் அமைச்சர் ஜெயலலிதா பற்றி செய்தி வெளியிட்ட நக்கீரன் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர சென்னை உயர்நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

இந்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. சென்னை உயர்நீதிமன்றத்தில் தலைமை நீதிபதி இக்பால், நீதிபதி வாசுகி ஆகியோர் அடங்கிய டிவிசன் பெஞ்ச முன்பு சட்டத்தரணி ஜெனரல் நவதகிருஷ்ணன் நேற்று ஆஜராகி நக்கீரன் பத்திரிகை மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

முதல் அமைச்சரைப் பற்றி தவறான செய்திகளை வெளியிடுவதற்கு நக்கீரனுக்கு ஏற்கனவே சிவில் நீதிமன்றம் தடை உத்தரவு ஒன்றை பிறப்பித்துள்ளது. அப்படியே முதல்வரை பற்றி நக்கீரன் பத்திரிகை செய்தி வெளியிடுவதாக இருந்தால் அதுபற்றி முதல் அமைச்சரிடம் கருத்து கேட்க வேண்டும் என்றும் அந்த உத்தரவில் கூறப்பட்டு இருந்தது. இந்த உத்தரவை மீறும் வகையில் முதல் அமைச்சரை பற்றி நக்கீரன் தொடர்ந்து அவதூறு செய்திகளை வெளியிட்டு வருகின்றது. ஆகவே அந்த பத்திரிகை மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர அனு மதிக்க வேண்டும் என்று சட்டத்தரணி ஜெனரல் நவதகிருஷ்ணன் கேட்டுக் கொண்டார். (அ-2)



முதல்வர் ஜெயலலிதா பற்றி அவதூறாக செய்தி வெளியிட்டதாக கூறி வடசென்னை தெற்கு மாவட்ட அ.தி.மு.கவினர் ஆளுநர் அலுவலகம் அருகே நக்கீரன் கோபால் கொடும்பாவியை எரித்து அண்மையில் ஆர்ப்பாட்டம் நடத்தியதைப் படத்தில் காணலாம்.

# தானேயின் தாக்கத்திலிருந்து மீளாத கடலூர் மாவட்டம்

தானே புயல் தாக்கியதால் குறிப்பாக கடலூர் மாவட்டத்தில் வரலாறு காணாத சேதம் ஏற்பட்டுள்ளது. புயல் தாக்கி 12 நாட்கள் ஆகிவிட்ட நிலையில் கடலூர் மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளில் இயல்பு நிலை திரும்புவதற்கான அறிகுறிகள் கூட இன்னும் தென்படவில்லை.

கடலூர் மாவட்டத்தில் 5 இலட்சத்திற்கும் அதிகமான ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டிருந்த நெல், கரும்பு, வாழை, மா, பலா, முந்திரி உள்ளிட்ட பயிர்கள், சவுக்கு மரங்களும் அழிந்துவிட்டன. அது மட்டுமன்றி 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மின்கம்பங்கள் அடியோடு சாய்ந்து விட்டன. 4 இலட்சத்திற்கும் அதிகமான குடிசைகளும் வீடுகளும் சேதமடைந்துள்ளன.

தானே புயலால் ஏற்பட்ட சேதத்தை இன்னும் துல்லியமாக மதிப்பிடுவதற்கு கூட இயலாத அளவுக்கு மிகப்பெரிய அளவில் மக்களின் உடைமைகளும் வாழ்வாதாரங்களும் சூறையாடப்பட்டுள்ளன.

புதுச்சேரி மாநிலம் ஏற்கெனவே பேரிடர் பாதித்த பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதேபோல் தமிழகத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை தேசிய பேரழிவாக அறிவிக்க வேண்டும் என்ற நடுவண் அரசை வலியுறுத்துவதாக ராமதாஸ் தனது அறிக்கையில் கூறியுள்ளார். (அ-2)

# கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் நால்வர் விடுவிப்பு

(இராமேஸ்வரம்)

இலங்கை கடற்படையினரால் சிறை பிடித்து செல்லப்பட்ட இராமேஸ்வரம் மீனவர்கள் 4 பேர் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்பு மீன்பிடிக்க சென்ற 4 மீனவர்களின் படகுகள் திசை மாறி நெடுந்தீவில் கரை ஒதுங்கியது. இதனால் இலங்கை கடற்படையினர் படகையும் மீனவர்களையும் பிடித்துச் சென்று யாழ்ப்பாணம் நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

மீனவர்களையும் படகையும் விடுவித்து இந்திய தூதரக அதிகாரிகளிடம் ஒப்படைக்க நிதிபதி உத்தரவிட்டார். இந்திய தூதரகத்தில் தங்கியிருந்த மீனவர்களை இலங்கை கடற்படையினர் சர்வதேச கடல் எல்லையில் இந்திய கடலோர காவல் படையிடம் ஒப்படைத்தனர். இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு மன்னார் பகுதியில் சிறை வைக்கப்பட்டிருந்த 4 மீனவர்களும் நேற்றுக் காலை விடுதலை செய்யப்பட்டனர். இவர்கள் 4 பேரும் இராமேஸ்வரம் வந்து சேர்ந்தனர். (அ-2)

# வாய்ப்புற்றுநோய் பாதிப்பு

உலகம் முழுவதும் வாய் புற்று நோயால் ஏராளமானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் இந்தியாவில் மட்டும் ஆண்டுக்கு 75 ஆயிரம் முதல் 80 ஆயிரம் பேர் வரை அவதியுற்று வருகின்றனர்.

இதன் மூலம் இந்திய மக்கள் தொகையில் நான்கு பேரில் ஒருவர் வாய் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக இந்திய புற்றுநோய் பதிவகம் தெரிவித்துள்ளது.

சென்னை மாநகரில் மட்டும் 10.1 சதவீதம் ஆண்களும் 4 சதவீதம் பெண்களும் வாய் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதற்கு சிகரெட் பிடிப்பதுதான் முக்கிய காரணமாக கூறப்படுகின்றது.

சிகரெட் புகைப்பதால் இந்தியாவில் 40 சதவீதம் பேர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக புற்று நோய் இன்ஸ்டியூட்டைச் சேர்ந்த டாக்டர் சாகர் தெரிவித்துள்ளார். பொதுவாக 10 முதல் 15 வயது இளைஞர்கள் சிகரெட்டை பயன்படுத்துகின்றனர். புகையிலையினால் ஏற்படும் பாதிப்புக்கள் குறித்து அவர்களிடம் அதிக அளவில் விழிப்புணர்வை ஏற்படுத்துவது அவசியம் என்றும் அவர் தெரிவித்தார். (அ-2)

# மியன்மாருடன் உறவை புதுப்பித்துக்கொள்ள ஆர்வம் காட்டும் அமெரிக்க பிரதிநிதிகள்

மியன்மார் உடனான உறவுகளைப் புதுப்பிக்கும் விதமாக அமெரிக்க பிரதிநிதிகள் இருவர் நேற்று முன்தினம் தலைநகர் நேபையிடாவுக்கு வந்தனர். இதற்கிடையில் மியன்மார் மீதான பொருளாதார தடைகள் சிலவற்றை நீக்குவதற்கு அவுஸ்திரேலியா முன்வந்துள்ளது.

மியன்மாரில் இராணுவ ஆட்சி முடிவடைந்து கடந்தாண்டின் ஆரம்பத்தில் ஜனநாயக ரீதியிலான பாராளுமன்ற ஆட்சி ஆரம்பித்தது. எனினும் தற்போது பாராளுமன்றம் இராணுவத்தின் பிரதிநிதிகள் கணிசமான எண்ணிக்கையில் உறுப்பினராக உள்ளனர்.

இந்நிலையில் மியன்மார் தனது ஜனநாயக ரீதியிலான நடவடிக்கைகளை சர்வதேச சமூகத்திற்குப் புலப்படும்படி அதிகரித்து வருகிறது. குறிப்பாக ஜனநாயகப் போராளி ஆங் சாங் சூகியின் கட்சியை தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்ய அனுமதித்தது.

இதையடுத்து மியன்மார் உடனான தனது உறவுகளைப் புதுப்பிப்பதில் அமெரிக்கா முனைந்துள்ளது. இதன் ஒரு கட்டமாக மியன்மார் பற்றிய கொள்கைப் பிரிவுக்கான அமெரிக்க ஒருங்கிணைப்பாளர் டெரிக் மிச்சேல், ஆட்கடத்தல் தடுப்பு பிரிவின் அமெரிக்க பிரதிநிதி லூயிஸ் டிபாக்கா இருவரும் நேற்று முன் தினம் நேபையிடா வந்தனர்.

கடந்தாண்டின் இறுதியில் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளின்டன் மியான்மாருக்கு வந்ததன் தொடர்ச்சியாக இவர்கள் வந்துள்ளனர்.

இவர்கள் அரசுப் பிரதிநிதி களுடன் பல்வேறு சீர்திருத்தங்கள் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்துவர்.

மியான்மாரின் முக்கிய பிரமுகர்கள் மீது அவுஸ்திரேலியா விதித்துள்ள நிதி மற்றும் பயணம் குறித்து தடைகள் நீக்கப்படும் என்றாலும் ஆயுத விநியோகம் உள்ளிட்ட சில தடைகள் தொடரும் என அறிவித்துள்ளது. (அ-2)

# தீக்குளிக்கும் புத்த துறவிகளைத் தடுக்க மடாலயங்கள் மீது கட்டுப்பாடு- சீனா

திபெத் மீதான சீனாவின் ஆக்கிரமிப்பை எதிர்த்து இதுவரை 13 புத்தமத துறவிகள் தீக்குளித்துள்ளனர். இப்போராட்டம் தொடர்ந்து பரவாமல் தடுக்கும் வகையில் திபெத்தில் உள்ள புத்த மடாலயங்கள் மீது கட்டுப்பாடுகளை விதிக்க சீனா தீர்மானித்துள்ளது.

புத்த மதத்தின் தொன்மையான பிரிவின் உறைவிடமான திபெத்தில் இன்றைய நிலையில் ஆயிரத்து 700 புத்த மடாலயங்களும் இவற்றில் 46 ஆயிரம் துறவிகள் மற்றும் பெண் துறவிகளும் உள்ளனர். திபெத்தில் வசிப்போரில் 90 சதவீதம் பேர். திபெத்தியர்கள் அவர்களும் புத்தமதத்தைச் சேர்ந்தவர்கள்.

**சீனா மீதான எதிர்ப்பு**

தற்போது திபெத்துக்கு வெளியேயும் பல இடங்களில் பரவி வருகிற குறிப்பாக திபெத்தை ஒட்டினாற்போல் உள்ள சிச்சுவான் மாகாணம் தான் தற்போது எதிர்ப்பின் தளமாக இயங்கி வருகிறது.

இந்நிலையில் புத்த மடாலயங்கள் மீதான அரசின் கட்டுப்பாடுகளை அதிகரிக்கும் விதத்தில் சில நடவடிக்கைகளை மேற்கொள்ள சீன அரசு தீர்மானித்துள்ளது. (அ-2)




# மலேசிய எதிர்க்கட்சித் தலைவர் விடுதலை; ஒருமணி நேரத்தில் 3 இடங்களில் குண்டுவெடிப்பு

மலேசிய எதிர்க்கட்சித் தலைவர் அன்வர் இப்ராகிம் ஹோமோசெக்ஸ் வழக்கில் இருந்து நேற்று முன்தினம் விடுதலையானார். அவர் விடுவிக்கப்பட்ட அடுத்த ஒருமணி நேரத்தில் 3 இடங்களில் குண்டுகள் வெடித்தன. இதனால் மலேசியாவில் பதற்றம் நிலவுகின்றது.

அவரது ஆட்சியில் கடந்த 1993 தொடக்கம் 1998 வரை துணை பிரதமராக இருந்தவர் அன்வர் இப்ராகிம் (வயது-64). மக்கள் கூட்டணி கட்சியில் தொடர்ந்து நற்பெயர் பெற்று வந்த நிலையில் மகாதிருக்கு மாற்றாக இவர் மாபெரும் தலைவராக உருவெடுப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

திடீர் திருப்புமுனையாக 1998 இல் அவர் மீது ஊழல் மற்றும் ஓரினைச்சேர்க்கை குற்றச்சாட்டு எழுப்பப்பட்டது. துணை பிரதமர் பதவியில் இருந்து அன்வரை மகாதிர் நீக்கினார். பின்னர் அவருக்கு ஊழல் வழக்கில் 6 ஆண்டு மற்றும் ஓரினைச்சேர்க்கை வழக்கில் 9 ஆண்டு தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். அன்வர் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை என்று கூறிய நீதிபதி வழக்கை தள்ளுபடி செய்தார். இது குறித்து அன்வர் இப்ராகிம் கூறுகையில்,

இந்த தீர்ப்பு எனது நேர்மையை நிரூபித்துள்ளது. விரைவில் தீவிர அரசியலில் ஈடுபடுவேன். தேர்தலில் போட்டியிடுவேன் என்றார்.வழக்கில் இருந்து அன்வர் விடுதலையான தகவல் வெளியான சில மணி நேரத்தில் கோலாலம்பூர் உட்பட 3 இடங்களில் குண்டுகள் வெடித்தன.அதில் சிலர் காயமடைந்தனர். நாசவேலையில் ஈடுபட்டவர்களை பொலிஸார் தேடி வருகின்றனர். (அ-2)

# பாகிஸ்தானிலிருந்து வெளிவரும் பத்திரிகைமூலம் புனிதப்போருக்கான பிரசாரம் - அல்கொய்தா

சர்வதேச பயங்கரவாத அமைப்பான அல்கெய்தா பாகிஸ்தானிலிருந்து வெளியாகும் உருது மாத பத்திரிகைமூலம் புனிதப் போர் (ஜிஹாத்) பிரசாரத்தை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

இந்த பத்திரிகை அனைத்து வீடுகளுக்கும் தபால்மூலம் பட்டுவாடா செய்யப்படுகிறது. ஹிதீன் என்ற பெயரில் 200 பக்கங்களுடன் வெளியாகும் இந்த பத்திரிகையில் புனிதப் போரில் உயிரிழந்தவர்களைக் கௌரவித்தும் ஒசாமா பின்லேடனைப் பாராட்டியும் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

இந்த பத்திரிகையின் 7 ஆவது மாத இதழ் கடந்த மாதம் வெளியானது. இதில் ஒசாமா பின்லேடன் மரணமடைந்த தினம் தியாகிகள் தினமாக சித்தரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஆப்கானிலிருந்து செயல்படும் தலிபான் அமைப்பின் தலைவர் முல்லா ஓமரின் கருத்துகளும் சில முன்னணி தலைவர்களின் அறிவுரைகளும் இடம் பெற்றுள்ளன.

நேட்டோ படைகளுக்கு கொண்டு செல்லும் லொறிகளை முஸ்லிம்கள் கொள்ளையடிப்பது இஸ்லாத்துக்கு எதிரானதல்ல என்றும் பின்லேடன் கொலைக்கு முஜாஹிதீன்கள் காரணம் என்று கூறப்படுவது தவறு என்றும் பத்திரிகையில் தலையங்கத்தில் தீட்டப்பட்டுள்ளது.

முஜாஹிதீன்கள் தொடர்ந்து போராடி வருவதாகவும் மேலும் அவர் பற்றி வெளிவரும் அவதூறு செய்திகளை நம்ப வேண்டாம் என்றும் அதில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

முஸ்லிம் நாடுகளிலிருந்து அமெரிக்க படைகள் முற்றிலுமாக வெளியேறும் வரை தங்களது புனிதப் போர் தொடரும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. முஸ்லிம்களுக்காக போராட மற்றொரு பின்லேடன் உருவாபவேண்டும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உலகம் முழுவதும் செயல்படும் அல்கொய்தா அமைப்புக்கு நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது. வாசகர்கள் தங்களது கருத்துகளை அனுப்ப இரண்டு இணையத்தள முகவரிகள் தரப்பட்டுள்ளன.

இந்த பத்திரிகை குறித்து தங்களுக்கு தகவல் தெரியும் என்றும் ஒவ்வொரு பிரதியையும் ஆவணத்துக்கு சேர்த்து வைத்துள்ளதாக பயங்கரவாத எதிர்ப்பு பிரிவின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார். விரைவிலேயே இந்த பத்திரிகை வெளிவருவதற்கு காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. (அ-2)

# கடற்கொள்ளையர்களிடம் இருந்து பணயக்கைதிகளும் கப்பலும் மீட்பு

ஈரான் நாட்டு கப்பல் ஒன்றை சோமாலிய கடற்கொள்ளையர்கள் பிடித்து சென்றிருந்தனர். அதை பயன்படுத்தி அவர்கள் பிற கப்பல்களை தாக்கி கொள்ளையடித்து வந்தனர். கடந்த சனிக்கிழமை அந்தக் கப்பலை நேட்டோ படையில் இடம்பெற்ற டென்மார்க் நாட்டு கப்பல் வழிமறித்து பிடித்தது. அப்போது தப்பி ஓட முயன்ற கொள்ளைக்காரர்களை டென்மார்க் கப்பலில் இருந்த இராணுவத்தினர் வானத்தை நோக்கி சுட்டு எச்சரித்தனர். கப்பல் நின்றதும் அதில் பணயக் கைதிகளாக இருந்த ஈரான் நாட்டு மாலுமிகள் 5 பேர், பாகிஸ்தான் நாட்டு மாலுமிகள் 9 பேர் ஆக மொத்தம் 14 பேரை விடுவித்தது. 25 கொள்ளையர்கள் கைது செய்யப்பட்டனர். பின்னர் ஈரான் நாட்டு கப்பல் அதன் சொந்த நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இதேபோல் சோமாலிய கொள்ளையர்களால் பிடித்துச் செல்லப்பட்டிருந்த இந்திய கப்பல் ஒன்றை ஓமன் நாட்டு கடல் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை நேட்டோ படையில் இடம்பெற்றிருந்த அமெரிக்க கப்பல் படையினர் வழிமறித்து பிடித்தனர். அதில் இருந்த 20 இந்திய மாலுமிகள் விடுவிக்கப்பட்டனர். ஆனால் 9 கொள்ளையர்களை அவர்களது கப்பலிலேயே சோமாலிய நாட்டுக்குச் செல்ல அமெரிக்க கப்பல் அனுமதித்தது. (அ-2)



டக்சான் அரிஜோனில் உள்ள அரிஜோனா பல்கலைக்கழகத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் ஒரு ஆண்டு நினைவஞ்சலி தினத்தில் மக்கள் கையில் ஒளிர்விளக்கோடு ஊர்வலம் சென்றதைப் படத்தில் காணலாம்.

# 364 அடி ஆழ ஆற்றில் விழுந்தவர் இலேசான காயங்களுடன் தப்பிய அதிசயம்

## சிம்பாவேயில் சம்பவம்

(சிட்னி)

அவுஸ்திரேலியாவைச் சேர்ந்தவர் எரின் லாங்வொர்தி (வயது-22) என்பவர் புத்தாண்டை கொண்டாட ஆபிரிக்க நாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டார்.

ஜிம்பாவே சென்ற அவர் காலில் கயிற்றை கட்டிக் கொண்டு உயரத்தில் இருந்தபடி தலைகீழாக குதிக்கும் பங்கி ஜம்ப் என்ற விளையாட்டில் பங்கேற்றார்.

அங்குள்ள ஷாம்பேசி ஆற்றில் உள்ள விக்டோரியா அருவி பாலத்தின் மீது நின்றபடி 354 அடி உயரத்தில் பங்கி ஜம்ப் விளையாடினார்.

காலில் கயிற்றை கட்டி அவர் ஆற்றுக்குள் குதித்தார். அப்போது எதிர்பாராதவிதமாக கயிறு அறுந்து விட்டது. இதனால் அவர் ஷாம்பேசி ஆற்றுக்குள் 364 அடி ஆழத்தில் விழுந்தார்.இவ்வளவு உயரத்தில் இருந்து விழுந்ததால் அவர் இறந்திருப்பார் என நினைத்தனர்.

ஏனெனில் அந்த ஆற்றில் முதலைகள் அதிகம் உள்ளன. ஆனால் யாரும் எதிர்பாராதபடி அவர் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார். அவரது உடலில் இலேசான காயங்கள் மட்டுமே இருந்தன.

ஆற்றுக்குள் விழுந்த அவர் மன தைரியத்துடன் நீந்தி கரை ஏறினார்.

பின்னர் அவர் தென்னாபிரிக்கா சென்று அங்குள்ள வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட் டார்.

இந்தச் சம்பவம் குறித்து கருத்து தெரிவித்த அவர், நான் உயிர் பிழைத்தது உண்மையிலேயே ஒரு அதிசயம் தான்.

எனவே எதிர்வரும் காலங்களில் இதுபோன்று நடக்காமல் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என ஜிம்பாவே சுற்றுலாத்துறை அமைச்சர் வலியுறுத்தி உள்ளார். (அ-2)

# சி.ஐ.ஏ. உளவாளிக்கு தூக்குத்தண்டனை; ஈரானை கண்டிக்கிறது அமெரிக்கா

சி.ஐ.ஏ.உளவாளிக்கு ஈரானில் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டதற்கு அமெரிக்கா கண்டனம் தெரிவித்துள்ளது.ஈரானில் அமெரிக்காவின் உளவுத்துறையான சி.ஐ.ஏ.வுக்கு உளவு பார்ப்பதற்காக ஹெக்மாட்டி என்பவருக்கு ஈரான் நீதிமன்றம் தூக்குத் தண்டனை விதித்துள்ளது.

இவரும் சி.ஐ.ஏ.வுக்கு உளவு பார்த்ததை நீதிமன்றத்தில் ஒத்துக் கொண்டார். இந்நிலையில் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டதற்கு அமெரிக்கா கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வெள்ளை மாளிகை செய்தி தொடர்பாளர் டோமி வீடர் கூறுகையில், தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டது உண்மையானால் அது கண்டனத்திற்குரியது.தூக்கு தண்டனை விதிக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவிக்கவும் கண்டனம் தெரிவிக்கவும் எங்கள் நட்பு நாடுகளுடன் இணைந்து பணியாற்றுவோம் என கூறினார். (அ-2)

வாய்ப்பு ஒருவரை பலமுறை தாண்டிச் சென்று விட்டாலும் நல்வாய்ப்பு ஒரு நாள் அவரைக் கண்டுபிடித்தே தீரும். ~ *ஸெனேகா*

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## கடைசி நேரத்தில் கந்தறுத்து காவடி ஆடும் தமிழ் அரசியல் தலைமைகளே! கவனம்

இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்வைக்க வேண்டிய கட்டாயத்தில் இலங்கை அரசு இருப்பதை இப்போது உணரமுடிகிறது.

அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் கடுமையான அழுத்தம் இத்தகையதொரு நிலைப்பாட்டை உருவாக்கியுள்ளது.

வன்னியில் கொடும்போர் நடத்தி தமிழ் மக்களை வதைத்ததன் விளைவாக உலக நாடுகள் எடுத்த முடிபுதான் இது.

இதுவிடயத்தில் தயவு செய்து எந்தத் தமிழ் அரசியல் தரப்புகளும் உரிமை கோரக்கூடாது என்பது தாழ்மையான கோரிக்கை.

வன்னிப் போரில் எங்கள் உறவுகள் குண்டுபட்டுத் துடித்ததை, வெடிபட்டு விழுந்ததை, முட்கம்பி முகாம்களில் அடைபட்டு வதைபட்டதை, கைகட்டி கால்கட்டி உயிர் எடுத்ததை உலக நாடுகள் கண்டு கண்ணீர்விட்டு கொடிதுகொடிது என்று குளறிய செய்திகள் மறப்பதற்கில்லை.

நிலைமை இதுவாக இருக்கும் போது தமிழ் அரசியல் தலைமைகள் அரசை சர்வதேச வலைக்குள் வீழ்த்த சூழ்ச்சி செய்கிறது என யாரும் கூறிவிடக்கூடாது.

இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் விடயத்தில் வன்னிப் போரில் நடந்த அவலமான மனிதப் பேரழிவே இலங்கையைக் காட்டிக் கொடுத்தது.

எனவே, இலங்கை அரசு தான் செய்த கொடுஞ் செயலால் சர்வதேச சமூகத்திடம் மாட்டிக் கொண்டது.

சனல் 4 தயாரித்த கொலைக்களம் என்னும் ஆவணப்படம் வன்னியில் ஈழத்தமிழ் மக்கள் பட்ட அவலத்தை உலகிற்கு எடுத்தியம்பியது.

சனல் 4 வெளியிட்ட கொலைக்களம் ஆவணப்படமே எங்கள் துயர அனுபவிப்புகளை, இலங்கையில் தமிழ் இனத்திற்கு எதிராக நடந்த கருவறுப்புக்களை காட்டிக் கொடுத்தன.

எனினும் எங்கள் அரசியல் தலைமைகள் இங்கொன்றும் வெளிநாடுகளில் வேறொன்றுமாக உரையாற்றி மக்களைக் குழப்பியதுண்டு.

சிலர் அரசுக்கு மறைமுகமாக உதவும் வகையில் செயற்பட்டதும் தெரிந்ததே.

இத்தகைய செயல்களை நிறுத்தி இப்போது இருக்கக்கூடிய எமக்கான சாதக சூழ்நிலையைப் பயன்படுத்தி எங்கள் உரிமையை வென்றெடுக்க நாம் தயாராக வேண்டும்.

இலங்கை அரசு எங்களை வெருட்டலாம். நாமும் ஏதேனும் கிடைக்காமல் போய்விடுமோ என்று பயப்படலாம். இத்தகைய தளம்பல் நிலை தேவையற்றவை.

தமிழர்களின் பிரச்சினையை முடித்து வைப்பதென அமெரிக்கா முடிபெடுத்துவிட்டது.

பின்னர் யார் வெகுண்டாலும் அதற்கு இடமில்லை.

எங்கள் உறவுகளின் உடல் அறுத்த குருதி பொங்கி எடுத்த பெருக்கால் கிருஸ்ணாவும் புறப்பட்டு வருகிறார்.

செய்த பாவம் பற்றிக் கொள்ளாமல் இருக்க, கடைசி நேரத்தில் கந்தறுத்து காவடி எடுக்கும் எங்கள் தமிழ் அரசியல் தலைமைகளே அதிகம் பிதற்றாமல் கடுமையாக தூங்காமல் விழிப்பாக இருங்கள்;விறுவிறுப்பாக இருங்கள்; ஆயத்தமாக இருங்கள்.

எல்லாம் நல்லதாய் நடக்கும்.

# நாம் இழப்புக்களைக் கண்டு துவண்டு போனவர்களல்ல!

## உயிர்நீத்தோர் நினைவுரையில் சிறிதரன் எம்.பி

(யாழ்ப்பாணம்)

எந்தவொரு இழப்புகளையும் கண்டு ஒதுங்கிப் போனவர்களும் அல்லர். இழப்புகளை கண்டு சோர்வடைந்தவர்களும் அல்லர். எதிர்காலத்தில் உங்கள் மண்ணில் நாம் சுய உரிமையோடு வாழ வேண்டும் என த.தே. கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவித்தார்.

4ஆவது உலக தமிழாராய்ச்சி மாநாட்டில் உயிர்நீத்தவர்களை நினைவு கூரும் நிகழ்வு நேற்று காலை யாழ்.நகரில் வீரசிங்கம் மண்டபத்திற்கு முன்னால் அமைந்துள்ள நினைவுத்தூபியில் இடம் பெற்றது.

உயிர் நீத்தவர்களுக்கு ஈகச்சுடர் ஏற்றும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்மேலும் அங்கு உரை நிகழ்த்துகையில், கடந்த 1974 ஆம் ஆண்டு தை மாதம் 10 ஆம் திகதி நடைபெற்ற இவ்அனர்த்தம் போன்று தொடர்ந்தும் எம் மக்களால் இதுபோன்ற சம்பவங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வனர்த்தங்களில் முக்கியமாக குருநகர் கடலில் சுட்டுப் போடப்பட்ட எம் தமிழர்கள், நாகர்கோவில் குண்டு வீச்சில் உயிரிழந்த எம் மக்கள், நவாலி சென் பீற்றர்ஸ் தேவாலயத்தில் கொல்லப்பட்ட பொதுமக்கள் இப்படியே பல காலமாக எமது மக்கள் பல தாக்குதல்களால் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். தொடர்ச்சியாக கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதி முள்ளிவாய்க்காலில் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான தமிழர்கள் கொடூரமாக கொல்லப்பட்டுள்ளார்கள்.


இப்படியான துயரம் நிறைந்த சம்பவங்கள் எம் மனங்களில் உறுதியையும் ஓர்மத்தையும் நிலைநிறுத்தியுள்ளன. எங்கள் இனம் இந்த மண்ணில் தலை நிமிர்ந்து வாழ வேண்டும். விடுதலைக்கான அஸ்திவார நாட்களாக இந் நாட்களை நினைவில் கொள்ள வேண்டும்.

இந்த இழப்புக்களை கண்டு சோர்ந்து போவதோ, துவண்டு போவதோ எதிர்காலத்தில் எங்கள் மண்ணில் தமிழர்கள் சம உரிமையோடு வாழ்கின்றவர்களாக வாழ்வதற்கு இது ஒரு சந்தர்ப்பமாக அமையும்.

ஆகவே இந்த நினைவுத்தூபி அமைந்துள்ள இடத்தில் கொட்டகை அமைத்து எதிர் காலத்தில் இந்நினைவு கூரும் நிகழ்வை தியான முறையில் முன்னெடுத்து செல்லவேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் த.தே.கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, புளொட் இயக்கத்தின் தலைவர் சித்தார்த்தன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் யாழ்.மாநகரசபை முன்னாள் ஆணையாளர் பேராசிரியர்களான சி.க.சிற்றம்பலம், ஆர் சிவச்சந்திரன், யாழ்.மாநகரசபை உறுப்பினர்களான அ.பரஞ்சோதி என்.ராகதேவன் எனப் பலர் கலந்து கொண்டனர். (அ-2-4-6)

## திருவெம்பாவை 13



திருச்சிற்றம்பலம்

பைங்குவளைக் கார்மலராய் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சாத்தலினால்
எங்கள் பிராட்டியும்எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவில் புகப்பாய்ந்து நம்
சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொள்கைகள் பொங்கக் குடையும் புனல் பொங்க
பங்கையர் பூம்புனல் பாய்ந்துஆடேலோர் எம் பாவாய்

திருச்சிற்றம்பலம்

**தோழியர்:** செந்தாமரைப் பூவும் நீலோற்பலமும் நிறைந்திருக்கும் நீரோடையில் பெண்கள் நீராட செல்கின் றார்கள். அழகிய நீர் பறவைகள் அந்தக் குளத்தில் இனிமையாக குரல் எழுப்புகின்றன. பாம்புகள் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்து செல்கின்றன. குளிர்ந்த நீரோடையில் நீராடி சிவபெருமானை வழிபடச் சொல்லும் பெண்களின் வளையோசையும் கேட்கிறது. கால் சிலம்புகளும் இனிமையாக ஒலிக்கின்றன. அந்தப் பொய்கையே சிவவடிவாகத் தென்படுகின்றது.சூழ்நிலைகள் தெய்வீகத்தை உணர்த்துகின்றன என்று மணிவாசகர் கூறுகின்றார்.

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கு கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வி வலய முன்பள்ளிகளின் ஆசிரியர்களினதும் முன்பள்ளிகளினதும் தரவுகளைப் பெறுவதற்கான கூட்டம் இன்று புதன் கிழமை நல்லூர் பிரிவிற்கும் நாளை வியாழக்கிழமை யாழ்ப்பாணம் பிரிவிற்கும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கோப்பாய் பிரிவிற்கும் கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவுள்ளது என யாழ். கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் க. விமலநாதன் அறிவித்துள்ளார்.

சகல ஆசிரியர்களும் தங்களது சுய விபர ஆவணங்களுடன் வருகை தர வேண்டும் எனவும் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (அ)

## இன்ப இசை இறுவெட்டு வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

வேவுனானின் இன்ப இசை இறுவெட்டு வெளியீட்டு விழா நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வல்வெட்டி வேவில வீரகத்தி விக்னேஸ்வர பெருமாள் ஆலய மண்டபத்தில் வட மாகாண கல்வி அமைச்சின் பிரதி செயலாளர் வி.ரி. செல்வரத்தினம் தலை மையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லை ஆதீனமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமஸ்கந்த தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இவ்இறுவெட்டு வெளியீட்டுரையை சைவப்புலவர் பொன். சுகந்தனும் மதிப்பீட்டுரையினை கலாநிதி ஆறு.திருமுருகனும் ஆற்றவுள்ளனர். (அ)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### *இயற்கையுடன் போர் செய்*



இடையறாத முயற்சியின் மூலம் நம்மை நாடி வரும் கஷ்டங்களை வெல்ல முடியும்.

நீ எதை நினைக்கிறாயோ அதுவாகவே ஆகிறாய். உன்னை வலிமை உள்ளவனாக நினைத்தால் வலிமை படைத்தவனாகிறாய்.

வாழ்க்கையில் கீழ்ப்படிவதற்கு கற்றுக் கொள். கட்டளையிடும் பதவி தானாக உன்னை வந்தடையும்.

அடக்கப்படாத மனம் நம்மைக் கீழ் நோக்கியே இழுத்துச் செல்லும். அடக்கப்பட்ட மனம் நமக்குப் பாதுகாப்பளிப்பதுடன், விடுதலையும் தரும்.

அளவற்ற ஆற்றல், பெரும் ஊக்கம், அளவு கடந்த அஞ்சாமை, அளவில்லாத பொறுமை ஆகியவை நமக்குத் தேவை.

இயற்கையை எதிர்த்துப் போராடி வளர வேண்டும்.இயற்கையோடு எப்போதும் போர் செய்வதே மனித முன்னேற்றத்தின் படிக்கற்களாகும்.

இரக்கத்தால் பிறருக்கு நன்மை செய்வது நல்லது, ஆனால், ஈசனது படைப்பான அனைத்து உயிர்களுக்கும் பணி செய்தல் மிக நன்றாகும்.

மனித வடிவம் கொண்ட ஒவ்வொரு உயிரையும் வழிபடுங்கள். இறைவனை அனைத்து வடிவத்திலும் வழிபடுவதே நன்மை பெற நல்ல வழியாகும்.

# மரண அறிவித்தல்

## கிருஸ்ணபிள்ளை வீரசிங்கம்

(அரச ஒப்பந்தகாரர்)



வாதரவத்தை புத்தூரை பிறப்பிட மாகவும் வதிவிடமாகவும் கொண்ட கிருஸ்ணபிள்ளை வீரசிங்கம் (அரச ஒப்பந்தகாரர்) அவர்கள் 10.01.2012 செவ்வாய் அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணபிள்ளை - தங்கம்மா தம்பதியரின் மூத்த புதல்வரும், காலஞ்சென்றவர்களான சின்னையா-செல்லாச்சி தம்பதியரின் மூத்த மருமகனும், நாகரத்தினத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற வர்களான செல்லம்மா, அழகம்மா, அமரசிங்கம் மற்றும் திகழும்மா, ஏகாம்பரம், குமாரவேலு ஆகியோரின் அன்புச் சகோதரனும், மல்லிகாமலர் (ஜேர்மனி),கணேசதாஸ் (ஜேர்மனி), லலிதா,சண்முகதாஸ் (உரிமையாளர் ஜெகிந்தன் பல்பொருள்வாணிபம், வாதரவத்தை), உஷாநந்தினி,கோபால தாஸ்(கிராம அலுவலர், அச்சுவேலி மேற்கு) ஆகியோரின் பாசமிகு தந்தை யும், யோகராஜா (ஜேர்மனி), சத்தியதேவி(ஜேர்மனி),ஜெகதீஸ்வரன் (பிரதேசசபை உப அலுவலகம் - உரும்பிராய்), கோமதி ,செந்திகா, லிங்கராஜா (பிரதேசசபை- புத்தூர்),குமுதினி ஆகியோரின் அன்பு மாமனாரும், யசோதரன்(ஜேர்மனி),டயானி(ஜேர்மனி),கஜந்தா(ஜேர்மனி), கோசலா(ஜேர்மனி),திஷா (ஜேர்மனி), கர்ணதாஸ் (ஜேர்மனி),சிவதாஸ் (ஜேர்மனி), சுஜானா (ஜேர்மனி), அனித்தா, அஜிந்தாஸ், அஜிந்தா, அபிரா,ஜெகிந்தாஸ், சாருமதி, யசிந்தாஸ் ,தஜிந்தாஸ், ஜெசிந்தாஸ், நிசாந்தாஸ், அஸ்வினி, சுயானி, அகிந்தாஸ் ஆகியோரின் அன்புப் பேரனும், அட்சயா,அஜன்,ஆருஜன்,வினுசா ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 12.01.2012 வியாழக்கிழமை மாலை 4.00 மணியளவில் வாதரவத்தை யில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வாதரவத்தை இந்து மயா னத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:-
மனைவி,பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

வாதரவத்தை,
புத்தூர்.

(7276)

# உலகின் சிறந்த கால்பந்தாட்ட வீரராக லயனல் மெஸி மீண்டும் தெரிவு

2011ஆம் ஆண்டின் உலகின் சிறந்த கால் பந்தாட்ட வீரருக்கான பீபா தங்கப்பந்து அல்லது தங்க பலூன் விருதை ஆர்ஜென்டீன வீரர் லயனல் மெஸி வென்றுள்ளார்.

சுவிட்சர்லாந்தின் சூரிச் நகரில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற பீபா பலோன் டி ஓர் வைபவத்தின்போது லயனல் மெஸிக்கு இவ்விருது வழங்கப்பட்டது. சர்வதேச கால் பந்தாட்ட அணிகளின் பயிற்றுநர்கள், தலைவர்கள் மற்றும் ஊடகவியலாளர்களால் இவ்விருதுக்குரியவர்கள் தெரிவுசெய்யப்படு கின்றமை குறிப்பிடத்தக்கது.

24 வயதான லயனா் மெஸி, ஸ்பெயினின் பார்சிலோனா கழகத்திற்காகவும் விளையாடி வருகிறார். இம்முறை மெஸியுடன் மன்செஸ் டர் யுனைட்டட் கழகத்தில் விளையாடிய போர்த் துக்கல் வீரர் கிறிஸ்ரியானோ ரொனால்டோ, பார்சிலோனா கழகத்திற்காக விளையாடும் ஸ்பெயின் வீரர் ஸவி ஆகியோரையும் முந் திக்கொண்டு இவ்விருதை வென்றுள்ளார்.

மெஸிக்கு 47.88 சதவீத வாக்குகளும் ரொனால்டோவுக்கு 21.60 சதவீதவாக்கு களும் ஸவிக்கு 9.23 சதவீத வாக்குகளும் கிடைத்தன.

ஐரோப்பாவின் சிறந்த கால்பந்தாட்ட வீரருக்கான பலோன் டி ஓர் விருதும் உலகின் சிறந்த கால்பந்து வீரருக்கான பீபா விருதும் 2010ஆம் ஆண்டு முதல் ஒன்றிணைக்கப் பட்டு பீபா பலோன் டி ஓர் விருது வழங்கப்படு கின்றமை குறிப்பிடத்தக்கது. 2010ஆம் ஆண்டிலும் இவ்விருதை லயனல் மெஸி வென்றார்.



இவ் விருதுகள் ஒன்றிணைக்கப்படுவதற்கு முன் 2009ஆம் ஆண்டு வழங்கப்பட்ட பலோன் டி ஓர் விருதும் லயனல் மெஸிக்கு வழங்கப்பட்டது. எனவே இவ்விருதை 3 தட வைகள் வென்ற நான்கு வீரர்களில் ஒருவராக லயனல் மெஸி விளங்குகிறார்.

இதேவேளை இம்முறை உலகின் சிறந்த கால்பந்தாட்ட வீராங்கனைக்கான விருது உலக சம்பியனான ஜப்பானிய அணியின் தலைவி ஹொமாரே சாவாவுக்கு வழங்கப்பட்டது.

ஆண்கள் அணிகளின் சிறந்த பயிற்று நராக பார்சிலோனா கழகத்தின் ஜோசப் குவார் டியாலோவாவும் பெண்கள் அணிகளின் சிறந்த பயிற்றுநராக ஜப்பானிய தேசிய அணி பயிற்றுநர் நொரையோ சசாகியும் தெரிவாகினர்.

பீபா தலைவரின் சிறப்பு விருது மன்செஸ் ரர் யுனைட்டட் கழகத்தின் பயிற்றுநர் சேர் அலெக்ஸ் பேர்குசனுக்கு வழங்கப்பட்டது. வருடத்தின் சிறந்த கோலுக்கான பீபா புஸ் காஸ் விருதை சன்டோஸ் கழகத்தை சேர்ந்த 19 வயது பிரேசில் வீரரான நெய்மர் வென் றார். பிரேசில் சம்பியன்ஷிப் போட்டிகளில் பிள மிங்கோ கழகத்திற்கு எதிராக அடித்த கோலுக் காக இவ்விருது நெய்மருக்கு வழங்கப்பட்டது.

முறையான நடத்தைக்கான விருது ஜப் பானிய கால்பந்தாட்ட சங்கத்துக்கு வழங் கப்பட்டது. கொலம்பிய பாடகி ஷகிரா இந் நிகழ்வில் அதிதியாக கலந்துகொண்டார்.

## இந்திய அணிக்கு கடும் சவால்

உலகிலேயே அதிவேகப்பந்துவீச்சுக்கு சாதகமானதாக கருதப்படும் பேர்த் ஆடு களத்தில் இந்திய அணிக்கு கடும் சவால் காத் திருக்கிறது என்கிறார் அந்த மைதானத்தின் ஆடுகளவடிவமைப்பாளர்கமரூன்சுதர்லேண்ட்.

அவுஸ்திரேலியாவில் 4 டெஸ்ட் போட்டி கள் கொண்ட தொடரில் இந்திய அணி விளை யாடிவருகிறது. ஏற்கெனவே முதல் இரண்டு டெஸ்ட்களில் தோல்வியுற்று இந்திய அணி பின்தங்கியுள்ளது. இரு அணிகளுக்கு இடை யேயான மூன்றாவது டெஸ்ட் பேர்த்தில் நாளை மறுதினம் ஆரம்பமாகிறது.

இந்நிலையில் பேர்த் ஆடுகளத்தின் வடி வமைப்பாளர் சுதர்லேண்ட் செய்தியாளர் களிடம் கூறியதாவது, பேர்த் மைதான ஆடு களம் 2007-08 இல் இருந்ததைவிட கூடு தலாக 20 சதவீதம் பந்து எழுந்துவரும் வகை யில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

1970கள், 80களில் டென்னிஸ் லில்லி, ஜெப்தோம்சன் போன்ற பந்துவீச்சாளர்கள் இங்கு எதிரணிகளுக்கு சிம்ம சொப்பனமாக விளக்கியுள்ளனர். அப்போது எப்படி ஆடுகளம் இருந்ததோ, அதேபோன்று வடிவமைக்க முயற்சி மேற்கொண்டுள்ளோம். அதில் ஓரளவுக்கு வெற்றி யும் பெற்றுள்ளோம்.

இந்திய அணியின் பலவீனத்தை அவுஸ் திரேலியா சாதகமாக்கிக்கொள்ள வேண்டும். அடுத்த ஓரிரு நாட்களில் ஆடுகளத்தின் தன்மை யைப் பொறுத்து, அவுஸ்திரேலிய அணி 4 வேகப்பந்து வீச்சாளர்களுடன் களம் இறங்கு வதே புத்திசாலித்தனமாக இருக்கும் என்றார்.

## மின்சார சபைக்கு ரூ.121 இலட்சம் இலாபம்

(கொழும்பு)

இலங்கை மின்சாரசபை அதிகாரிகளின் திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் மூலமாக கடந்த டிசம்பரில் மட்டும் 121 இலட் சம் ரூபாய் இலாபம் ஈட்டப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

மின் பட்டியல் மாற்றம், சட்டவிரோத மின்சார பாவனை, சட்டவிரோதமான முறையில் மின்சாரம் பெற்றுக்கொண்டமை உள்ளிட்ட 106 குற்றச்சாட்டுக்கள் மூலமாக இத்தொகை அறவிடப்பட்டுள்ளதாக மின் சார சபை தெரிவித்துள்ளது.

இலங்கை மின்சார சபை நட்டத்தில் இயங் காது இலாபத்தை நோக்கி பயணிப்பதற்கு சட்டவிரோதமாக மின்சாரம் பெறுபவர்களை இனங்கண்டு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என மின்சக்தி அமைச்சு அறி வுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (பா)

## திருகோணமலை வளாகத்திற்கு தலைவர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு பல்கலைக்கழகத்திற்கு உட்பட்ட திருகோணமலை வளாகத்தின் தலைவராக வைத்திய கலாநிதி நாகலிங்கம் வர்ணகுலேந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சித்த வைத்திய பட்டதாரியான என்.வர்ண குலேந்திரன், இந்தியாவின் பாளயங்கோட்டை சித்த மருத்துவக் கல்லூரியில் சித்தவைத்தி யர் கலாநிதி பட்டம் பெற்றவராவார். (பா)

## பிளவை ஏற்படுத்துகிறார் சேவாக் இந்திய அணியில் கோஷ்டி மோதல்

(பேர்த்)

இந்திய அணியில் பிளவை ஏற்படுத்துகிறார் சேவாக். இரண்டு கோஷ்டிகளாக இந்திய வீரர் கள் செயல்படுகின்றனர் என அவுஸ்திரேலிய பத்திரிகை ஒன்று அதிர்ச்சி செய்தி வெளியிட் டுள்ளது.

அவுஸ்திரேலியா சென்றுள்ள இந்திய அணி நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதலிரண்டு டெஸ் டில் இந்திய அணி படுதோல்வி அடைந்தது. இதையடுத்து வீரர்கள் விரக்தியில் உள்ளனர்.

### ஆஸி. மீடியா சதி

இந்நிலையில் மனரீதியாக இந்திய அணி யில் குழப்பத்தை ஏற்படுத்த அவுஸ்திரேலியா முயற்சிக்கிறது. சேவாக், தோனிக்கு ஆதர வாக இரு கோஷ்டியாக வீரர்கள் செயல்படு வதாக தெரிவித்துள்ளது. இது உண்மையா அல்லது அவுஸ்திரேலிய மீடியாவின் சதியா என்பது போகப்போகத்தான் தெரியும்.

இது குறித்து அவுஸ்திரேலியாவில் இருந்து வெளியாகும் ஹெரல்ட்சேன் பத்திரிகை வெளியிட்ட செய்தியில்,

இந்திய அணியில் சேவாக் தான் வேறு பட்ட கருத்துக்களை தெரிவித்து வருகிறார். இவர் அணியில் பிளவை ஏற்படுத்த முயற் சிக்கிறார். இந்திய வீரர்கள் தங்களுக்குள் சண் டையிட்டு கொள்கின்றனர். அவர்களிடம் ஒற் றுமை காணப்படவில்லை.

### யார் தலைவர்?

இந்திய அணியை வழிநடத்திச் செல்வது யார் என்பதில் குழப்பம் காணப்படுகிறது. சிலர் துணைத்தலைவர் சேவாக்கிற்கு ஆதரவு தெரிவிக்கின்றனர். சமீப காலமாக தோனி சொதப்புகிறார். இவரிடம் போராடும் குணம் குறைந்து விட்டது. சிட்னி டெஸ்டின் இரண்டா வது இன்னிங்ஸில் வெறும் 2 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து ஏமாற்றியதாக சேவாக் ஆதர வாளர்கள் குற்றம்சாட்டுகின்றனர். இன்னொரு பிரிவினர் அணித்தலைவர்பதவியில் தோனியே நீடிக்க வேண்டுமென விரும்புகின்றனர்.

மூத்த, இளைய வீரர்கள் என்ற வேறுபாடும் காணப் படுகிறது. பொருளாதார ரீதியாக இவர்களுக்குள் பெரிய வித்தியாசம் உள்ளது. இந்திய அணி யின் முன்னாள் பயிற்சியாளர் கிரெக் சொப்பல் தனது சுயசரிதையில் குறிப்பிட்டுள்ளது போல அணியின் முக்கிய கூட்டங்களில் மூத்த வீரர்கள் முன் பேசு வதற்கு இளம் வீரர்கள் அஞ்சுகின்றனர். இவ்வாறு அந்த செய்தியில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

## சிறுவனை இனங்காண உதவுமாறு கோரிக்கை

(மட்டக்களப்பு)

15 வயது மதிக்கத் தக்க சிறுவன் ஒருவன் மட்டக்களப்பு நீதிமன்ற உத்தரவுப்படி சிறுவர்நன் நடத்தை பராமரிப்பு சேவைகள் திணைக்களத் தின் மட்டக்களப்பு மாவட்ட அலுவலகத்தில் கடந்த 5ஆம் திகதி ஒப்படைக்கப்பட்டுள்ளான்.

பஸ் ஒன்றில் களுவாஞ்சிக்குடி பிரதான வீதியில் வந்து இறங்கிய மேற்படி சிறுவன் அப்பிரதேசத்தில் நடமாடியபோது களுவாஞ் சிக்குடி பொலிஸார் அச்சிறுவனை கைது செய்து மட்டக்களப்பு நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளனர்.

தான் தொடர்பான எதுவித தவல்களையும் தெரிவிக்க முடியாதுள்ளதன் காரணமாக



சிறுவனை இனங்காண்பதன் தொடர்பில் ஊடகங்களில் விளம்பரப்படுத்த வேண்டிய அவசியம்குறித்து மாவட்ட நீதிபதியினால் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

இச் சிறுவன் பற்றிய தகவல்கள் தெரிந்த வர்கள் மட்டக்களப்பில் உள்ள சிறுவர் நன்நடத்தை பராமரிப்பு அலுவலகத் திற்கு 065 2222 142 எனும் தொலை பேசி இலக் கத்துடன் தொடர்பு கொண்டு அறியப்படுத்து மாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

## பிரபாவின் மெய்ப்பாதுகாவலருக்கு சட்ட உதவி வழங்க உத்தரவு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அமைப் பின் தலைவர் பிரபாகரனின் மெய்ப்பாது காவலர் எனக் கூறப்படும் தனபாலசிங்கம் லிங்கதாசனுக்கு சட்ட ஆலோசனையைப் பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகளை செய்து கொடுக்குமாறு கொழும்பு மேல் நீதி மன்றம் நேற்று உத்தரவிட்டது.

கொழும்பு மேல்நீதிமன்றத்தில் நேற்று காலை நீதிபதி சுனில் ராஜபக்ஷ முன்னிலை யில் அவர் ஆஜர்படுத்தப்பட்டு குற்றப்பத் திரிகை கையளிக்கப்பட்டது. சிங்களத்திலும் தமிழிலும் இந்தக் குற்றப்பத்திரிகை தயாரிக்கப் பட்டிருந்ததாக நீதிமன்ற தகவல்கள் தெரிவிக் கின்றன.

காலி மாவட்டத்தில் உள்ள பூசா தடுப்பு முகாமில் இருந்து கடுமையான பாதுகாப்பு டன் கொண்டு வரப்பட்ட லிங்கதாசன், குற்றப் பத்திரிகை கையளிக்கப்பட்ட உடனடியாகவே மீண்டும் பூசாவிற்கு கொண்டு செல்லப்பட்டார்.

கடந்த முப்பது மாத காலமாக பூசா தடுப்பு முகாமில் வைக்கப்பட்டு விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டுள்ள இவர் மீது எவ்வாறான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன என்பதை உடனடியாக அறியமுடியவில்லை.

2006 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 17ம் திகதி படைத்தரப்பினரி டம் சரணடையும் வரையில் விடுதலைப்புலி கள் அமைப்பின் தலைவருக்கு தனிப்பட்ட உதவியாளராகவும் மெய்ப்பாதுகாவலராக வும் லிங்கதாசன் பணியாற்றியதாக குற்றஞ்சாட் டப்பட்டுள்ளது.

இவருக்கான குற்றப்பத்திரிகையை கை யளித்து வழக்கு விசாரணைகளை பெப்ரவரி மாதம் 29ஆம் திகதிக்கு ஒத்திவைத்த நீத வான் இவருக்கு சட்ட உதவி பெற்றுக்கொள் வதற்கான ஏற்பாடுகளை செய்து கொடுக்கு மாறும் உத்தரவிட்டுள்ளார். (பா)

## மின் தடைப்படும்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இட மாற்றம் செய்யவேண்டியிருப்பதனால் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை மின் விநியோகம் தடைப்படும் என யாழ்.பிராந்திய மின்பொறியியலாளர் அறி வித்துள்ளார்.

இதில் இன்று புதன்கிழமை மற்றும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை ஆகிய தினங் களில் கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப் பாய், இருபாலை, முடமாவடிப்பகுதி, பாற் பண்ணைப்பகுதி, திருநெல்வேலி நகரம், மருத்துவபீட பிரதேசம், ஆடியபாதம் வீதி கொக்குவில் சந்திவரையான பிரதேசம், கல் வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்ம ராட்சி பிரதேசம், உரும்பிராய், ஊரெழு, பிர தேசத்தின் ஒரு பகுதி ஆகிய இடங்களிலும்,

நாளை வியாழக்கிழமை, எதிர்வரும் சனிக்கிழமை புன்னாலைக்கட்டுவன், அச் செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சி பிரதேசம், சுன்னா கம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன் துறை உயர் பாதுகாப்பு வலய பகுதி, மல்லாகம், தெல்லிப்பழை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான் ஆகிய இடங்களி லும் மின்விநியோகம் தடைப்படும் என அறி விக்கப்பட்டுள்ளது. (பா-11)




எதிர்காலத்தில் இலங்கை முகங்கொடுக்கும் தேசிய பாதுகாப்புக்கான சவால்கள் எனும் தொனிப் பொருளிலான கருத்தரங்கொன்று நேற்று செவ்வாய்க்கிழமை இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்றது. இதில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ சிறப்புரையாற்றுவதையும் கருத் தரங்கில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

## முதுகல்விமாணி கற்கைநெறி ஆய்வு அளிக்கை 23, 24 திகதிகளில்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீடத்தினால் நடத்தப்படும் கல்வி முதுமாணி 2010/11 (அணி VIII) கற்கைநெறி மாணவர்களுக்கான, ஆய்வு அளிக்கை (Research Presentation) பின்வரும் திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெறும்.

23.01.2012 - மு.ப.8.30 - பி.ப. 4.30

24.01.2012 - மு.ப. 8.30 - பி.ப 4.30

இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கு மாணவர்கள் முதுகல்விமாணி கற்கைநெறி இணைப்பாளர் கலாநிதி த. கலாமணி அவர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு உயர் பட்டப்படிப்புகள பீடாதிபதி பேராசிரியர் ச. சத்தியசீலன் கேட்டுள்ளார். (ந)

## இன அழிப்பு குற்றச்சாட்டு...

இதன்போது அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

எந்தவொரு சிவில் யுத்தத்திலும் பொதுமக்கள் இழப்புகள் ஏற்படும். அதை ஏற்றுக் கொள்ளவேண்டும். ஆனால், பொதுமக்களின் பூச்சிய இழப்புக் கொள்கையில் அரசாங்கம் தெளிவாக இருந்தது.

இக்கொள்கையின் காரணமாக யுத்தத்தின்போது பொதுமக்கள் இழப்பு குறைவாக இருந்தது. எந்த யுத்தத்திலும் குறிப்பாக மனித கேடயங்களாக பொதுமக்கள் பயன்படுத்தப்படும்போது இழப்புகள் ஏற்படும். பொதுமக்கள் இழப்பைக் குறைப்பதும் மனித உயிர்களைப் பாதுகாப்பதும் யுத்தத்தின் ஆரம்பம் முதல் இறுதிவரை பிரதான நோக்கமாக இருந்தது.

பொதுமக்கள் உயிரிழப்புகள் தொடர்பாக பல்வேறு குழுக்களினால் தெரிவிக்கப்படும் எண்ணிக்கைகள் ஆதாரமற்றவை.

சந்தேகம் தெரிவிக்கப்பட்ட பகுதிகளில் பொதுமக்கள் இழப்பு தொடர்பாக கணக்கெடுப்பு நடத்துவதற்கு நாம் பிரிவொன்றை நியமித்தோம். அக்கணக்கெடுப்பு முடிந்துவிட்டது. அவர்கள் இறுதி அறிக்கையை தயாரிக்கிறார்கள். அது விரைவில் வெளியிடப்படும்.

எனினும் இக்கணக்கெடுப்பில் இயற்கையாக இறந்தோர், தமிழீழ விடுதலைப் புலிகளினால் கொல்லப்பட்டோர், புலிகளினால் பலவந்தமாக படையில் சேர்க்கப்பட்டு கொல்லப்பட்டோர், புலிகளின் அங்கத்தவர்கள், விபத்துக்களினால் இறந்தவர்கள், நாட்டை விட்டு சட்டவிரோதமாக தப்பியோடியவர்கள் ஆகியோரின் எண்ணிக்கை இதில் உள்ளடக்கப்படவில்லை. ஏனைய எண்ணிக்கைக்கு மாத்திரமே இராணுவம் பொறுப்பேற்கமுடியுமென பாதுகாப்புச் அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

அத்துடன் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இராணுவ மயப்படுத்தப்பட்டுள்ளதாக சர்வதேச சமூகம் முன்வைத்துள்ள குற்றச்சாட்டு முற்றிலும் பொய்யானவை.

குறிப்பாக விடுதலைப் புலிகளுடனான போர் முடிபுக்கு வந்த பின்னர் வடக்கு, கிழக்கில் இருந்த பல படைமுகாம்கள் அகற்றப்பட்டுள்ளன.

நாட்டின் எந்தவொரு பகுதியிலும் இராணுவத்தை பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்துவதற்கு அரசாங்கத்திற்கு உரிமையுண்டு. இந்த அதிகாரம் உலகிலுள்ள அனைத்து நாடுகளுக்கும் உண்டு.

அவ்வாறுதான் இலங்கையின் அபிவிருத்திக்கும் பொதுமக்களின் பாதுகாப்பிற்குமாக இராணுவம் நிலை நிறுத்தப்பட்டுள்ளது என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

## மனித உரிமைகள்...

நிலை குறித்து தகவல் வெளியிடுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

ஜெனிவா மனிதவுரிமைப் பேரவையின் 19 வது கூட்டத்தொடர் எதிர்வரும் மார்ச் மாதம் நடுப்பகுதியில் நடைபெறவுள்ளது. பேரவையின் உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் இந்தக் கூட்டத் தொடரில் கலந்த கொள்வார்கள்.

இந்நிலையில் இந்த மாநாட்டில் அமெரிக்கா மற்றும் பிரித்தானியா உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகள் இலங்கை போர்க்குற்றங்கள் தொடர்பில் விசாரணைக்கு வலியுறுத்த திட்டமிட்டுள்ளன.

அத்துடன்நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் போர்க் குற்றங்கள் தொடர்பில் ஆராயப்படவில்லையென மேற்குலக நாடுகள் குற்றம் சுமத்தி வருகின்றன.

எனவே இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதேச சுயாதீன விசாரணை ஒன்றை மேற்கொள்ள ஜெனிவா மனிதவுரிமை மாநாட்டில் மேற்குலக நாடுகள் கோரிக்கை விடுக்கும்.

இந்நிலையிலேயே இலங்கை அரசு அந்த மாநாட்டில் மேற்குலக நாடுகளை எதிர்கொள்ளும் வகையில் முன்னேற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (பா)

## கூட்டமை...

மக்களின் தேவை எதுவோ அதற்கு முன்னுரிமை அளிக்கப்படும். அப்பகுதிகளில் விரைவான அபிவிருத்திகள் முன்னெடுக்கப்படும். அத்துடன் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது.

இதற்காக அனைத்துக் கட்சிகளும் உள்ளடங்கிய நாடாளுமன்ற தெரிவிற்குழுவை நியமித்து அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் அரசியல் தீர்வு யோசனையை தயாரிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

எனினும் அரசியல் தீர்வில் இந்த அரசாங்கத்திற்கு அக்கறையில்லை என சர்வதேச அளவில் பிரச்சாரங்களை மேற்கொள்ளும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் பாராளுமன்ற தெரிவிற்குழுவில் அங்கம்வகிப்பதற்கு முன்வரவில்லை. எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளிநாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டு எந்த தரப்பினருடனும் பேச்சுவார்த்தை நடத்தினாலும் தீர்வு என்று வரும் போது இலங்கை அரசுடன்தான் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென வெளிவிவகார பதில் அமைச்சர் நியோமல் தெரிவித்தார். (பா)

## வடக்கு கல்வி...

இலங்கை ஆசிரியர் சங்கம், இல்லாவிடில் இது தொடர்பில் தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் கருத்துத் தெரிவிக்கையில்,

வட மாகாண கல்வி நிர்வாகத்தை மாகாண ஆளுநர் தனது சொந்த விருப்பு வெறுப்புக்கு ஏற்ப முன்னெடுத்து வருகின்றார்.

இதனால் கல்வி அபிவிருத்தியில் பின்னடைவு ஏற்படக் கூடிய அவல நிலை தோன்றியுள்ளது. அதிகாரிகள் மற்றும் ஆசிரியர்கள் மனத் தாக்கத்துக்கு உள்ளாகித் தமது கடமையை இயல்பு நிலையில் மேற்கொள்ள முடியாத அவல நிலை தோன்றியுள்ளது.

இத்தகைய ஒரு நிர்வாகத் தலையீடும் அதிகாரத் துஷ்பிரயோகமும் வேறு எந்த மாகாண கல்வி நிர்வாகத்திலும் இல்லை. வட மாகாண ஆளுநரின் இத்தகைய அடாவடித்தனத்துக்கு புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட ஆசிரியர் தொழிற்சங்கவாதிகள் சிலரும் உயர் அதிகாரிகள் சிலரும் துணை போகின்றனர்.

ஆசிரியர் இடமாற்றங்கள் தேசிய இடமாற்றக் கொள்கைக்கு அமைவாகவும், மாகாணக்கல்வி அமைச்சின் தீர்மானத்திற்கு அமையவும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இதில் பாரபட்சத்துக்கு, சுய விருப்பு வெறுப்புக்கு இடம் இருக்கக் கூடாது. ஆசிரியர் இடமாற்ற விடயத்தில் பகுதித் தலைவர்களுக்கு விலக்களிக்க வேண்டும் என சில தொழிற்சங்கவாதிகள் கருத்துக் களை முன்வைக்கின்றனர்.

ஆசிரியர் சேவை, அதிபர் சேவை என்ற வகையில் தான் இடமாற்றம் மேற்கொள்ளப்படவேண்டும். பகுதித் தலைவர் சேவை என புதிய சேவை ஒன்றும் இல்லை. பதவி வழியாக ஆசிரியர்களே பகுதித் தலைவர்கள்.

வட மாகாண ஆளுநர் கடந்த வருடம் வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரைக் கட்டாய விடுப்பில் செல்லுமாறு பணித்தார். இந்த வருடம் வலயக் கல்விப் பணிப்பாளரை வலய இடமாற்றச் சபையில் இருந்து நீக்கியுள்ளார். இதில் ஆளுநர் தலையீட்டுக்கு இடமளிக்க முடியாது.

அதிகாரிகள் தவறுவிட்டால் அவர்கள் விட்ட தவறுகள் தொடர்பாக குறிப்பிட்டு விளக்கம் கோரப் படவேண்டும். அந்த விளக்கங்கள் எத்தகையது எனப் பரிசீலனை செய்யப்படவேண்டும். அதன் பின்பே நடவடிக்கை மேற்கொள்ளப் படவேண்டும். இதுவே நிர்வாக நடைமுறை.

வடமாகாண ஆளுநர் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மீது விதிக்கப்பட்டுள்ள பதவி நீக்க உத்தரவை இரத்துச் செய்து அவர்களின் செயற்பாடுகளுக்கு இடமளிக்க வேண்டும். இல்லாவிடில் இலங்கைஆசிரியர்சங்கம் தொழிற் சங்க நடவடிக்கையை மேற்கொள்ளும் என அவர் மேலும் தெரிவித் துள்ளார். (பா)

## வானை...

பொலிஸார், குறித்த வான் விற்பனைக்குட்படுத்தப்பட்ட நிலையில் இயக்கச்சிப் பகுதியில் நேற்று முன்தினம் அதனை மீட்டுள்ளனர்.

அத்துடன் வாகனக் கடத்தல்காரர்களிடமிருந்து 4 கைக் குண்டுகள், போலிப் பிஸ்டல் ஒன்று, ஆறு கைத் தொலைபேசிகள், 2 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஒரு முச்சக்கர வண்டி ஆகியவற்றையும் கைப்பற்றியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (பா)

## தெரிவுக் ...

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரச தரப்பு பத்துக்கும் அதிகமான தடவைகள் பேச்சுக்களை நடத்தியபோதும் அவர்களின் பிடிவாதப்போக்கினால் அவை வெற்றியளிக்கவில்லை. பேச்சுக்களை நடத்துவதன் பிரதான நோக்கம் அவை வெற்றியடைய வேண்டும் என்பதே.

எனவே நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் நடத்தப்படும் பேச்சுக்களின் மூலம் ஒரு சிறந்த இறுதித் தீர்வை காணமுடியும் என்ற நம்பிக்கையுடனேயே நாடாளுமன்ற தெரிவுக்குழுவை நியமிக்க அரசு தீர்மானித்துள்ளது.

ஏனைய தமிழ்க் கட்சிகளைப் போன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இதற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (பா)

நிரு ரீயுசன் சென்ரர்
கோண்டாவில்
வாழ்த்துகின்றோம்



எமது கல்வி நிறுவனத்தில் கலைப்பிரிவில் 2011 ஆண்டில் கல்வி கற்ற
செல்வி சிவாஜிகணேசன் சுகந்தினி
3A பெற்று நிறுவனத்துக்கு பெருமை தேடி தந்த மாணவியை பாராட்டுகின்றோம்.
நிர்வாகி
ஆசிரியர்கள்
மாணவர்கள்

மலிவு விலையில் BRANDED கணணிகள்

| IBM Desktop | IBM Tower | DELL Desktop |
|---|---|---|
| Intel P IV 2.4Ghz Pro<br>512 Mb Ram<br>40 Gb Hard Disk<br>CD ROM<br>Keyboard/ Mouse | Intel P IV 2.8Ghz Pro<br>512 Mb Ram<br>40 Gb Hard Disk<br>CD ROM<br>Keyboard/ Mouse | Intel P IV 2.8Ghz Pro<br>512 Mb Ram<br>40 Gb Hard Disk<br>CD ROM<br>Keyboard/ Mouse |
| Price 7,900.00 | Price 8,500.00 | Price 8,750.00 |
| **HP Tower** | **HP Tower** | **HP Tower** |
| Intel P IV Lga 3.0Ghz Pro<br>1 Gb DDR2 Ram<br>80 Gb Hard Disk<br>DVD ROM<br>Keyboard/ Mouse | Intel P IV Lga 3.2Ghz Pro<br>1 Gb DDR2 Ram<br>120 Gb Hard Disk<br>DVD ROM<br>Keyboard/ Mouse | Pentium D 2.8Ghz Pro<br>1 Gb DDR1 Ram<br>80 Gb Hard Disk<br>DVD ROM<br>Keyboard/ Mouse |
| Price 14,250.00 | Price 16,000.00 | Price 18,500.00 |

PC MATE SYSTEMS
Computer Sales & Repair
174/16. கோவில் வீதி. நல்லூர்.
(கைலாசபிள்ளையார் கோவில் அருகில்)
021 222 4692 / 077 053 0566

பொருளியற் கல்லூரி
யாழ்ப்பாணம். இணுவில்
பாரதி – சித்தங்கேணி
எஸ். கோகுலன்
பொருளியல்
A/L 2014
Day Class
ஆரம்பமாகிவிட்டது
நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.
மாணவர் கவனத்திற்கு :- யாழ் நகரில் எமக்கு வேறு நிறுவனம் இல்லை. நீங்கள் வரும்போது நாவலர் றோட்டில் அமைந்துள்ள பொருளியற் கல்லூரி என்று கேட்டு வாருங்கள்.

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.01.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.